890

# ஜகன் மோகினி

செப்டம்பர்
1954

JAGAN MOHINI

ESTD. 1923

அணா
நான்கு

4 - SEP



# கண்கொள்ளாக்காட்சி

## EXTRACTS FROM THE VISITORS' BOOK.

*6—8—54.*

"மஹாத்மாஜி ஸேவா சங்கத்தைச் சேர்ந்த சகோதரிகளின் கைத்திறனைக்கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன். கலைக்கும் கல்விக்கும் நிலைக்களனாக விளங்கும் திருவல்லிக்கேணியில் மகாத்மாவின் திருப்பெயருடன் விளங்கும் இம்மாதர் சங்கம் அற்புதமான தொண்டு செய்துவருகிறது. இச்சங்கத்துக்கு ராஜாஜி விஜயம் செய்ததின் பின்னர், சொந்தக் கட்டிடம் வாங்கியிருப்பதாக அறிந்தேன். ராஜாஜியின் ஆசிபெற்ற இச்சங்கம் அதிவிரைவில் வளர்ந்தோங்குமென்று நம்புகிறேன். இச்சங்கத்தைச் சேர்ந்த சகோதரிகள் அனைவரும் 'பொருந்து செல்வமும் கல்வியும் பூத்து' விளங்கவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்."

—ரா. கிருஷ்ணமூர்த்தி. (கல்கி)

"இச்சங்கம் என்றென்றும் மிகவும் பெரியதாகவும் நம் மாதர்களுக்குப் பரிபூர்ண சேவை செய்யுமாறும் இறைவன் அருள்புரிவாராக!"

—ஸ்ரீ. பார்த்தஸாரதி. (போலீஸ் கமிஷனர்)

*8—8—54.*

"Very happy to have been here. We wish this institution a bright future."

*Devadas Gandhi.*
*லக்ஷ்மி தேவதாஸ் காந்தி.*
*Tara Gandhi.*
*அ. சுப்பையா.*

*10—8—54.*

".........I am extremely happy to see the workmanship of the various articles prepared by the members of the association. They have taken a lot of interest and this involved very great labour. I wish the Sangam an ever increasing prosperity and may Lord Parthasarathy give them more and more strength".

*K. Venkatapathy Naidu.*

"I am very much impressed with the handicrafts show. Such shows really show our capacity to utilise our leisure for pleasure and profit'.

*Dr. G. Sri Ram.*

# ஸ்ரீஜெயந்தி சிந்தனைகள்

வை. மு. ஸ்ரீ.

✻

பகவான் ஒருவன் உண்டு என்கிற ஞானமேயில்லாத ஒரு கிழவன். அவன் ஒரு எழுத்தும் படித்ததில்லை; ஒரு பகவத் கதையும் கேட்டதில்லை. பத்தாவது வயது முதல் தயிர், மோர் விற்பனை செய்து ஜீவிப்பதையே தொழிலாகக் கொண்டவன். தம்மிடையே உல்வி லீலைகளைச் செய்தருளும் 'சிறிய இடைப் பையனை' கண்ணனைப் பரதெய்வம் என்று உணரும் ஞானமற்றவன்.

அவனது மருமகளோ இதற்கு நேர் எதிர்த்தட்டு! அவள் கண்ணனது திருமேனி அழகிலோ, குழலிசையிலோ மட்டும் ஈடுபட்டு, அவனைப் பரதேவதை என்று கருதியவளல்லள். அவனே தந்தை, தாய் முதலான ஸகலவித பந்துவென்றும், உண்ணும் சோறு, பருகு நீர், தின்னும் வெற்றிலை எல்லாமே கண்ணன் என்றும், அக்ஷயமான வைத்தமாநிதியும் அவனே என்றும் நிர்மலமான ஞானம் பிறந்தவள். ஆனால், குலதர்மப்படி, குடும்பத் தலைவனின் கட்டுதிட்டங்கட்கு அடங்கி நடப்பவள்.

சரத்கால பௌர்ணமி. கண்ணனின் தைவிகமான புல்லாங்குழலின் நாதம் செவியில் பட்டதும் கோபிகைகள் தங்களை மறந்து ஸ்ரீ க்ருஷ்ணனிடம் ஓடினார்கள். திரள் திரளாக வந்து கண்ணனைக் கண்டு வெட்கி, கவிழ்தலையிட்டு, வணங்கினர்; தூமலர் தூவித் தொழுதனர். அதன் பிறகு நடந்ததுதான் ராஸக்ரீடை என்னும் குரவைக் கூத்து.

மாமனாருடைய கட்டுதிட்டத்தை மீறிப் போகமாட்டாத சிந்தயந்தீ, (இது அவளுக்குக் காரணப்பெயரே—கண்ணனிடத்தே சிந்தையைச் செலுத்திய வனிதா ரத்தினம்) சரீரத்தை வீட்டிலே நிறுத்தி, மனதைக் கண்ணனிடத்தே நிலை நிறுத்தினள். கண்ணனிடத்தே நெஞ்சு பதிந்திருக்கையால் ஏற்பட்ட நிர்மல சுகத்தாலும், அவனைக் கிடைக்கப் பெறுமையாலுண்டான அளவற்ற துக்கத்தாலும், ஸகல புண்யபாபங்களும் கழியப் பெற்றாள். அவள் மனத்துக்கினிய கண்ணன் கண்முன்னே காட்சியளித்து, அவளுக்கு மோக்ஷமும் அளிக்கிறான். சிந்தயந்தி இவ்வாறு மோக்ஷமடைதலைச் சித்திரிப்பதே இவ்விதழின் மேலட்டைப் படம்.

சிந்தயந்தியின் க்ருஷ்ண பக்தியையும் அவளது மாமனாரின் அஜ்ஞானத்தையும் பற்றிச் சிந்திக்கும்போது, அவனைப்போன்ற மற்றோர் மூடக் கிழவன் முக்திபெற்ற சரித்திரம் நமக்கு நினைவுக்கு வருகின்றது. ததிபாண்டன், (இதுவும் காரணப்பெயரே—தயிர்ப் பானையை வைத்திருப்பவன்) தனக்கு மட்டுமின்றி, தனது தயிர்ச் சட்டிக்கும், தனது கிராமத்திலுள்ள இருபது மனைக்காரர்களுக்கும் மோக்ஷம் வேண்டிப் பெற்றான். தன்னுடைய அழகைக் காட்டி, பகவான், இந்த அஜ்ஞான கிழவனுக்கு தானாகவே வந்து உத்தம கதி அளித்தான. கிழவனும் முக்திலாபம் பெற்றான். சிந்தயந்தியின மாமனாரையும் திருத்திப்பணி கொண்டான் என்றும் ஊகிக்கலாமன்றோ!

✻

ஸ்ரீ ஜெயந்தி நன்னாளில் நமது சிந்தனை ஸ்ரீக்ருஷ்ண குணாநுபவத்தில் பலபடியாகச் செல்வது ஸஹஜமே. (1) ஆழ்வார்கள் அருளிச்செயல், (2) பண்டைச் சங்கத்தமிழ், (3) முகுந்தமாலை. (4) கீத கோவிந்தம், (5) க்ருஷ்ணகர்ணாம்ருதம், (6) கோபிகாகீதம், (7) ஸஹஸ்ரநாமம், (8) கீதா சாஸ்த்ரம்—முதலியவை கண்ணன் புகழைப் பாடியதை ஓரளவு அநுஸந்திக்க மனம் குதுகலம் கொள்கின்றது. ஷை எட்டுக்ரந்தங்களிலிருந்து துண்டு துணுக்குகளாய்த் தொடுத்த அஷ்டவித புஷ்ப கதம்பமாலையைக் கண்ணன் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றேன்.

## ஆழ்வார்கள் அருளிச்செயல்

[★ நாலாயிரப் பாசுர எண்.]

**பொய்கையாழ்வார்**—இவர் இயற்றியருளிய 100 பாசுரங்களில் சுமார் 20 கண்ணனுக்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் நான்கின் ஸாரத்தைக் குறிப்பிடுவோம் (2088)★ எல்லா உலகங்களும், எல்லா தேவதைகளும், அவரவரது கருமங்களும், சிறப்பும், யாவும் கண்ணன் படைத்த மயக்கு! அதாவது, இன்ன ஸ்தானத்திற்கு இன்னான் நிர்வாஹகன் என்று அமைத்துள்ளதும், ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரத்திற்கு இன்னார் அதிகாரி என்று ஏற்படுத்தியுள்ளதும் கடல்கடைந்த காரோதவண்ணன் படைத்த மயக்கேயன்றி வேறில்லை. (2092) எனது வாயானது கண்ணனைத் தவிர மற்றொன்றைப் புகழாது; என் கைகளும் வேறொருவனைத் தொழமாட்டா; என் கண்களும் மற்றெதையும் காணமாட்டா; கண்ணன் புகழன்றி என் காதுகள் வேறெதையும் கேட்கமாட்டா; (2100) இவ்வுலகத்தையெல்லாம் ப்ரளயம் கொள்ளாதபடி திருவயிற்றினுள்ளே வைத்து ஆலந்தளிரிலே சயனித்துக்கொண்ட செந்தாமரைக்கண்ணனே! உன்னுடன் நித்யஸம்பந்தம் பெற இந்தக்கருங்கடல்என்ன மாதவம் செய்ததோ!(2105) அவாப்த ஸமஸ்த காமன், ஸர்வஜ்ஞன், ஸர்வசக்தியுக்தன் என்று நிகரிலாப் புகழ் பெற்ற நீ, ஒரு குறையுள்ளவன்போலவும், அந்தக்குறையை நீக்கிக் கொள்ள வெண்ணெய்க் களவு செய்தவன்போலவும், அதற்காகக் கயிற்றினால் கட்டித் தண்டிக்கப்பட்டவன்போலவும், அந்தக் கட்டில் நின்று தப்புவதற்குச் சக்தியற்றவன்போலவும், கட்டையவிழ்க்கும் உபாயத்தை அறியாதவன்போலும் நடித்தாயே! இதென்ன ஆச்சரியம்!

**பூதத்தாழ்வார்**—இவர் இயற்றியருளிய 100 பாசுரங்களில் 22 கண்ணனைக் குறித்தவை. இந்த லீலாவிபூதியிலிருந்துகொண்டு உன் புகழைப் பாடுகிற பாக்யம் எனக்கு வாய்த்தாலும், அங்கு நித்ய விபூதியில் வந்து சேர்ந்து பூர்ணாநுபவம் பெறும்படி அருள வேண்டும். (2245). கண்ணா! இதிஹாஸ புராணங்களும் அவற்றின் ஆழ்பொருளும், உள்ளது உள்ளபடியே அறிந்து துதித்தால், அவையெல்லாம் உன் திருநாமங்களே! நீயே இதிஹாஸ புராண ஸ்ரீஸூக்தி வடிவமாக நிற்கிறாய்! உன்னை வந்தடைந்து, கண்டு, "ஹாவு ஹாவு ஹாவு; அஹமந்ந மஹமந்ந மஹமந்நம்; அஹமந்நாதோ ஹமந்நாதோ ஹமந்நாத:" என்று பரிபூர்ண சப்தங்களாலே

183183

அனுபவிக்கும்படி அருளவேணும். (2279) கண்ணா! நீ இடைய னாய் வந்து பிறந்து குடக்கூத்தாடியதால் ஏற்பட்ட ஆயாஸம் தீர என் இதயத்துள்ளே பொருந்தி அதனையே நித்ய வாஸஸ்தான மாகக் கொண்டாயே! அதுவும், நீ சிறு குழவியாயிருக்கையிலேயே ஸப்த லோகங்களையும் உன்னுள்ளே ஒடுங்கும்படி உட்கொண் டாயே—இதுவும், என்ன ஆச்சர்யம்! (2281) உன்னிடத்தில் அடி யேன் வைத்திருக்கிற அன்பானது என்னளவில் அடங்கி நிற்ப தன்று: நீயே அன்புக்கு உரியவன்.

**பேயாழ்வார்**—இவர் இயற்றியருளிய 100 பாசுரங்களில் 27 கண்ணனுக்கு. (2297) திருப்பாற்கடலில் நின்று தம் திருவுள்ளத் துக்கு பகவான் வந்துசேர்ந்தாராம்; வரும் வழியில் திருவல்லிக் கேணியில் தங்கி வந்தாராம்! மாடமாமயிலைத்திருவல்லிக்கேணியைச் சேர்ந்த இவ்வாழ்வார்க்கு இங்ஙனம் தோன்றுவது இயற்கையே. (2309) சேஷசாயியான பகவான் பஞ்சபாண்டவர்க்காகக் கடுமை யான பாரத யுத்தத்தை நடத்தியவன்; சிறுகுழந்தையாயிருக்கும் போது பூதனையை முடித்தவன்—அத்தகைய ஸ்வாமியானவன் யசோதையின் மத்துக்கு அஞ்சி நின்றானும்! இங்ஙனே சக்தியை யும் அசக்தியையும் மாறிமாறி அவன் வெளியிடுவது என்ன ஆச் சரியம்! (2314) ஆலிலையில் குழந்தை வடிவுடன் உலகங்களையெல் லாம் உண்டு சயனித்திருந்த என் ஸ்வாமிதான், கடல்கடைந்து தேவர்க்கு அமுதமளித்தவன். (2374) ஸர்வலோக பிதாவான பகவான், ஒருவர்க்கும் மகனல்லாத மாமேனி மாயன், வஸு தேவர்க்குப் பிள்ளையாய்த் தோன்றினனே, அவன் திருவடிகளையே பூர்த்தியாகச் சிந்தை செய்வாயாக!

**திருமழிசைப்பிரான்**—ஸ்ரீமந்நாராயண பரத்வத்தை நிலை நாட்ட இவர் இயற்றியருளிய நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் இரண்டிலும் இவர் கண்ணனுக்குப் பல பாசுரங்களைச் சமர்ப்பித்துள்ளார். கண்ணபிரான் அர்ஜுனனைநோக்கி அருளிச் செய்தபடியே இவர் தனது மனதைப் பார்த்துக் கூறுகிறார்: "ஸர்வேச்வரன் நமது விரோதியைப்போக்கி அடிமைகொள்வதாக வந்து புகுந்திருக்க, இனி நீ ஏதுக்காக துக்கஸாகரத்தில் அழுந்து கிறாய்?" என்று. (2284) 'ஆலந்தளிரில் பள்ளிகொண்ட பரதத்து வத்தை நானறிந்தவாறு யாரறிவார்?' என்று குதுகலிக்கிறார். (773) திருத்துழாய்மாலை யணிந்து, ஸ்ரீதேவி பூதேவியுடன் எழுந் தருளியிருக்கும் என் ஸ்வாமிதான் பண்டும், இன்றும், மேலும், ரக்ஷித்தருள ஏழுலகையும் ப்ரளயம் கொள்ளாதபடி அமுது செய்து, ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளினர். (785) ஸர்வ காரணபூதனான பரம்பொருளான நீ, இடையனாய்ப் பிறந்த மாயம் என்ன ஆச்சர்யம்! (792) மாய! உன் மாயம் முற்றும் மாயமே! உன் ஸ்வரூபத்தை ஆராய்ந்து அறியவல்லார் யார்?

**நம்மாழ்வார்**—நம்மாழ்வாரின் க்ருஷ்ண—ப்ரேமையை வர் ணிக்க வார்த்தைகள் அகப்படா. "ஒரு செவ்வாய் முந்திப் பிறந் திருந்தால் கண்ணனை ஸேவித்திருப்பேனே!" என்று ஏங்கியவ ரன்றோ இவர்! "எத்திறம் உரலினோடு இணைந்திருந்தேங்கிய

ளிவே!'' என்று சொல்லி ஆறுமாதம் மோகித்துக் கிடந்தவர் ஆழ்வார். இதுபோலவே மேலும் இருமுறை. இவரது ஸித்தாந்தம் கண்ணனே பரதெய்வம்: எல்லாம் கண்ணன்: எங்கும் கண்ணன்: (3713) தானே யுலகெல்லாம், தானே படைத்திடந்து, தானே யுண்டுமிழ்ந்து, தானேயாள்வானே!—என்பதுதான். (2584) எல்லா ஜீவராசிகளும், எல்லா உலகமும், ஸகல தத்துவமும் சிறிய தான திருவயிற்றின் ஒரு பக்கத்தில் கலசும்படியாக, ஒரு வஸ்துவும் வெளிப்படாதபடி எல்லாப் பொருள்களையும் உள்ளேயிட்டு மறைத்து ஒரு ஆலந்தளிரிலே பள்ளிகொண்ட எம்பெருமாமாயனையல்லது வேறு தெய்வத்தைப் பரதத்துவமாகக் கொள்வேனு? (2854) அவனுடைய பரத்வத்தையும் ஸௌலப்யத்தையும் பாடியாடி, என்னையும் என்னைச் சேர்ந்தவர்களையும் உயர்த்திக்கொண்டேன். (5240) நித்ய ஸூரிகளும் அறியமுடியாத உனது மாயச் செயல்களை எம்மால் அறியப்போமோ! பசுக்களை மேய்க்கவல்ல பெருமானே! (3293) எனக்கு ஸகல விதமான தாரக, போஷக, போக்யங்களும் கண்ணன் எம்பெருமானே. எல்லாம் கண்ணன், எங்கும் கண்ணன். (3496) அடியேன் உன் திருவடியைக் காணும்படியாக ஒருநாள்கூட வந்து தோன்றமாட்டேனென்கிருயே! (3597) ஒன்று போல் தோற்றுகிற புறமதங்களான ஆறு சமயங்களுக்கும் தடையாகி நிற்பவனும், எல்லாப் பொருளுக்கும் உயிர்நிலையாய்க்கொண்டு முதல்வனு யிருப்பவனும், காரணனு யிருப்பவனுமான கண்ணபிரானைக் கண்டுகொண்டேன்.

**மதுரகவியாழ்வார்**—இவர் இயற்றியருளியது ஒரே ஒரு பதிகம்தான்: கண்ணிநுண் சிறுத்தாம்பு என்று தொடங்கும் அந்தாதி. பகவானைப் பாடுவதைவிட ஆழ்வாருடைய புகழைப் பாடுவதே தமக்குப் பரம போக்யம் என்று கூறும் இவர், ப்ரபந்தத்தை ஆரம்பிப்பதே க்ருஷ்ண - ஸௌலப்யத்துடன்தான்! நம்மாழ்வார் எல்லா அவதாரங்களிற் காட்டிலும் க்ருஷ்ணுவதாரத்தில், அதிலும் வெண்ணெய் களவு கண்டு, ஆய்ச்சியர் தாம்பினுல் உரலினிடை ஆப்புண்டிருந்த ஸௌலப்யத்தில் மிகவும் ஈடுபட்டிருந்தது குறித்தே, மதுர கவிகளும் அந்த சரித்திரத்துடனே ஆரம்பிக்கிருர். (937) 'கட்டுண்ட மாயன்' என்னுமல், 'கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன்'' என்கிருர், அவன் தன்னைக் கட்டுதற்குத் தானே இசைந்ததை வெளிபடுத்த. (939) 'ஆழ்வாருடைய உகப்புக்காக எம்பெருமானையும் ஸேவிப்பேன்; ஆழ்வார்க்கு உரிய ஆளாய் அடியேன் பெற்ற நன்மை இது!' என்கிருர் மேலும்.

**குலசேகராழ்வார்**—இவர் இயற்றியருளிய 105 பாசுரங்களில் இரண்டு பதிகங்கள் கண்ணனுக்கு இடுகிருர். இளமை தங்கிய இடைப் பெண்கள் கண்ணபிரானை ஆசைப்பட்டு ராத்ரியின் நடுச்சாமத்திலே ப்ரணய கலஹம் பண்ணி ஈடுபட்டுச் சொன்னதாக ஒரு பதிகமும், கண்ணபிரானுடைய எல்லையில்லா அற்புத சேஷ்டிதங்களை காணப்பெருத தேவகியின் புலம்பல் வார்த்தை ஒரு பதிகமுமாகப் பாடியுள்ளார் (715) யசோதையே பரமானந்தத்தின் எல்லையைச் காணப்பெற்ருள் என்று தேவகி புலம்புகிருள்: தயிரையும் வெண்ணெயையும் களவாடி உண்ணும் கண்ணனை

யசோதை தடியும் தாம்பும்கொண்டு அடிக்கவருவாள் ; துடைப்பதாக நினைத்து வாய்நிறைய சுற்றிலும் பூசிக்கொள்வன் கண்ணன்; யசோதை அடிக்க வர, அஞ்சிறைப்போல் நோக்குவன் ; வாய் துடிக்க விக்கி விக்கி அழுவன்; அஞ்ஜலி பண்ணுவன்! இந்த லீலையையெல்லாம் நேரில் கண்டு அனுபவித்து, தொல்லை இன்பத்து இறுதி கண்டவள் யசோதை, என்கிருர் ஆழ்வார், தேவகி வாயிலாக. (725) முன்பு மஹாப்ரளயம் வந்தபோது ஓர் ஆலந்தளிரிலே குழந்தை வடிவங்கொண்டு உலகெலாம் திருவயிற்றில் வைத்து நோக்கினவன் என் கணபுரத்துக் கருமணி.

**பெரியாழ்வார்**—கண்ணனுடைய லீலைகளைப்பலபடியாகவும் அனுபவித்தவர் இவ்வாழ்வார்தான். அதனுல் இவர் இயற்றியருளிய 473 பாசுரங்களில் 279 கண்ணனுக்கே; பெரியாழ்வார் திருமொழிக்கு பாகவத தசமஸ்கந்ரஸாரம் என்றே பெயர்வரலாயிற்று. யசோதையாகவும், ஆயர் மங்கையராகவும், நாயகியாகவும், அவளது தாயாகவும், இப்படியாக பல ஸ்வரூபங்களுடன் பாசுரமிடுகிருர் கண்ணனுக்கு. திருக்கோட்டியூரே ஆய்ப்பாடியாகவும்; நம்பியே கண்ணபிரானுகவும் இவர் கண்ணுக்குக் காட்சியளிக்க, ஸ்ரீ ஜெயந்தியைக் கொண்டாடுகிருர், கவிதா-பக்தி-ப்ரவாகத்துடன், வேறு எந்த ஆழ்வாரும்கொண்டாடாத விதத்தில். ஸ்ரீஜெயந்திக் கொண்டாட்டம், பாதாதிகேசவர்ணனை, தாலாட்டு, அம்புலிப் பருவம்,செங்கீரைப்பருவம்,சப்பாணிப்பருவம்,தளர்நடைப்பருவம், அச்சோப்பருவம், முதுகைத்தழுவும் பருவம், பூச்சிகாட்டுதல், பாலுண்ணுதல், காதுகுத்தல், நீராட்டம், குழல்வாருதல், கோல் கொடுத்தல், பூச்சூட்டல், காப்பிடல்,பாலக்ரீடை, ஆய்ச்சியர்முறைபாடு, அம்மம் தருவது, கன்றின்பின் கண்ணன்,...கோவர்த்தனகிரி, விருத்தாந்தம், குழலூதற்சிறப்பு, தாய்ப்பாசுரம், உந்திபறத்தல்,... இப்படியாக, பலபலவிஷயங்களைக்குறித்துப்பாடுகிருர்.ஒருபிள்ளைத் தமிழ் ப்ரபந்தம்போல. அவ்வவ்வனுபவத்தாலுண்டான ப்ரீதியதிசயத்தை வெளிப்படுத்துகிருர். (19) ஆயர் புத்திரனல்லன், அருந்தெய்வம் என்று கண்டு மகிழ்ந்தனர். (40) மண்ணும் மலையும் கடலும் உலகேழும் மகிழ்ந்து உண்ணும் பிள்ளை, இவன். (162) என்னையும் எங்கள் குடியிலுள்ளாரெல்லாரையும் அடிமைகொண்ட தலைவன் கண்ணன். (188) குடக்கூத்தாடிப் பெண்களை மயக்கவல்லவன் எங்கள் தலைவன். (243) விடியற்காலத்திலேயே எழுப்பி, அழகிய திருவடிகள் நோவெடுக்கும்படியாகக் காட்டிலே கன்றின்பின் போக்கினேனே, என்ன பாவமே!—என்று யசோதையின் பேச்சு. (275) இது ஓர் அற்புதம் கேளீர்! திருமால் தூய வாயில் குழல் ஓசை வழியே, கோவலர் சிறுமியர் குதுகலிப்ப, உடல் உள் அவிழ்ந்து, எங்கும் காவலுங்கடந்து, கயிறு மாலை ஆகி, வந்து கவிழ்ந்து நின்றனரே. (281) குழலோசையின் இனிய ரஸத்தை செவியின் உள் நாக்கிலே உட்கொண்டு மனங்களித்து, ஒரு க்ஷணமும் விடமாட்டாது தொடர்ந்தனர்.

**ஸ்ரீ ஆண்டாள்**—திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்று இரு ப்ரபந்தங்களின் மூலம் கண்ணனென்னும் கருந்தெய்வத்தினிடத்தில் தனக்குள்ள பக்திக் காதலை வெளியிடுகிருள். அவனைக்

காதலனுகக் கருதி, பிரிவாற்ருமை தாங்காது, கோபிகையரைப் போல் நோன்பு நோற்று உயிர் தரிப்பவளாகி, அவ்வளவிலும் கண்ணன் வராததால், அவனுடன் தன்னைக் கூட்டிவிடும்படிக் காமனை வேண்டுகிருள்; தூதுவிடுகிருள்; கண்ணனிருக்குமிடத்திற்குத் தன்னைக் கொண்டுவிடும்படிக் கெஞ்சுகிருள்; கண்ணன் ஸம்பந்தப்பட்ட வஸ்துக்களைக் கொண்டாவது தன் வாட்டத்தைத் தணிக்கச் சொல்லுகிருள்; கடைசியில் பிருந்தாவனத்தில் தானே கண்ணனைக் கண்டதாகச் சொல்லி, குதுகலிக்கிருள். (498) பிரானே! நீ எங்களுக்குப் பிறந்து காட்டவும் வேண்டா, வளர்ந்து காட்டவும் வேண்டா, கொன்று காட்டவும் வேண்டா; உன்னைக் காட்டினுல்போதும்! பறையென்ற ஒரு வ்யாஜத்தையிட்டு உன்னையே காண் பெற நினையா நின்ரோம்! (502) எங்களுக்கு உத்தேசியம் உன் திருவடிகளில் நித்ய கைங்கர்யம் பண்ணுகைதான். வேறு ஒருவகையான விருப்பமும் எமக்குப் பிறவா வண்ணம் நீயே அருள்புரிய வேணும். இடைக் குலத்தில் நீ வந்து பிறந்ததற்கு எங்களிடம் கைங்கர்யம் கொள்வதே பலனுகும், கோவிந்தா!

**தொண்டரடிப்பொடியாழ்வார்**... திருப்பள்ளியெழுச்சியும் திருமாலையும் இயற்றியுள்ள இவ்வாழ்வார், திருவரங்கம் பெரிய கோவில் பெரிய பெருமாளையன்றி வேருருவரை யறியாதவராயிருந்தும், அவரையே கண்ணனுகப் பாவித்துச் சில பாசுரங்கள் இயற்றியுள்ளார். (880) கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை பணிமினீரே! கன்றுகளின் கூட்டங்களை மிக்க உகப்போடு மேய்த்து வந்த எம்பெருமானின் திருவடிகள் தவிரச் சரணமடைய வேருென்றில்லை. (900) கண்ணபிரானே! வேறு புகலற்று உன்னையே கூப்பிடா நின்றேன். உன்னையொழிய வேறு ரக்ஷகர்யாரிருக்கிருர்? (906) செந்தாமரைக்கண்ணு! என் ஆவியே! அமுதே! எப்போதும் உன்னைத் தவிர மற்றையோரை வணங்கமாட்டேன், நினைக்கவும்மாட்டேன் (916) கண்ணனே அரங்கம் மால் ஆகப்பள்ளி கொண்டிருக்கிருன்; அவனுக்கே இத்திருமாலையைச் சாற்றினேன்.

**திருப்பாணுழ்வார்**—இவர் பாடியது அமலனுதிபிரான் என்ற ஒரே பதிகம். இவரும் தொண்டரடிப்பொடி யாழ்வாரைப்போல் அரங்கனையே கண்ணனுகப் பாடியவர். (935) ஆலமாமரத்தினிலை மேல் ஒரு பாலகனுய் ஞாலமேழும் உண்டு கண்வளர்ந்த பரதத்துவமே இப்போது தென்னரங்கத்தில் கண்வளர்ந்தருள்கிறது என்று சுட்டிக்காட்டுகிருர். (956) காளமேகம்போன்ற வடிவையுடையவனும், ஆயர் சிறுவனுய் வெண்ணெயுண்ட வாயையுடையவனும், என் நெஞ்சைக் கொள்ளைகொண்டவனும், நித்ய ஸூரிகளுக்குத் தலைவனும், திருவரங்கத்தில் கண்வளர்பவனுமான என் அமுதினைக்—கண்ணனைக்—கண்ட கண்கள் மற்ருென்றினைக் காணுவே.

**திருமங்கையாழ்வார்**—இவர் இயற்றியருளியது 1137 பாசுரங்கள். ராமாவதாரத்தைவிட க்ருஷ்ணுவதாரத்திலே இவருக்கு அதிக ஈடுபாடு என்பது தெளிவு. "பரதத்துவமான நீ, எல்லா அவதாரங்களையுமெடுத்து, கடைசியில் ஆயர்குலத்தின் அணி விளக்காகத்தோன்றி, ஆய்ச்சிகளின் தாம்பால் கட்டுண்டாயே, இது

போன்ற ஆச்சரியம் வேறெங்கும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை!" என்று வியக்கிருர். (1888) கடைந்த வெண்ணெயைக் கள்ளவழியால் வாரி விழுங்கின கண்ணனை யசோதை கண்ணி நுண்சிறுத் தாம்பினால் கட்டிப் புடைக்க, சற்றே ஏங்கி இருந்து, பிறகு அவளால் சீராட்டப்பட்டு, அவன் அதன் பின் விளையாட்டிலே இழிகின்றும்! யசோதை மட்டுமா அவனைக் கட்டுகிருள்? (1890) தாவி மோர்ப்பானைகளை உருட்டிவிட்டு, தயிரையும் நெய்யையும் விழுங்கி விட்டு, ஒன்றுமறியாத குழந்தைபோலத் தவழும் இப்பெரியவரை இடைச்சிகள் தாம்பால் கட்டவும் கைகளால் அடிக்கவும் அதனுல் தழும்பேறிக் கிடக்கிறது இந்த தாமோதரன் உடம்பெலாம். (2019) இச் சிறியானைச் செங்கண்நெடியானைச் சிந்தித்து அறியாதார் என்றும் அறியாதாரே! கலியன் ஒலிமாலை இதே இசையுடன் ரீங்காரம் செய்கின்றது. (2673) சிறிய திருமடல் இதற்கு ஒரு முக்ய உதாரணம், இத்தியாதி.

**ஆழ்வார்கள் வாழி! அருளிச்செயல் வாழி! பூமண்டலம் முழுதும் உஜ்ஜீவிக்குமாறு வேதங்களுக்குச் சோ அவர்கள் அருளிச்செய்த ஸ்ரீ ஸூக்திகள் வாழ்க! இந்த உலகில் இருள் நீங்க, ஆழ்வார்கள் ஆய்ந்துரைத்த கற்கலைகள் வாழி!**

❋

## 2. பழந்தமிழ் நூல்களில் கண்ணபிரான்

பழந்தமிழ் நூல்களான தொல்காப்பியம், திருக்குறள், பரிபாடல், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, புறப்பொருள் வெண்பாமாலை, முத்தொள்ளாயிரம் முதலியவை அங்கங்கே கண்ணனையும் நப்பின்னையையும் குறிப்பிட்டுள்ளன. காடு சேர்ந்த நிலமான முல்லைக்குத் திருமாலை அதிதெய்வமாக முதற்கண் வைத்துச் சிறப்பிக்கின்றன. "மாயோன் மேய காடுறையுலகம்" ஆன முல்லை நிலமக்களை ஆயர், ஆய்ச்சியர் என்று கூறுவர் தமிழர். முல்லைத் தெய்வம் மாயோனே; திருமாலின் பூர்ணவதாரம் கண்ணபிரானே—என்று திருமால் வழிபாடு தமிழகத்தில் வேரூன்றியிருந்தது. இதனையே 1103வது குறள் விளக்குகிறது: "தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல், தாமரைக் கண்ணுனுலகு?" கண்ணபிரான் நிகழ்த்தியதாகத் தமிழர்களிடையே வழங்கி வந்த சரித்திரங்கள் பலபல. அவற்றுள் அவன் குருந்தொசித்தது, குரவைக் கூத்தாடியது, குடக்கூத்தாடினது முதலியவை முக்யமானவை.

சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையில் பின்வரும் அடிகள் நமது கவனத்திற்குரியன:—

**"வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே!
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றால் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய்! மாயமோ மருட்கைத்தே!"**

“அறுபொருள் இவனென்றே அமரர்கணம் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே உலகடைய உண்டனையே!
உண்டவாய் களவினால் உறிவெண்ணெய் உண்டவாய்
வண்டுழாய் மாலையாய்! மாயமோ மருட்கைத்தே!”

கண்ணனின் தேவிமார்களுள் தமிழ்நூல்களில் மிகவும் சிறப்பித்துக் கூறப்பட்டவள் நப்பின்னைப் பிராட்டியே. வடநாட்டினர் அந்த ஸ்தானத்தில் ராதாதேவியைக் குறிப்பிடுகின்றனர்.

## 3. ஸ்ரீ முகுந்தமாலை.

கண்ணனை மணிவண்ணனாகச் சித்திரிக்கிறார் குலசேகரப் பெருமாள் 22-வது ச்லோகத்தில். பக்தர்களின் ஆபத்துக்களாகிற பாம்புகளை நடுங்கி மாளச்செய்யும் கருடமணி. மூவுலகையும் ரக்ஷிப்பதற்காக ஏற்பட்ட ரக்ஷாமணி. கோபிகைகளின் கண்களாகிற சாதக பக்ஷிகளுக்கு மேகமணி. அழகுக்கு முத்ராமணி. ருக்மிணிக்கு அலங்காரமணி. தேவர்களுக்குச் சிரோபூஷணமணி. கோபாலர்களுக்குச் சூடாமணி—இத்தகைய மணிவண்ணனான கண்ணனே நமக்கு எல்லா நன்மையும் அருளவேணும்.

33-வது ச்லோகத்தில் மேலும் கூறுகிறார்: இவ்வுலகம் கண்ணபிரானிடமிருந்தே உண்டாயிற்று. ஆகையால் அவனுக்கு நான் தாஸனாயிருக்கிறேன். இந்த ஸமஸ்த ப்ரபஞ்சமும் அவனிடமே நிலைபெற்றிருப்பதால், அவனே அடியேனை ரக்ஷித்தருள வேண்டும்.

## 4. கீதகோவிந்தம்.

பக்தியோகத்திற்குப் பிரமாண க்ரந்தமாகிய ஜயதேவருடைய அஷ்டபதி நாடெங்கும் நியமத்துடன் பாடப்படுகிறது. ராதை, க்ருஷ்ணன், ஸகி என்ற மூவரே கீதகோவிந்தத்தின் கதாபாத்திரங்கள். கண்ணபிரான்தான் பரமாத்மா, ராதை ஜீவன், ஸகி ஆசார்யன். பகவான் ஒருவனே புருஷன், மற்றனைவரும் ஸ்த்ரீகளே; பகவானின் பார்யைகளே. பார்யைக்கு பர்த்தாவிடம் அன்பும் கௌரவமும் கலந்திருப்பதேபோல், ஜீவனுக்கு பகவானிடத்தில் அன்பும் கௌரவமும் பிறக்கவேண்டும். அதீத பக்தியை விளக்கும் இந்தக் காவியம் மேலான ஞானசாஸ்திரமாகும்.

ஆழ்வார்களின் அருளிச்செயலில் காணப்படும் நாயக-நாயகி பாவம், முக்கியமாக, நாச்சியார் திருமொழி, நம்மாழ்வாரின் திருவிருத்தம் முதலியவற்றிலுள்ள உட்கருத்தையே கீதகோவிந்தம் பிரதிபலிக்கின்றதென்றால் மிகையாகாது.

தவிர, கண்ணபிரானே பரமபுருஷன்—ஸ்ரீமந்நாராயணன்—த்ரிமூர்த்திகளுக்கும் மூலப்பொருளான பரம்பொருள்—என்பதை ஜீவனும் ஆசார்யனும் உணர்ந்திருப்பதாகக் காட்டுகிறார்.

ராதா கல்யாணத்தைக் குறிப்பிடும் 24-வது அஷ்டபதியைப் பாடினால் கீதகோவிந்தம் முழுவதும் பாடிய பலனுண்டு என்பது பஜனை ஸம்ப்ரதாயம்.

## 5. க்ருஷ்ண கர்ணாம்ருதம்.

பகவான் கண்ணன் ஸ்வப்நத்திலே தோன்றி, தன் வடிவழகையும் லீலைகளையும் காட்டுகிறார், கெட்டுத் திருந்திய ஒரு பக்தனுக்கு; அவரும் அவற்றை நன்கு அனுபவித்து, தம அனுபவத்தை க்ருஷ்ணகர்ணாம்ருதம் என்ற க்ரந்தத்தின் மூலம் வெளியிடுகிறார். கவிக்கு லீலாசுகர் என்பது காரணப் பெயர். ஸௌந்தர்யத்துக்கு எல்லையிலமான விலக்ஷணமான கண்ணன் திருமேனி அவரைத் திருத்திப் பணிகொண்டது.

ஒரு ச்லோகத்தின் பொருளைப் பார்ப்போம்: "கண்ணபிரானைத் தொழுவதற்காக வாஹனமேறித் தேவர்கள் வருகின்றனர். குமரனுடைய மயில் கண்ணனது மயிலிறகைப்பார்த்து இங்கொரு மயில் உளது என்று கருதி தோகையைவிரித்து ஆடிக் களித்தது. பரமசிவனுடைய ரிஷபம் கண்ணனுடைய பசுக்களைக் கண்டு காமுற்றது. இந்திரனுடைய ஐராவதம் கண்ணனின் கம்பீர நடையைக் கற்கமுயன்றது. இப்படி அனைவரும் வந்து பணிகின்ற கண்ணனையும் ஸர்வாபீஷ்டத்தையுமளிக்கின்ற பிருந்தாவனத்துக் கற்பகவிருக்ஷத்தின் தோப்பையும் வணங்குகின்றேன்".

விதுரனுடைய அன்பளிப்பான அன்னத்திலும், பக்தியுடன் ரிஷிபத்னிகள் அளித்த அன்னத்திலும் என்ன அன்பு வைத்தாயோ, அதனையே இந்தக் கர்ணாம்ருதத்திலும் வைத்தருள்வாயாக! என்று வேண்டி, முடிக்கிறார்.

## 6. கோபிகாகீதம்

ஸ்ரீபாகவதம் தசமஸ்கந்தம் 31-வது அத்யாயத்தில் கோபிகாகீதம் கூறப்படுகிறது: கோபிகைகள், கண்ணன் தங்களிடம் காட்டும் ப்ரேமைக்குத் தங்கள் அழகே காரணம் என்று கர்வங்கொண்டதைக் கண்ட கண்ணன, அந்த மதத்தைப்போக்கி அருள்புரியக் கருதி மறைந்தான். அவனை எங்கும் காணாமல் வாடி, கோபிகைகள் அவனை நேரில் வரவழைப்பதற்காக அவனது கல்யாணகுணங்களைக் கானம் செய்ததுதான் கோபிகாகீதம். இதில் ஒரு ச்லோகத்தைப் பார்ப்போம்: "எங்கள் பந்துவான கண்ணா! உன் அவதாரமானது இந்தகோகுலத்திலும்வனத்திலுமுள்ளவர்களின் ஸகல பாபங்களையும் போக்கக்கூடியது. ஸகல ஜகத்திற்கும் மிகவும் மங்களகரமானது. ஆகையால் உன்னிடம் பற்றுள்ள மனமுள்ளவர்களான எங்களது இதய ரோகத்தைப் போக்கும் ஔஷதம் எதுவோ, அதனைக் கொஞ்சமாயினும் கொடுத்தருளிக் காக்கவேண்டும்.

## 7. ஸஹஸ்ரநாமம்.

வியாஸபகவான் திருமாலின் ஸஹஸ்ரநாமங்களுள் 105 நாமங்களை க்ருஷ்ணாவதார ஸம்பந்தமாக இயற்றியிருப்பினும், ஆயிரம் நாமத்துக்கும் க்ருஷ்ணனே தேவதை என்று பீஷ்மரே சொல்லியிருக்கிறார். அதன் பலச்ருதியிலும் முடிவிலும் வாஸுதேவனே கொண்டாடப்படுகிறான். மேலும், ஸகல சராசரங்களும் வாஸுதேவனிடத்திலேயே அடங்கியிருக்க, அனைத்தும் அவரது சரீரமேயென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஸகல உலகங்களிலுமுள்ள ஜீவர்களும் அவருள் அடங்கி வசிப்பதால்தான் அவர் வாஸுதேவரெனப் பெயர் பெற்றார்.

## 8. கீதாசாஸ்திரம்.

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன், பரமகாருணிகனுகையாலே, ஸகல மனுஷ்ய நயனங்களுக்கும் விஷயமாகப் பூமியில் அவதரித்து, அசுரர்களை நிரஸித்து, பக்தர்களை ஆட்கொண்டு, அர்ஜுனனை யுத்தத்தில் உத்ஸாகம் கொள்ளச் செய்வது என்ற வ்யாஜத்தைக் கொண்டு,(மோக்ஷஸாதனமாக வேதாந்தத்தில் சொல்லப்பட்டதும் கர்மயோக ஞானயோகங்களை அங்கமாக உடையதுமான) பக்தி யோகத்தை லோகோஜ்ஜீவனர்த்தமாக வெளியிட்டருளினன். பகவத்ப்ராப்திக்கு ஸாதனமான அவதார ரஹஸ்யஞானத்தையும் குறிப்பிட்டான்: (4-9) ''திவ்யமான என்ஜன்மத்தையும் கர்மத்தையும் (கல்யாண குணங்களையும் சேஷ்டிதங்களையும்) உள்ளபடியே எவன் அறிகிருனே, அவன் தேகத்தைவிட்டு என்னை அடைகிருன்; மீண்டும் பிறப்பதில்லை.'' அதாவது—என்னை ஆச்ரயிக்கவொட்டாமல் விரோதிக்கிற ஸகலபாபங்களும் நசித்து, இந்த ஜென்மத்திலேயே என்னை ஆச்ரயித்து, என்னையே விரும்பி, என்னையே நினைத்திருந்து, என்னையே அடைகிருன்—என்பது பாஷ்யம்.சரமோபாயமாகக் கண்ணன் உபதேசித்ததாவது:(18-66)

''கர்மயோகம் ஞானயோகம் பக்தியோகம் என்கிற மோக்ஷ ஸாதனங்களாகிற எல்லாத் தருமங்களையும் என்னுடைய ஆராதன ரூபமாக மிகுந்த ப்ரீதியோடு உன் அதிகாரத்துக்குத் தக்கப்படி செய்துகொண்டே, பலனையும் கர்த்ருத்வத்தையும்விட்டு, ஆராத்ய ஸ்வரூபனுன என்னையே பலனுகவும் உபாயமாகவும் நினைக்கக் கடவாய். செய்யத் தகாததைச் செய்கையும் செய்யத் தக்கதைச் செய்யாமையுமான ஸகல பாபங்களினின்றும் உன்னை நான் விடுவிக்கின்றேன். சோகியாதே !''

''பரமரஹஸ்யமான இவ்வர்த்தத்தை இச்சையில்லாதவனுக்குச் சொல்லக்கூடாது. இதை யாவனெருவன் என் பக்தர்களிடத்தில் வ்யாக்யானிக்கிருனே அவன் என்னிடத்தில் மிகுந்த பக்தியைச் செய்து, என்னையே யடையவான்: இது நிச்சயம்''

மாயன் அன்று ஐவர் தெய்வத் தேரினில் செப்பிய கீதையின் செம்மைப் பொருள் தெரியப் பாரினில் சொன்ன பாஷ்யகாரரைப் பணிந்து உய்வோம்.

❋

க்ருஷ்ணபக்தியின் சிகரமான சிந்தயந்தியுடன் ஆரம்பித்த ஸ்ரீ ஜெயந்தி சிந்தனையை பக்த மீராவுடன் முடிப்போம். கோகுலத்தில் ஜனித்தவரனைவரும் முன்பு தெய்வலோகத்தவர்களும், தண்டகாரண்யரிஷிகளுமேயாவர் என்பதை நோக்கும்போதும், கோதைப்பிராட்டி பூமிதேவியே என்பதை உணரும்போதும், சாதாரண ராஜகுடும்பப் பெண்மணியான மீராவின் நிகரற்ற க்ருஷ்ணபக்தி அதிசயிதமானது என்பது புலப்படும். திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும் தமிழகத்தே பொதுமக்களிடையே பரவியிருப்பதைவிட, வட இந்தியாவில் மீராபஜன் அனைவரிடையேயும் அதிகமாய்ப் பரவியுள்ளது ப்ரஸித்தம்.

''கண்ணன் கழலிணை, நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம், திண்ணம் நாரணமே.''

# காளிதாசர் கனவு

## 6. ருது ரங்கம்

(கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பிறகு காளிதாசர் தான் இயற்றிய காவ்யங்களின் லக்ஷியங்களையும், ரசங்களையும்பற்றிக் கூறத்தொடங்கினார்.

"நான் முன்கூறியபடி முதல்முதலாக எழுதிய காவ்யம் "ருது சம்ஹாரம்". அதை நான் இயற்றியதற்கு என்னுடைய அளவற்ற தேசபக்திதான் காரணம். நம்முடைய பாரதநாடு, ஆறு ருதுக்களும் தவறாமல் காலத்தில் வந்து, நாட்டைச் செழித்த நாடாகவும், வாழ்க்கை வசதிகள் நிறைந்த நாடாகவும், அழகு மிகுந்த நாடாகவும் செய்கின்றன...என்று வர்ணிக்க என்முயற்சி. அதை என் அன்புதேவதை சந்திரகலைக்கு அர்ப்பணம் செய்தேன். அது தான் என்னுடைய முதல் நூலானதால் கட்டுக்கடங்காத கற்பனைகளையும், சொல்லழகின் மோகத்தையும் அதில் நிரம்பக்காணலாம். பழகப்பழகத்தான் கவிகள் குறைந்த சொற்களால், நிறைந்த எண்ணங்களைக் கூறும் ஆற்றலுடையவர்களாகிறார்கள். அந்த காவ்யத்தில் நான் இயற்கையழகுகளையும், அவ்வக்காலங்களுக்கேற்ற வாழ்க்கை முறைகளையும் வர்ணிக்கத் துணிந்தேன்.

முதல் சர்க்கம் முதுவேனில் காலத்தை வர்ணிக்கின்றது;

"ப்ரசண்ட ஸூர்ய: ஸ்ப்ருஹணீய சந்த்ரமா:
ஸதாவகா்க க்ஷதவாரி ஸஞ்சய: |
தினாந்தரம்யோடப்யுபசாந்த மன்மதோ
நிதாக காலோயமுபாகத: ப்ரியே ||"

(அன்புள்ளவளே! முதுவேனிற் காலம் வந்துவிட்டது. அக்காலத்தில் கதிரவன் மிகவும் வெப்பமுள்ள கிரணங்களை வீசுகின்றான். எல்லோரும் சந்திரனையே வேண்டி வரவேற்கின்றனர். குளிர்ந்த தண்ணீரில் மூழ்குகின்றனர். ஒவ்வொரு நாளிலும் மாலைப்பொழுது வெகு அழகாக இருக்கின்றது. அமைதியுடன் கூடியகாதல் விளங்குகின்றது).

இரவில் வெண்ணிலா ஒளிவீசுகின்றது. ஜலயந்திரங்கள் நீரைத் தெளிப்பதால் வீடுகளில் வெப்பம் தணிந்துவிடுகின்றது. அழகிய ரத்தினங்களையும் சந்தனப்பூச்சுகளையும் அணிந்து மக்கள் மகிழ்கின்றார்கள். மணம் கமழ்ந்த அழகு நிறைந்த மேல்மாடிகளில் காதலியின் மூச்சால் அசைவுற்றிருக்கும் மதுவையும் காதல் இன்பத்தையளிக்கும் இசையையும் காதலர்கள் நுகர்கின்றார்கள். பட்டாடைகளையும் ஒட்டியாணங்களையும் அரையில் அணிந்து ஆரங்கள் ஆபரணங்கள் சந்தனப் பூச்சுகளுடன் விளங்கும் தனங்களாலும் அகில் மணம்நிறைந்த கூந்தலாலும் பெண்கள் காதலர்களுடைய உள்ளத்தின் வெப்பத்தைத் தணிக்கின்றார்கள். நூபுரத்தை அணிந்தவைகளும் செம்பஞ்சுக் குழம்பால் அலங்கரிக்கப்பட்டவைகளும் அன்னப்பறவையின் ஒலிபோல் ஒலிக்கும் பொன்னடிகளுடன் பெண்கள் அழகாக நடந்து வருவதைக்கண்டு

ஆண்மக்கள் காதல்கொள்கிறார்கள். சந்தனம்பூசி பனிபோன்ற வெண்மையான ஆரங்களை அணிந்த தனங்களாலும் பொன் ஒட்டியாணம் பூண்ட இடையாலும் எந்த மனம் மோகமடையாமல் இருக்கமுடியும்? வியர்வையால் வருந்தி கனமான ஆடைகளை நீக்கி இலேசான நுண்ணிய ஆடைகளை இளம் பெண்கள் அணிந்துகொள்கின்றார்கள். விசிறிகளில் சந்தனங்கலந்த நீரைத் தெளித்து விசிறுவதாலும் ஆரங்கள் பூண்ட தனங்களால் தழுவுதலாலும் வீணையின் மதுர இசையாலும் உறங்கிய காமன் எழுப்பப்படுகிறான். மேல்மாடிகளில் வெண்ணிலாவில் சுகமாகத் தூங்கும் பெண்களின் முகத்தழகைக் கண்டு வெட்கிச் சந்திரன் காலையில் ஒளிமழுங்கி வெளுத்துப் போகின்றான்.

பெருங்காற்றால் புழுதி பறக்கின்றது. கதிரவன் வெப்பத்தால் உலகம் தவிக்கின்றது. காதலியின் பிரிவால் வருந்தும் காதலர் கதிரவனுடைய உஷ்ண கிரணங்களைக் கண்ணெடுத்துப் பார்க்கக் கூடமுடியாது. கானலைக் கண்டு நீரெனக் கருதி வெய்யிலால் வரண்ட நாவுடன் வரட்சியால் மான்கள் அதை நோக்கி ஓடு கின்றன. விளையாட்டுகளாலும் கடைக்கண் பார்வைகளாலும் தங்களுடைய ஒளியுடன் விளங்கும் மாலைப்பொழுதில் பெண்கள் மனதைக் கொள்ளைகொள்கிறார்கள். மேலே வெப்பந் தாங்க முடியாமல் இருப்பதாலும் கீழே தரை சுடுவதாலும் பாம்பு தன் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு தன்னிடம் பகையுள்ள மயிலிருக்குமிடத்தைக்கூட நாடி அதன் நிழலில் அமர்கின்றது. நிழலில் இருக்கும் பாம்பை மயில் ஒன்றும் செய்வதில்லை. வரட்சியால் வேகமற்று வாயைத் திறந்து பெருமூச்சுவிட்டுக்கொண்டு நாக்கை நீட்டியாட்டிக்கொண்டு நெருங்கிவரும் யானைகளைக்கூட தொந்தரவு செய்வதில்லை. யானைகளும் தண்ணீருக்காக அலைந்து ஏங்கி வெப்பத்தைத் தாங்கமுடியாமல் சிங்கத்தைக் கண்டு அச்சங் கொள்வதில்லை. குறைந்த புல்லுடனும் வற்றின சேற்றுடனும் கூடிய குட்டையை வெயிலுக்குப் பயந்த பன்றி பூமிக்குள் போக விரும்புவதுபோல் தோண்டுகின்றது. வெப்பம் நிறைந்த குட்டையிலிருந்து அக்கரையேறி தவளை பாம்பின் படத்தின் நிழலில் அமர்கின்றது. பாம்பு பிளப்புள்ள தன் நாக்கால் காற்றை நாடி வரட்சிமிகுதியால் தன் நிழலிலமரும் தவளையைக் கொல்வதில்லை.

தாமரைத் தண்டுகள் பிடுங்கப்பட்டு மீன்கள் இறந்து யானைகள் தண்ணீரில் இறங்கிக் குளிக்கப் போராடுவதால் குளம் சேறாகின்றது. நுரையுடன் கூடிய வாயைத் திறந்துகொண்டு எருமைகள் தண்ணீருக்காக அலைகின்றன. காட்டுத் தீயால் எரியும் மரங்கள் நிறைந்த காடு அச்சத்தை விளைவிக்கின்றது. இலையற்ற மரங்களில் பறவைகள் தவிக்கின்றன. குரங்குகள் மலைக்குகைகளில் பதுங்குகின்றன. தீயால் எரியும் மூங்கில்கள் படீரென்று வெடிக்கின்றன. தீ உலர்ந்த இலைகளுள்ள மரத்திலிருந்து மரத்துக்குத் தாவுகின்றது. இயற்கைப் பகையுள்ள பிராணிகள் பகை நீங்கித் தீயைக் கண்டு அஞ்சி ஆற்றை நோக்கி ஓடுகின்றன.

நீ சென்று தாமரைக் குளத்திலிருந்து குளிர்ந்த நீரைக் கொண்டுவந்து அதில் மணமுள்ள பாதிரிப்பூக்களைப் போட்டு அந்நீரில் மூழ்கி வெண்ணிலாவில் மேல்மாடியில் அழகிய பெண்களுடைய ஆடல் பாடலைக்கண்டு கேட்டு இன்பமாக வாழவேணும்.

" வ்ருச்சிகம் "

# காரியஸித்தி

என்னுடைய ஆபீஸில் எனக்கு ஒருமாத லீவும் கொடுத்து, போய்வர ரயில் சார்ஜும் கொடுத்து, எங்கேயாவது ஊருக்குப் போய்வரும்படிச் சொன்னார்கள். இதை நான் என் பெற்றோரிடமும் மனைவியிடமும் தெரிவித்தேன்.

பெற்றோர்கள் திவ்ய தேச யாத்திரைக்குப் போகவேண்டும் என்றார்கள். மனைவியோ, தன்னுடைய பிறந்தகத்திற்கும், தங்கை, அக்கா, தமயன் முதலியவர்கள் இருக்கும் ஊர்களுக்குத்தான் போகவேண்டும் என்று ஆர்ப்பரித்தாள். எனக்கோ இந்த சாக்கில் என் மகளுக்கு நல்ல வரனைத் தேடும் உபயோகமான ஊர்களுக்கு—அதாவது காலேஜிகள் உள்ள ஊர்களுக்குப்—போகவேண்டும் என்ற ஆசை. மூன்றுபேரும் மூன்றுவிதம் பிடிவாதம் செய்ததில் லீவில் இரண்டு மூன்று நாட்கள் கழிந்துவிட்டன.

பிடிவாதம் ஒருவருக்காவது குறையவில்லை. யோசித்து யோசித்து என் மூளையே குழம்பிவிடும்போலாகியதால்... திருவுள ச் சீட்டுப் போட்டுப்பார்த்துவிடுவது...என்று முடிவுசெய்து, அப்படியே போட்டு, என் கடைசிகுட்டியை எடுக்கச்சொன்னேன். அது ஒரே மட்டாக மூன்று சீட்டையும் எடுத்துவிட்டது! இதைக் கண்டு எல்லோரும் கடகடவென்று சிரிக்கும்போது வாசலில் தடதடவென்ற சத்தம் கேட்டது. வியப்புடன் திரும்பிப்பார்த்தோம். என்ன ஆச்சரியம்! என் அத்தையும் அத்திம்பேரும் பதரிகாச்ரம யாத்திரை சென்று திரும்பியவர்கள் நேரே எங்கள் வீட்டிற்கேகங்கா தீர்த்தகுடமும் ப்ரஸாதமுமாக வந்திறங்கினார்கள்.

அடுத்த கால்மணிக்குள் என் மனைவியின் அண்ணாவும் அவன் சம்சாரமும் குடும்பசகிதம் வந்தார்கள்!...பின்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் என் அக்காவும் அத்திம்பேரும் வந்தார்கள்!... கல்யாணவீட்டிற்கு வருவதுபோல் இத்தனைபேர்களும் சொல்லி வைத்ததுபோல் எப்படி வந்தார்கள் என்று வியப்புற்றேன்.

என் அத்தை யாத்திரைமார்க்கமாகவே வந்ததில் என்பெற்றோர்களின் ஆசை தீர்ந்துவிட்டது. என் மைத்துனன் தனது உறவினர் வீட்டுக் கல்யாணத்திற்காக வந்ததில் மனைவியின் குறை தீர்ந்தது. என் தமக்கை தன் மகனுக்கு என் பெண்ணைக் கேட்பதற்காகவே வந்ததால் என் மனக்குறையும் தீர்ந்துவிட்டது. இதை உத்தேசித்துத்தான் பகவான் மூன்று சீட்டையும் என் கடைக்குட்டியால் எடுக்கச்செய்துவிட்டார் என்று பூரித்தேன்.

மறுநாளே ஆபீஸுக்கும் போய்விட்டேன். காரியங்கள் தான் ஸித்தியாகிவிட்டதே!

# திருவாய்மொழி:

ராகம் | பந்துவராளி

பல்

லகு — அ — த்ரு || லகு — அ — த்ரு ||

1.

ஸ்ா ஸ்ா — ஸ் நி — தா தா || பா பா — ப ம — க ம ம ரி ||
மா . . — லை . — . நண் || ணித் . . — தொ — ழு . . . ||
ஸ் ரி ஸ் நி — ஸ் ரி — ஸ்நி தா || ரிஸ் நித — ப ம — ஷை ||
மா . . — லை . — . . நண் || ணித் . . — தொ — ||
ஸ்ா ஸ்ரி — ஸ் நி — தா தா || பா ப த — ப ம — க ம ம ரி ||
கா . . — லை . — . . . . . || மா . . — லை . — . . . ||
ஸ் ரி ஸ் நி — த நி -ஸ்ாரிஸ்ஸ்நி தா || த த ப ம — க ம —பா தபமகரீ ||
கா . . — லை — ... ... . . || மா . . — லை . — ... ... . . ||

அநு

பா த ப — தா — தா தா || ஸ்ா நித — நீ — நீ நீ ||
வே . . — லை — . . . || மோ . — தும் — . . ||
ஷை — ஷை — ஷை || தாரிஸ்ஸ்நி தா- ஷை — ஷை ||
|| மோ . . . . . — . . — ||
ஷை || ஷை ||

ரீ க ரி — ரீ — ஸ்ா ஸ்ா || ஸ் நி ஸ் ரி — ஸ் நி — தா தா ||
ஆ . . — லின் — . . . . || மே . . . — லா — . . ல ||

2. சர

கா கா — கா — கா கா || க ா மா — கா — ரீ கா ||
கள் ள — வி — ழு . ம் || ம ல — ரிட் — டு ||
; ஸ ரி — ஸ ா — நீ நீ || ஸ ா ரி — கா — ரீ க ா ||
ந ன் — னி — சே || ரு ம் — வ — யல் சூழ் ||
பா தா — ப ம — ப த த த || ஸ நி தா — நீ — நீ நீ ||
வெ ள் — . . . — ளி . . || யே ய ய் ந் — த — . . ||
ரீ க ரி — ஸ் ா — ஸ் ா ஸ் ா || ஸ்நிஸ ரி — ஸ் நி — தா தா ||
உ ள் — ளி — . . . || நா. . . — ளு ம் — . . தொ ||

3. மத்யமகால

ஸ ா ; — ரீ — ,கா ம || கா , — மா — ;பா ம ||
ம ா — னை — நோக்கி || ம — டப் — . பின்னை ||
ஸ் ா ரீ — ஸ் ா — , , , நி || தா நீ — தா — , , ப ம ||
வ ா — ட ா — . . ம || ல ரி — ட்டு — . . நீர் ||
பாதபாத— ஸ் நி — தா || ஸ் ரீ ஸ — , நி — தபத நி ||
வானையுந்து-மதிள்— சூ ழ் || தி ரு க் —கண்ண-- பு ர ம் ||

# கீர்த்தனை

ஏ. ராஜம்மாள்.

தாளம்: சாபு

## லவி

| | |
|---|---|
| லகு — அ — த்ரு ‖ | லகு — அ — த்ரு ‖ |
| கா மா — தா — பா பா ‖ | பா பா — பா — தா நீ ‖ |
| தெழு — மி — ஞே ‖ | . . — . — திரு ‖ |
| ஷை — ஷை — ஷை ‖ | ; ம ப — த ப — தா தா ‖ |
| | வி . — ஊ — கெட ‖ |
| க ம ப ம — கரி — ஸா ஸா ‖ | த த ப ம — க ம — ப த நீ ‖ |
| க ம . — ல . — . . . ‖ | ம . ல . — ரிடு — டு . நீர் ‖ |
| ஷை — ஷை — ஷை ‖ | ஷை — ஷை — ஷை ‖ |
| ‖ | ஸ்ா ‖ |
| | மா ‖ |

## பல்லவி

| | |
|---|---|
| ஸ்ா ரீ — ஸ்ா — ஸ்ா ஸ்ா ‖ | ஸ்ா ஸ்ா — ஸ்ா — ஸ்ா ஸ்ா ‖ |
| மதிள் — சூழ் — . . ‖ | . . — . — . . ‖ |
| ஷை — ஷை — ஷை ‖ | ஸாரிஸ்நீநீ—நீஸநி — த த ப ம ‖ |
| . — . — ‖ | . . . . . — . . . — . . . ‖ |
| ஷை — ஷை — ஸ்ா ஸ் நி ‖ | ஸ்ா ரீ — கா — ரீ கா ‖ |
| — . . திரு ‖ | கண்ண — பு — ரத்து ‖ |
| நி ஸ் ரி க — ரிஸ் — நி த த ரி ‖ | ஸ் நி த நி — த ப — ம ப த நி ‖ |
| ம . . ர் —ந்தான்— அ . ‖ | டி . . யி — ஊ — களே . ‖ |
| | ஸ்ா ‖ |
| | மா ‖ |

## ணம்

| | |
|---|---|
| க ம பா — பா — பா ப த ‖ | ப ம க ரி — ரீ — ம க ரி ஸ ‖ |
| நீ . . . — ர் — . . . இ ‖ | றை — ஞ் — சு மின் ‖ |
| கா கா — மா — மா பா ‖ | பா பா — ப ம — தா தா ‖ |
| . கி — டங் — கி ன் ‖ | . . . — . . — பு டை ‖ |
| ஸ்ா ரீ — ஸ்ா — ஸ்ா ஸ்நி ‖ | ஸ்ா ரீ — கா — ரீ கா ‖ |
| ம தி ள் — சூ ழ் — . ..திருக் ‖ | கண்ண — பு — ர ம் ‖ |
| நி ஸ் ரி க — ரி ஸ — நி த த ரி ‖ | ஸ்நி த ரி — த ப — ம க ரி ஸ ‖ |
| ழு . . . . — தெ — ழு . . மி ‖ | ஞேதொ — ண் ட — ரே . . ‖ |

## சாஹித்யம்

| | |
|---|---|
| பா ; — தா — , ப தா ‖ | ஸ்ா நி த — நீ — ; ஸ்ா ‖ |
| த ன் — கேள் — வ ஊ ‖ | தே . . — . . . — . ஊ ‖ |
| கா மா — கா — ' . , க ‖ | க ம ப த — நீ — த ப மா ‖ |
| . . . — . . — . . . இ ‖ | றை . . — ஞ் சு — மி ன் ‖ |
| ஸ்ா , ரி — ஸ்நி — த ப த நி ‖ | ஸ் நீ த — ப ம — ப த நீ ‖ |
| தா ன ந — யந்த—பெருமான் ‖ | சர ணு — . . . — கு மே ‖ |

# வாழ்க்கையில் ஒரு சம்பவம்.

நான் சொல்லப்போகும் விஷயத்தை நானே நம்பமுடியாமல் திகைத்தேன்!...இன்னமும் திகைக்கிறேன் என்றால் இதைப் படிக்கும் நீங்கள் நம்பினாலும்சரி, நம்பாவிடினும் சரி!...நம்பத்தகாத விஷயம் வாழ்க்கையில் நடப்பதை எல்லோரும் அறியவேண்டும் என்பதுதான் எனது ஆசை. ஜகன்மோகினி பத்திரிகை இத்தகைய சிறந்தமுறையில் இடங்கொடுப்பதுவும் சந்தோஷப்படக்கூடிய விஷயம்.

இந்தக்காலம்போலல்லாமல் அந்தக் காலத்தில் நடக்கிறபடி எனக்கு 9 வயதில் கல்யாணமாகிவிட்டது. என் கணவருக்கு 17 வயது. அவர் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவார். எனது 15-வது வயதில் என்னைப் புக்ககத்திற்குக் கொண்டுவிட்டார்கள். எத்தகைய சண்டையோ, பூசலோ, ஏசலோ, ஏதுமின்றி என் வாழ்நாள் சந்தோஷமாகத்தான் நடந்துவந்தது. எங்கப்பா பெரிய சம்ஸாரி; எனக்குப் பிறகு 9 குழந்தைகளைப் பெற்றுவிட்ட அவர்களுக்கு மனநிம்மதியோ, முழுவயிறு சாப்பாடோ கண்டு வருஷக்கணக்கில் ஆகிவிட்டது. அவர்களுடைய சந்தோஷத்திற்கும் சம்பத்திற்கும் என் தங்கைகளும் தம்பிகளுந்தான் ஆஸ்தி. மக்களைப்பெற்ற சந்தோஷத்தில் பட்டினியைப் பொறுக்கமுடியுமா? கஞ்சிக்குக்கூட உதவாமலிருந்த இரண்டு காணி நிலத்தைவிற்று என் தங்கையொருத்திக்கு விவாகம் செய்தார்! சீர் போதவில்லை மரியாதை இல்லை...தீபாவளிக்குப் புக்ககத்துக்காரர்கள் எல்லோருக்கும் ஜவுளிவாங்கவில்லை...என்று ஏதேதோ சாக்குகளைச் சொல்லி என் தங்கையை இரண்டு வருஷத்திற்குள் என் பிறந்தகத்திற்கே அனுப்பிவிட்டார்கள், அந்தப் படுபாவிகள்! அதோடா நிறுத்தினார்கள். அந்த மாப்பிள்ளை என்கிற மடையனுக்கு இரண்டாவது விவாகத்தையும் செய்துவிட்டார்கள்! இந்த அவமானத்தைத் தாங்காமல் என் பெற்றோர் குன்றிப்போய்ச் சாகாமலேயே செத்த பிணமாகிவிட்டார்கள். வாழாவெட்டியான தங்கை ஒரு நாள் குளத்தில் மிதந்து தன் கஷ்டத்திற்கு முடிவுகண்டுவிட்டு, பெற்றோருக்கும் குடும்பத்திற்கும் ஆறாத்துயரத்தை உண்டாக்கி விட்டாள். இந்த நிலைமையில் எனக்கும் மூன்று குழந்தைகள் பிறந்துவிட்டன. மாதம் 5 ரூபாயாவது தகப்பனாருக்கு அனுப்ப முடியாத நிலைமையில் என் குடும்பம் பெருத்துவிட்டது.

என் தங்கைக்கு 19 வயதாகிவிட்டது. இந்தக் காலத்தைப் போல் அந்தக் காலத்தில் 30 வயது பெண்களை வளர்க்கும் தைரியம் கிடையாது. 19 வயதாகி விட்டதே!...அவமானமும், ஏதோ குற்றம் செய்துவிட்டது போன்ற உணர்ச்சியும்கொண்டு என் பெற்றோர்கள் துடித்தார்கள். கல்யாணமாகிய பிறகு வாழா வெட்டி என்கிற பட்டத்தைப் பெற்ற பரிபவத்தினால் உயிரை விட்டாள் ஒரு தங்கை. தன்னால் குடும்பத்திற்கே ஆபத்து வந்துவிடும் என்கிற பயத்தினால் மற்றொரு தங்கை உயிரை விட்டு விடுவாள்போல் தோன்றிவிட்டது! அவளுக்காவது ஒரு ஏழைப் பரிசாரகப் பையனைத் தேடி மணம் செய்துவைக்க நான் எத்தனையோ ப்ரயத்தனம் செய்தேன்.

எனக்குள்ள நகைகள் மொத்தம் 5 சவரன்கூட இல்லை. அக் காலத்தில் 15 ரூபாய்தான் சவரன். அதைவிற்ருல் என்ன புரண்டு விடும்! பார்த்தேன். நானே என் மண்டையைக் குழப்பிக்கொண்டு யோசித்து ஒரு மகத்தான த்யாக முடிவுக்கு வந்தேன். முன்னறி தெய்வங்களாகிய என் பெற்ருேர்களுக்கு உதவி செய்யும்பொருட்டு என் கணவர் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சிக் கூத்தாடினேன். என் புக்ககத்துக்காரர்களேயும் சமாதானம் செய்து சரிப்படுத்தி னேன். என் அத்தையின் மகன் கல்யாண வயதில் இருந்தும் ஏழை நிலைமையைக்கண்டு இரங்காமல் அத்தை ஆகாயத்தைப் பார்த்த தால் என் மனம் துணிந்துவிட்டது. என் கணவருக்கே என் தங்கையை நானே மனந்துணிந்து கல்யாணத்தைச் செய்து என் த்யாகத்தைக் காட்டினேன்! (அப்போது அதுசட்டவிரோதமல்ல.)

இதைக் கண்டு அப்போது அந்த க்ராமமே வியப்புற்றது!... அந்த தங்கைக்குப் பிறகு மூன்றும் வரிசையாகப் பிள்ளைகளா கையால் பெண்ணுக்குக் கல்யாண விபத்து நேரவில்லை. அதற் குள் காலம் மாறிவிட்டது. பெண்களுடைய முன்னேற்றத்திற்கு வழியும் பிறந்து தைரியமும் உண்டாகிவிட்டது. கடைசி தங்கை களைத் தைரியமாகப் படிக்கவைத்தோம். அவர்கள் படித்துப் பள்ளிக்கூட வாத்யார்களாகி, குடும்பத்தைக் காக்க முற்பட்டு விட்டார்கள். இப்போதும் நானும் என் தங்கையும் சந்தோஷ மாகத்தானிருக்கிருேம்.

என்கணவர் ரிடையர்டு ஆகிவிட்டார். என் மகளையே என் தம் பிக்குக்கொடுத்து மணம்செய்து வைத்தேன். என் த்யாகத்தை மெச் சிய என் நாத்தனர் என் தங்கைகளில் ஒருத்தியை தன மகனுக்கு கல்யாணம் செய்துகொண்டாள். என் பிதாவுக்கு இப்போது 78வய தாகிறது. என் தாயார்மட்டும் தனது அறுபதாவது கல்யாண மாங் கல்யத்துடன் ஜம்ஜம் என்று பரமனடி சேர்ந்துவிட்டாள். எங்கள் குடும்பத்தில் இப்போது சாந்தியும் நிம்மதியும் நிலவி இருக்கிறது.

நான் இதை எழுதவேண்டுமென்ற ஆசையைத் தூண்டியது, ஜகன்மோகினிப் பத்திரிகையில் சில காலமாக வெளிவரும் 'வாழ்க் கையில் ஒரு சம்பவம்' என்கிற தலைப்பேயாம். ஒரு சம்பவத்துக்கு பதில் நான் வாழ்க்கையையே எழுதிவிட்டிருக்கிறேன். இதைக் கட்டாயம் ப்ரசுரிக்கும்படிக் கோருகிறேன்.

"உண்மை விளம்பி..."

---

யோகி சுத்தானந்தபாரதியார் இயற்றிய

**காந்தி கீர்த்தனம்**

350 பக்கங்கள். ரூ. 3—8—0.

உயரிய கிளேஸ் புதிப்பு

இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.
இப் பதிப்பின் லாபம் மகாத்மாஜி சேவா சங்க
இலவசச் சம்பள நிதிக்கே

# முயற்சியின் பலன்.

"ஸார், மணி என்னங்க?" என்று தெருவோடு போன ஒருவரைப் பார்த்துக் கேட்டான், ஏழுமலை; "மணி எட்டரை" என்று காதில் விழுந்ததுதான் தாமதம்... அவனை ஒரு மூழம் தூக்கிப்போட்டது. "ஐயோ, இன்று கடையில் சரியான உதைதான் எனக்குக் கிடைக்கப்போகிறது" என்று அலறித் தலைதெறிக்க ஓட்டம் எடுத்தான். மூச்சுத் திணறக் கடையில் நுழைவதைப் பார்த்த முதலாளி, "என்னடா, உனக்குத் தனியாய் ஒரு கடியாரம் வாங்கித் தரவேண்டுமா? இல்லை, உன் இஷ்டம்போல் கடை நேரத்தை மாற்றவேண்டுமா!" என்று பல்லைக் கடகடவென்று கடித்துக்கொண்டே கேட்டார். "தூங்கிவிட்டேன், சார்! இனி, நேரம் செய்யமாட்டேன்" என்று தாழ்மையாய்ப் பதில் சொல்லிக்கொண்டே வேலையில் இறங்கினான். அதற்குள் பெரிய தட்டான் ராமசாமி, "இந்தா தம்பீ! எனக்கு நாஸ்தா வாங்கி வா!" என்று நாலு அணாவைக் கையில் கொடுத்து அனுப்பினான். "பரவாயில்லை; அதிகம் வசவு இல்லாது இன்று நரியின் முகத்தில் தான் விழித்தேன்" என்று சந்தோஷமாய் ஓட்டம் எடுத்தான்.

ராமசாமி அன்று மெருகிட்டுத் தீர்த்துத் தரவேண்டிய மோதிரத்தை எடுக்கப் பெட்டியைத் திறந்தான். தீயை மிதித்தவனைப்போல் ஒரு துள்ளு துள்ளியவாறு, "ஐயோ மோதிரத்தைக் காணவில்லையே!" என்று கத்திவிட்டான். இதைக் கேட்ட முதலாளி, "என்ன அந்த ஒரு சவரன் மோதிரமா? எப்போது பெட்டியில் வைத்தாய்? கடைசியாய் எப்போது பார்த்தாய்?..." என்று அடுக்கடுக்காய்க் கேள்வி போட்டார். ராமசாமி, மரியாதையாய் முதலாளியிடம் வந்து, "சார்! நான் நேற்று மத்யானம் பெயரெல்லாம் செதுக்கிவிட்டு மெருகுக்குத் தயாராய்ச் செய்து கிளாஸ் பெட்டியில் வைத்தேன். அப்புறம் கவனிக்கவே இல்லை. ஒருவேளை ஏழுமலை ஏதாவது கையாண்டு இருப்பானோ என்று தோன்றுகிறது. மற்றப்படி யாரையும் சொல்வதற்கில்லை" என்று தீர்மானமாய்த் தன் அபிப்ராயத்தைச் சொன்னான். கடையில் மற்றவர்களும் அதையே ஆமோதித்தார்கள். முதலாளிக்கு ஒன்றுமே புரியாது ஒரேயடியாய் மூளை குழம்பிவிட்டது. ஏதனாலோ சட்டென்று ஏழுமலைமேல்முதலாளிக்குச் சந்தேகம் தோன்றவில்லை... அவன் ஆறு வயதுப் பையன் முதல் கடையில் வேலைசெய்கிறான். அவன் வேலைக்கு வந்து எட்டு வருஷம் ஆகிறது. இதுவரையில் இல்லாது இன்று துணிந்து திருடுவானா... என்ற எண்ணமே உள்ளத்தைச் சுற்றி வட்டமிட்டது. எல்லா ஆட்களும் ஒன்றும் புரியாது குழம்பிக்கொண்டு இருந்தார்கள். ஏழுமலை சகஜமாய்ச் சிரித்தவாறு நாஸ்தா, காப்பி சகிதம் உள்ளே நுழைந்தான்.

நுழையும் போதே எஜமானரின் குரல் கடும் த்வனியில், "டேய்! அதைக் கொடுத்துவிட்டு இப்படி வா!" என்று த்வனித்தது. இடியோசை கேட்டு மிரளும் மானைப்போல் பயந்தவாறு ஏழுமலை எஜமானரின் எதிரில் ஆஜரானான். கோபம் ப்ரதிபலிக்கும் த்வனியோடு எஜமானர், "டேய், ஏழுமலை! நீ இந்தக் கடைக்கு வேலை செய்யவந்து எட்டு வருஷம் ஆகிறது. இவ்வளவு நாள் நீ உண்மையாய் வேலை செய்தது பெரிது இல்லை. இப்போது நான் கேட்கப்போகும் கேள்விக்கு நீ சரியான ஜவாப் சொல்லவேண்டும். அதில் தான் உன் மரியாதையைப் பார்க்கப்போகிறேன். நேற்று ராமசாமி பெட்டியில் வைத்திருந்த தங்க மோதிரத்தைக் காணவில்லை. கடையில் இவ்வளவு நாள் ஒரு துரும்புகூடத் திருடுபோனது இல்லை. இன்று புதிதாய்ப் போய் இருப்பதால் உன்னைத்தான் எல்லோரும் சந்தேகிக்கிறோம். உண்மையை ஒத்துக்கொண்டுவிட்டால் உன்னை மன்னித்து விடுகிறேன் இல்லை; போலீஸில் வைத்து உன்னைத் தோலை உரிக்கச் செய்துவிடுவேன். ஒரே வார்த்தையில் உண்மையை ஒத்துக்கொண்டுவிடு; ஊம்!" என்று கர்ஜித்தார்.

ஏழுமலைக்கு தன் எஜமானர் என்ன சொல்கிறார் என்றே புரியாது தலை ஒரே படியாய்ச் சுற்றத் துடங்கிவிட்டது. பயத்தாலும், துக்கத்தாலும் பதில் சொல்வதற்கு நாக்கே எழும்பவில்லை. "ஐயோ, பகவானே! இது என்ன சோதனை! நான் 'கடவுளே' என்று வேலையைச் செய்துவிட்டுப்போகும் போது என் தலையில் எரிமலையையே புரட்டுகிறார்களே! என்ன பதில் சொல்வேன்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே" என்று திகைத்து நின்றான். கண்ணில் அருவிபோல் நீர் பெருகுகிறதே தவிர பதில் சொல்ல நா எழவில்லை.

ஏழுமலை மௌனம் சாதிப்பதைப் பார்த்த முதலாளி இன்னும் பன்மடங்கு ஆத்திரம் அடைந்தார். பொறுமையற்ற ராமசாமிக்கு, அவன் மௌனத்தைப் பார்த்து நிற்கும் சக்தி இல்லை. தான் சகஜமாய்க் கைதேர்ந்த வித்தையைக் காட்டப் பிரம்பைக் கையில் எடுத்துக்கொண்டு ஏழுமலையை நெருங்கினான். ஏற்கனவே தலை சுழலும் ஏழுமலைக்கு ராமசாமியின் வருகையால் இன்னும் வேகமாய்ச் சுழலத் துடங்கியது!

ராமசாமி ஆவேசத்தோடு ஏழுமலையின் தலைமயிரைப் பிடித்துக்கொண்டு, "ராஸ்கல்!" 'மௌனம் சர்வார்த்த சாதகம்" என்று இருக்கிறாயா? இப்படிக் கண்ணில் நீரைக் கக்கவைத்துவிட்டால் உன்னை சந்தேகிக்காதுவிட்டுவிடுவோம் என்று எண்ணமா? உண்மையைச் சொன்னால் சரி; இல்லை, இந்தப் பிரம்பு முறிந்துவிடும்; ஜாக்ரதை" என்று அதட்டினான். பாவம்! ஏழுமலை எடுத்து இருந்தால்தானே ஒத்துக்

கொள்ள. ராமசாமியும் தன்னால் முடிந்தவரை சிறுவனை உதைத்துத் தீர்த்தான். எப்படி உதைத்தாலும், கேட்டாலும் தான் எடுக்கவில்லை என்ற பதிலைத் தவிர எழுமலையிடம் ஒன்றும் புதியதாய் வரவில்லை. சிறுவனின் அலறலை கேட்டுத் தெரு பூராவும் கும்பல் சேர்ந்துவிட்டது. அடியின் பாதை தாங்காது துடித்தான். பாவம்! உடம்பு பூராவும் பிரம்பின் தழும்பு தத்துத்தத்தாய் எழும்பிவிட்டது. இனி அடித்தால் தாங்கும் சக்திகூட அவனிடம் இல்லை: துடிக்கும் உள்ளத்தோடு ஓடிவந்து எஜமானரின் காலடியில் விழுந்து, "சார்! நான் உண்மையாய்ச் சொல்கிறேன்: நான் அந்த மோதிரத்தைக் கண்ணால்கூடப் பார்க்கவில்லை. இந்த ஸ்வாமிமீது ஆணையாய்ச் சொல்கிறேன், சார்! நான் எடுக்கவில்லை. அடித்துக் கொன்றாலும் சரி; உதையைப் பொறுத்துக்கொள்ளக்கூடத் தயார், சார்! ஆனால், செய்யாத காரியத்தை எப்படிச் செய்ததாக ஒத்துக்கொள்வது? இவ்வளவு நாள் உங்களிடமே வேலை செய்யும் என் குணம் உங்களுக்குத் தெரியாதா? நான் சத்தியமாய் எடுக்கவில்லை சார்" என்று தேம்பித் தேம்பி அழுதுகொண்டே சொன்னான். ஏனோ சிறுவனின் பரிதாபமான முகம் எஜமானரின் உள்ளத்தை உருக்கிவிட்டது. உண்மையில் எடுக்காது இருந்தால் நாம் இப்படி அடிப்பது நியாயமா? ...என்று அவர் உள்ளமே அவரைக் குத்திக்காட்டியது. ஆனால், அதை வெளியில் காட்டிக்கொள்ளாது, "அதெல்லாம் எனக்குத் தெரியாது: நாளை சாயங்காலத்திற்குள் மோதிரத்தோடு வராவிட்டால் போலீஸ் ஜெயிலில் இருப்பாய் என்பது நிச்சயம். வீணாய்ப் பொழுதைப் பாழாக்காதே போ, இங்கு இருந்து!" என்று அதட்டி விரட்டினார். ஏமாற்றமடைந்த முகத்தோடு எழுமலை விம்மிக்கொண்டே படி இறங்கினான்.

அங்குக் கும்பல் சேர்ந்து இருக்கும் மனிதர்கள் அவரவர் தங்கள் மனம் போனவாறு பேசத் துடங்கினார்கள். "ஐயோ பாவம்! நிஜமாகவே திருடி இருந்தாலும் இப்படியா அடிப்பது? நெஞ்சில் இரக்கம்கூட இல்லையே பாவிகளுக்கு!" என்றார்கள் சிலர். "இதைச் சொல்கிறீர்களே! எங்க பக்கத்து வீட்டில் தட்டான் கடை, தினம் இதே ரகளைதான். இங்காவது திருடினான் என்று உதைதந்தார்கள். அங்குக் காரணமே வேண்டாம். தாமதமாய் வந்தால் உதை; சற்றுபோது நின்றால் உதை; இப்படித் தோலை உரித்து எடுத்துவிடுகிறார்கள்! அவ்வளவு உதையும் வாங்கிக்கொண்டு அந்தப் பையன் திருடுவதும் இல்லை. தட்டான், சதா வெள்ளி, தங்கம் இவைகளைச் சுத்தியால் அடித்து அடித்து அவர்கள் உள்ளம் கூட இரும்பாய்விடுகிறதோ என்னவோ தெரியவில்லை! வெள்ளி, தங்கத்தை அடிப்பதுபோல்தான் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு அந்தச் சின்ன சித்தாள் பையன்

களைக் கொன்றுவிடுகிறார்கள். எனக்குத் தினம் இதைப் பார்த்துப் பார்த்து சகஜமாய்விட்டது....உண்மையில் சந்தேகமில்லாமலா இப்படி அடிப்பார்கள்?... அவ்வளவு உதை வாங்கியும் அந்தப் பையன் மசியவில்லை பாருங்களேன். இப்படி இரும்பு நெஞ்சம் படைத்த பையன்களுக்கு இந்த உதை தேவைதான்'' என்று பலவாறு பேசலானார்கள். எதையும் காதில் வாங்காது, எழுமலை நேராய் ஒரு மரத்தடியில் போய்ப் பேசாது உட்கார்ந்தான். ஒருவிதத்திலும் புத்தி செல்லாது திகைத்தான். எந்த விதத்தில் தான் எடுக்கவில்லை என்பதை எஜமானருக்குத் தெரிவிப்பது என்று யோசித்து யோசித்துக் குழம்பித் தவித்தான்.

எவ்வளவு நேரம்தான் கிடந்தானோ அவனுக்கே தெரியாது. மத்யானம் மூன்று மணி இருக்கும்; சட்டென்று ஒரு யோசனை தோன்றவே சரசரவென்று எழுந்து கடைத் தெருவுக்குப் புறப்பட்டான். முதல் நாள் அவன் வேலை செய்யும் கடையில் கும்பலாய் நாட்டுப்புறத்து ஆட்கள் ஐந்து, ஆறு பேர் வந்தது நினைவிற்கு வந்தது. ஒருவேளை அவர்களில் யாராவது கண்ணாடிப் பெட்டியில் இருந்து எடுத்திருப்பார்களோ? ஒருவேளை எடுத்தாலும் மார்வாடி கடையில் தானே விற்க வருவார்கள்...என்று தோன்றவே ஒவ்வொரு மார்வாடி கடையாய்த் தேடி அலையத் துடங்கினான். மாலை ஆறுமணி வரை திரும்பத்திரும்ப மார்வாடிகடைகளையே வட்டமிட்டுக் கொண்டிருந்தான். ஆனால், ஒன்றும் பயனில்லை. வேறு வழியில்லாது வீடுபோகவும் பயந்து மரத்தடிக்கே புறப்பட்டான்; அப்போது ஒரு கடையிலிருந்து வந்த சம்பாஷணை அவனைச் சட்டென்று நிற்கவைத்தது. ''எம்பா! இந்த நகை எங்கிருந்துகொண்டுவந்தாய்? இது உன்னுடையது தானா! இதன் மதிப்புக்கூடத் தெரியாது நகைவிற்க வந்துவிட்டாயே! உனக்கு எவ்வளவு பணம் இதற்கு வேண்டும்? அதைச் சொல்லு....

''சாமி! இது என் மச்சான் நகை; கடையிலே தந்து அவுங்க கொடுக்கறபணம் வாங்கிவரச் சொன்னான். நீங்க மதிப்புப்போட்டு எவ்வளவு தருவீங்க?'' என்று அசடுவழியச் சொன்னான்.

ஒருவேளை திருட்டு நகையாய் இருக்குமோ?...என்று சந்தேகித்த மார்வாடி பக்கத்தில் இருக்கும் தன் அண்ணனை யோசனை கேட்கலாம் என்று அவனைக் கடையில் இருக்கும் படிச்சொல்லி எழுந்தான். இதைக்கவனித்தஎழுமலை ஒருவேளை இந்த ஆசாமி நேற்றுவந்த கும்பலோடு வந்து களவாடி இருப்பானோ?...என்று தயங்கும் சமயம், அவரும் படி இறங்கினார். தைரியத்துடன் எழுமலை பணிவாய் மார்வாடியை நெருங்கி, ''ஐயா! நான் ஒரு விஷயத்தைச் சொல்லவேண்டும். தயவு

செய்து நான் சொல்வதைக்கேட்டு ஏழையைக் காப்பாற்ற வேண்டும்'' என்று மன்றாடிக்கேட்டான். மார்வாடியும் ஏதோ நல்ல காலமாய்க் காதுகொடுக்கவே, காலை நடந்தது பூராவும் சொல்லி, ''இந்தநகை என்எஜமானருடையதாய் இருக்குமோ, என்னவோ! தாங்கள் இந்த நகையுடன் என் கடைக்கு வந்தால் தேவலை'' என்று முனைந்துகேட்டான். தன் உடம்பின் தழும்புகளையும் மார்வாடிக்குக் காண்பித்தான்.

இரக்கம்கொண்ட மார்வாடி, கடையில் தன் ஆளைக் கூப்பிட்டு அந்த காட்டுப்புறத்தானை அங்கேயே பார்த்துக் கொள்ளும்படிச் சொல்லி, பையனுடன் தட்டான்கடைக்குப் புறப்பட்டான்.

ஏழுமலை மார்வாடியோடு கடையில் ஏறுவதைப் பார்த்தவெல்லோரும், ''சரி! மார்வாடி இடம் விற்கப்போய் அகப்பட்டான் திருடன்...என்று ஆவலாய் ஏழுமலையையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். மார்வாடி கடை முதலாளியிடம் மோதிரத்தைக் கொடுத்து, ''இது உங்களதுதானா பாருங்கள்?'' என்று கேட்டான். ''சந்தேகமே இல்லை. எங்களதுதான். உங்களிடம் எப்படி வந்தது! இந்த ராஸ்கல் விற்க வந்தானா?'' என்று ருத்ரமூர்த்திபோல்விழித்துப் பார்த்தார் முதலாளி. மார்வாடி நிதானமாய், சார்! எப்பவும் உலக வழக்கம் அப்படித்தான். கடையில் எல்லோரையும்விடச் சின்னவனையும், குறைந்த சம்பளக்காரனையும் இருந்தால் அவன் நேர்மையானவனாய் இருந்தாலும் எந்தத் தப்பும் அவன் தலையில்தான் விடியும். அதுபோல் தான் இப்போது உங்கள் கடையிலும் ஆகி இருக்கிறது. பாவம்! இந்தப் பையன் தன்பேரில் திருட்டுப்பழி வந்து விட்டதே; அதை மாற்றவேண்டுமே...என்று தானே கஷ்டப்பட்டுத் திருடனைக் கண்டுபிடித்து இருக்கிறான். வாருங்கள் ஆளைக் காட்டுகிறேன்'' என்று அழைத்துச்சென்றார்.

போகும்போது போலீஸிலும் தகவல்கொடுத்து கான்ஸ்டேபிளுடனே போனார்கள். மார்வாடியோடு வரும் போலீஸைப் பார்த்ததுதான் தாமதம்.. காட்டுப்புறத்தானுக்கு குலை நடுக்கம் எடுத்துக்கொண்டது. போலீஸ்காரன் அருகில் வந்து இரண்டு உதை கொடுத்ததுதான் தாமதம்...அடுத்த நிமிஷம் தான் கடைக்குவந்துமோதிரம் எடுத்ததுமுதல் அதன்மதிப்பு தெரியாது விற்கவகை அறியாது மார்வாடி கடையில் முழித்தது வரையில் மடமட என்று ஒப்பித்துவிட்டான்.

தான் திருடன் இல்லை என்று ஊர்ஜிதமானதுதான் தாமதம்...ஏழுமலை முகம் ஆனந்தத்தால் மலர்ந்தது. இன்னசெய்வது என்றே புரியாது திகைத்தான். சந்தோஷத்தின் மிகுதியால் கண்ணீர் முட்டிவிட்டது. உணர்ச்சி மேலிட்டு, ''சார்!'' என்று கத்திக்கொண்டே எஜமானரின் காலில் விழுந்து, தேம்பித்தேம்பி அழுதான். அவனுக்கு அழுவதா, சிரிப்பதா என்றே

புரியாது முழித்தான். யஜமானரின் உள்ளம் பாகாய் உருகியது. நிரபராதியான சிறுவனை முன்யோசனை இல்லாது அடித்து ஹிம்ஸித்துவிட்டோமே என்று துக்கமாய் வந்தது. "ஏழுமலை! உன் தூய்மையான குணத்தை அறியாது ஆட்களின் வார்த்தையைக் கேட்டு மதி இழந்துவிட்டேன். நீ சிறியவனாய் இருந்தாலும் நேர்மையானவன். என்னை மன்னித்துவிடப்பா" என்று கண்ணீர் பெருக அவனைத் தேற்றினர். அப்போது அவன் முதுகில் இருந்த தழும்புகளைப் பார்த்து ராமசாமி அடிக்கும்போது தான் வேடிக்கை பார்த்தது எவ்வளவு தவறு என்று உறைத்தது. யஜமானின் மார்போடு இணைந்த ஏழுமலை தன்னையே மறந்து ஆனந்தத்தில் மூழ்கினான்.

*

---

# கண்கொள்ளாக்காட்சி

ஆகஸ்டு மாதம் பிறக்கும்போதே சங்கத்தின்பால் அபரிமிதமான அன்புகொண்டு ஐக்யபாவத்துடன் உழைக்கும் அங்கத்தினர் பலருக்கு அளவிடமுடியாத ஒரு உத்ஸாகமும் குஷியும் கூடவே பிறந்துவிட்டதெனஞல் மிகையாகாது. காரணம்: 6-ம் தேதியன்று சங்கத்தில் நடக்கப்போகும் எக்ஸிபிஷன்—பொருட்காட்சி வைபவமேயாகும்.

ஓடியாடி உழைத்துக் கஷ்டப்பட்டு வெகு நேர்த்தியான பல பொருள்களைச் சேகரித்து ஒருங்கு சேர்த்து 5-ந்தேதி முதலே அழகுபடுத்திவிட்டார்கள். வருணபகவானே! மழை வராதிருக்க வேண்டுமே!...என்கிற ப்ரார்த்தனை அபிமானிகள் நெஞ்சில் அலை மோதிக்கொண்டிருந்தது. மாலை 5 மணிக்குச் சிறிது நம்பிக்கை குறையும்படி சிறு தூறல் தூறிக் கலக்கிவிட்டது, எனினும் பேனா சக்ரவர்த்தியும் போலீஸ்கமிஷனர் பார்த்தஸாரதி ஐயங்காரும் வெகு உத்ஸாகத்துடன் விஜயம் செய்த உடனே மக்களின் மனத்தில் அலைமோதும் ஆனந்த குதூகலத்தைக் கண்டமழையும் மறைந்து போய்விட்டது!

சென்ற ஆண்டு எக்ஸிபிஷனை சக்ரவர்த்தி ராஜாஜி திறந்து வைத்தது அபாரமான மகிழ்ச்சியைக் கொடுத்ததுபோல் இவ்வாண்டிலும் பேனாசக்ரவர்த்தியே திறந்துவைத்தது அபரிமிதமான சந்தோஷத்தைக்கொடுத்து அங்கத்தினர்களின் ஆர்வத்தை ஊக்கியது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீமான் M. ரங்கநாதம் செட்டியாரின் வஸந்த பங்களாவின் முகப்பில் மாவிலைத் தோரணமும் மண்டபத்தின் முன்பக்கத்தில் கண்களைக் கவரும்படியான ராதையும் க்ருஷ்ணனும், அழகிய தீபாலங்காரமும் புஷ்பச் செடிகளும் தோரணங்களும் நிறைந்து பரகாசிக்கும்படி சிறிய மண்டபத்தில் எழுந்தருளி சிரித்தமுகத்

துடன் எல்லோரையும் வரவேற்று ஆசிகூறுவதுபோன்று அமைந்திருந்ததையும், அதற்குப் பின்னால் சங்கத்தில் தையல் வகுப்பில், திறம்படச் செய்திருந்த மகாத்மா காந்தியடிகளின் உருவமும் அன்னை கஸ்தூரிபாவின் உருவமும் தாங்கிய நீலத் திரை சுவரில் அலங்காரமாகக் காட்சியளித்ததும், வாசற்படிக்குச் சரியாக மகாத்மாஜி ஸேவா சங்கம் என்ற எழுத்துக்கள் பொறித்த திரைச் சீலையின் அழகும் அதற்கடியில் ஸ்ரீமதி பாரதி என்பவரால் போடப்பட்ட க்ரோஷியா வேலைப்பாட்டில் இரண்டு மயில்கள் தோகைகளை விரித்துக்கொண்டு அழகுக்கும் அழகு செய்தது போல் காட்சியளித்த அத்புதமும் கூறிமுடியாது. தூரவிருந்து பார்க்கும்போது மகாத்மா தம்பதிகளின் சிலையே வைத்திருந்தது போல் தோன்றியதேயன்றி தையல் வேலையிலமைந்த உருவம் என்றே தெரியவில்லை. அத்தனை தத்ரூபமாயிருந்ததைப் பொது மக்கள் நின்று பார்த்துப் பேரானந்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மண்டபம் பூராவும் குழுமியிருந்த கூட்டத்தின் ஆரவாரத்துடன் ஸ்ரீமான் கல்கியும கண்காட்சியைக் குதூகலத்துடன் திறந்து வைத்தார். தலைவரும் கல்கியும் கண்காட்சிச் சாலைக்குள் சென்று வெகு உத்ஸாகத்துடனும் நிதானமாயும் ஒவ்வொரு பொருளையும் பார்த்தும் அது செய்யப்பட்ட விதங்களைக் கேட்டும் பார்த்தும் உணர்ச்சியுடன் பூரித்த காட்சி நேரில் பார்த்தவர்களின் ஆனந்தத்திற்குச் சிகரம் வைத்ததுபோலிருந்தது.

கலாரஸனை மிக்க இருவரும் ஊக்கமாயும் சந்தோஷமாயும் பார்வையிட்டவாறு, "என்ன அத்புதமான வேலை! எத்தனை சிறப்புடன் விளங்குகிறது! இந்தப் பிரம்பு மயில்களும் மோட்டார் காரும் அபாரமான சாமர்த்தியத்தை வெளியிடுகின்றதே!......தீப்பெட்டியிலான பங்களா என்ன... அட்டையாலான கோட்டையும், கொடி மரமும், துப்பாக்கிச் சேவகனும்... அடேயப்பா... தகரமும் அட்டையாலுமான கோயிலா இது?...வெறும் அடுப்பெரிக்கும் காட்டு மரக்கட்டையினால் செய்த பாம்பா இது? நிஜஸ்வரூபம் போல் மிரட்டுகிறதே! பேஷ்! பேஷ்! ஸோடாவைக் குடித்துவிட்டு வீசி எறியும் மூடிகளாலா இத்தனை அழகான மண்டபம்?... துணிகளை வெளுக்கும் ஸோப்புகளே மனத்தை வெளுக்கச் செய்யும் பக்திநிறைந்த மண்டபமாயும் தேராயும் பொம்மைகளாயும் காட்சியளிக்கின்றதே!...அடேடே!......இது உண்மையான ரத்தின கம்பளமென்றல்லவா மிதிக்கப் போனேன்! நெல்லு உமியினால் வர்ண ஜாலங்களுடன் சிருஷ்டித்த ஜமக்காளமா இது? அடாடாடா! மகாத்மாவின ஜீவிய சரிதையின் சில பாகங்கள் சுருக்கமாக வைத்திருப்பதும் மகாத்மாஜி ஸேவா சங்கம் என்கிற பெயருக்கும் மிகமிகப் பொருத்தமாகவல்லவா இருக்கிறது! நரியும் த்ராக்ஷைப் பழமும் என்கிற பழங்கதையை மீனின் செதிள்களால் செய்துள்ள அற்புதம் அபாரமானது!...தேங்காய்களினாலா இந்த பொம்மைகள் செய்திருக்கிறது? விளக்கிச் சொன்னாலன்றி தெரியவில்லையே.....கோழிமுட்டையா கத்திரிக்காய்போல் காட்சியளிக்கிறது? கொப்பரைத் தேங்காயில் செதுக்கிச் சித்திரித்துள்ள காட்சி கண்ணையும் கருத்தையும் கவருகிறதே! கிளிஞ்சல்

பொம்மைகளின் அழகு அடேயப்பா!......எம்ராய்டரி வகைகள், க்ரோஷியா வகைகள், புட்டியில் விதவிதமாக மணியினாலும் ரிப்பனினாலும் நூலாலும் சடையாலும் பாசிமணியினாலும் செய்துள்ள விசித்திரங்கள்! பலவிதக் கைவேலைப்பாடுள்ள படங்கள்! ...மிஸஸ் கமலா ரங்காசாரி, மிஸஸ் V.T.ரங்கஸ்வாமி,T.V.ஜானகி விஜயராகவன் முதலியோரின் பலதரப்பட்ட பொருள்கள், சித்திர வேலைகள்! மிஸஸ் T. N. S. ராகவன் அவர்கள் அதி அதி அத்புதமாக பராசக்தி, புத்தர் பெருமான், திருச்சி மலைக்கோட்டை போன்ற உருவங்களை நிஜஸ்வரூபத்துடன் மண்ணாலும் சிமிட்டியாலும் விசேஷ கவர்ச்சிகரமான முறையில் செய்திருந்த அழகும், சிறுமி வஸந்தியின் கைவேலைகளும், குமாரி ருக்மணி, சூடாமணி இருவருடைய ஓவியச்சிறப்பென்ன! அவைகளில் பேச்சு ஸ்வாரஸ்யம் என்கிற மிக்க அழகான கருத்துடைய சித்திரமென்ன! ஸ்ரீ. ஜானு என்பவரின் சித்திரங்களென்ன! கந்தல் துணிகளினாலான ஜமுக்காளமென்ன! தகரத்தினால்செய்த மயில்என்ன! அட்டையினாலேயே கலர்கள் பூசிக்கத்திரித்த ஆங்கில நாடக ஸெட்டுகளென்ன! முழுச் சாக்கினால் செதுக்கிய உருவமென்ன? ஒரே ஒரு மாக்கல்லினால் செய்த கல்வெட்டு உருவமென்ன! விதவிதமான கைவேலைகள் மயமாயமைந்த மேஜை விரிப்புகள், கதவு விரிப்புகள் முதலிய துணி வகையராக்களென்ன! விதவிதமான உருவங்களை நூலாலும் குஷன் வேலையாலும் செய்த படங்களென்ன! கோலம் போடும் சித்திரங்களில் அதிஅத்புதமாகப் போட்டிருந்த விக்னேச்வரர், காளிங்கமர்த்தனம், ஸ்ரீநிவாஸர், புத்தர்பெருமான்...ஆகிய கண்கொள்ளா வனப்பு மிக்க ஓவியங்களைக்கண்டு உடல் பூரித்து மிகவும் பாராட்டினாகள். அபபப்பா! எதை விடுவது, எதைச் சொல்வது என்றே தெரியவில்லை! அதி அத்புதம்! அதிஅத்புதம்!.....என்று தமது மனம் நிறைந்த உவகைபூத்த ஆனந்த உணர்ச்சிகளை ஸ்ரீமான் கல்கி ப்ரத்யேகமாய்ச் சொல்லிமகிழ்ந்தவாறே பார்த்தது மிகமிக ஆனந்தத்துடன் குறிப்பிடக் கூடிய விஷயமாகும்.

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்கிற முறையில் சொல்லப்போனால் பகவான் மச்சாவதாரத்தில் ஆரம்பித்து கல்கி அவதாரத்தில் முடித்ததுபோல், கண் காட்சியும் முதல் முதல் மச்சமாகிய மீன்செதிளால் செய்தபடத்துடன் ஆரம்பித்துப் பேராசிரியர் சாம்பமூர்த்தியவர்களின் திறமையால் உதயமாகிய ப்ரதர்சன வீணையுடன், ஸ்ரீமான் கல்கி அவர்களின் உத்ஸாகமான பார்வையுடன் எக்ஸிபிஷன் அமைந்திருந்தது குறிப்பிடவேணும்.

ஸ்ரீமதி மைதிலி ஸ்ரீநிவாஸன் ப்ரார்த்தனை கீதம் பாடிய பிறகு தலைவி ஸ்ரீ. ஸரஸ்வதிபாய் வரவேற்றுப் பேசினார். காரியதரிசி வை. மு. கோ. சங்கத்தின் ஸேவைகளைச் சுருக்கமாகக் கூறினார். கரகோஷத்தினிடையே போலீஸ் கமிஷனர் ஸ்ரீமான் S. [illegible] ஸாரதி ஐயங்கார் தலைமை தாங்கினார். பேரு [illegible] கல்கியின சொல்மாரிக்குக் காத்திருந்த [illegible] விருந்தளித்ததுபோல் கல்கி பேசிய ஸாராம்சம[illegible]



1—9—54
173183

"ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாள், நாங்களெல்லோரும் பேனு பிடிக்க ஆரம்பிப்பதற்கு முன்பே "ஆசிரியை" எனப்புகழ் பெற்றிருந்தார். அவர் தேசியத் துறையிலும் கலாஸேவையிலும் கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாகச் சிறப்பாக உழைத்து வருவது ப்ரஸித்தம். அவரது முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு, அவரது உழைப்பால் வெற்றிபெற்று வரும் இச்சங்கத்தைப் பார்க்கும்போது கம்பன் வர்ணித்த அயோத்யா ஸ்த்ரீரத்னங்களின் நினைவே மனதுக்கு வருகிறது என்ருல் மிகையாகாது............ ஸாதாரணமாக நான் ஸ்த்ரீகள் சங்கத்திற்குப் போவதற்கே பயப்படுவேன்; அப்படி ஒப்புக்கொண்டு போனாலும் அவர்களது பேட்மின்டன், டென்னிஸ் முதலியவற்றைக் கண்டு கசந்து, நமது பண்டைப் பெருமையையும் கலாசாரப் பண்பாட்டையும்பற்றிப் பேசி, இரண்டு வார்த்தைகள் தாக்கியும் பேசிவிட்டு வெளியேறுவது வழக்கம், இந்தச் சங்கத்தில் அம்மாதிரி சங்கடமேயில்லை. கோதைநாயகி அம்மாள் காரியதரிசி; ஸரஸ்வதிபாய் தலைவி—இத்தகைய சங்கத்தில் தெய்வீக, ஆத்மீக, கலாசாரப் பண்பாடுக்குக் குறைவிருக்க முடியாது என்பது எனக்கு நன்கு தெரியும்: இங்குவந்த பிறகு எனது ப்ரமிப்பும் பாராட்டும் பன் மடங்காகப் பெருகிற்று...சென்ற வருடம் என் குருநாதர் ராஜாஜீ அடைந்த மகிழ்ச்சியை இவ்வருடம் நானும் அடைந்துள்ளேன்"

மறுபடியும் சிறு தூரல் ஆரம்பித்ததால் கல்கியின் அமுத மொழியைச் சீக்கிரம் முடிக்கவேண்டியதாயிற்று. பிறகு தலைவர் வெகு உத்ஸாகத்துடன் பேசத்துடங்கி, "உண்மையில் நான் என்னமோ ஏதோ! என்ற எண்ணத்துடன்தான் வந்தேன். நான்வந்த பிறகு பொருள்காட்சி வெளிப்படுத்திய திறமைகளைப் பார்த்ததும் சங்கத்தின் லக்ஷியங்களை அறிந்ததும், என்னுடைய மனமே வியப்புற்றது. சுமார் 40 வருஷங்களுக்கு முன்பிருந்தே ஸ்ரீமதி ஸரஸ்வதிபாயின் கதையையும் பாட்டையும் நான் சிறியபையனாக இருந்தது முதல் ரஸித்திருக்கிறேன். அத்தகைய மேதையைத் தலைவியாகக்கொண்டுள்ளதும் ஒரு பெருமைதான்; ஸ்ரீமதிகோதைநாயகி அம்மாளை நான் நேராக அறிந்ததில்லை எனினும் அவருடைய நாவல்கள் எங்கள் வீட்டில் வெகு வருஷமாக நடமாடி வருவதால், அவர்களை அதன்மூலம் அறிந்திருக்கிறேன். இத்தகைய சிறந்த சகோதரியைக் காரியதரிசியாகக் கொண்டிருப்பதனுல்தான் உங்கள் சங்கத்திற்கு இத்தனை சிறப்பும் பெருமையும் இருக்கிறது என்பது சொல்லாமலேயே விளங்குகிறது; அதிகமான நவநாகரீகத்தின் மீது சங்கம் போகாமல் பக்தி, பண்பு, கலாசாரம், இசை முதலியவைகளில் உழைக்கும் இச் சங்கத்திற்கு என்னுலான உதவியை நானும் என் சகோதரர் கல்கியும் என்றென்றும் செய்ய சித்தமாயிருக்கிருேம்- நான் வரும்போது எண்ணிவந்ததற்கு மாருக நூறு மடங்கு அதிகரித்த மதிப்பை நானும் என் நண்பரும் இச் சங்கத்தின பால் அடைந்தோம்" என்று மகிழ்ச்சியுடன் கூறிவிட்டு, ஹிந்தி பரீட்சையில் தேரிய மாணவிகளுக்கு யோக்யதா பத்திரத்தை வழங்கி ஆசீர்வதித்ததோடு முதல் வகுப்பில் பாஸ்செய்த மாணவிகளுக்கும், சென்னைக்கே முதலாவதாகத் தேரிய மாணவி எஸ். பத்மாவுக்கும்

ப்ரத்யேக பரிசுகளையும் வழங்கி வாழ்த்தினர். கண் காட்சியை அழகு படுத்தும் பொருட்டு பங்கெடுத்துக்கொண்டுள்ள சகோதரிகளனைவருக்கும் வை, மு. கோ. வந்தனோபசாரம் கூறினர். மங்களத்துடன் கூட்டம் இனிது முடிவடைந்தது.

மறுநாள் காலை முதல் இரவு 8 மணிவரையில் ஏராளமான பொதுமக்கள் வந்து கண்டு களித்தார்கள்.

போராசிரியர் ஸ்ரீ சாம்பமூர்த்தியவர்கள் தமது சிஷ்யைகளுடன் ஸ்ரீ த்யாகய்யர்வாள் எழுதியுள்ள நௌகா சரித்திரத்தை வெகு அழகாக இன்னிசையுடன் விருந்தளித்தார். முக்யமாய் அவருடைய சிஷ்யைகளின் சங்கீதம் வெகு மனோகரமாயும் ஒரேமாதிரியான இனிய சாரீரத்துடன் சிருதி சுத்தமாயும் கவர்ச்சிகரமாயும் அமைந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஒரு சிஷ்யை வீணை வாசித்தது மிகமிக ரஞ்சகமாய் கணீரென்ற நாதத்துடன் இனிமையாயிருந்தது.

சங்கத்தின் ஆலோசனைக் கமிட்டியின் தலைவரான ஸ்ரீமான் ஆசாலசேஷாசாரியர் அவர்கள் வந்தனோபசாரம் கூறியதோடு பொருள் காட்சியின் அழகையும் பாராட்டிப்பேசினர்.

## ஆச்சரியம்! அதிஅதி ஆச்சரியம்!!

நாளில் சிறந்த நன்னாள்...சுதினமே சுதினமு...என்றும் பாத தூளிபடுவதால் இச்சங்கம் பாக்யம் செய்ததே என்றும் ஆர்ப்பரித்துக் குதூகலிக்கும்படியான ஒரு அதிசயச்சம்பவம் 8-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12 மணிக்கு நடந்தது. கண்காட்சிச் சாலையில் உத்ஸாகத்துடன் வேலைசெய்யும் சகோதரிகள் அனேகர் சாப்பாட்டுக்காகச் சென்றிருந்த சமயம் காரியதரிசிகளான நானும் ஜி. ஆர். ஜெயலக்ஷ்மியும் எக்ஸிபிஷன் கமிட்டியின் தலைவியான ஸ்ரீமதி M. C. ஜானகியம்மாளும் ஆகிய மூவரும் மட்டுமே கண் காட்சிச்சாலையில் இருந்தோம். அச்சமயம் பெரிய கார் ஒன்று வந்து நின்றதைக்கண்டு ஓடிச்சென்று பார்த்ததும் நான் தலைகட்டிய நாகம்போல் ப்ரமித்துப்பூரித்து நின்றுவிட்டேன்! உண்மையில் சந்தோஷசாகரத்தில்தான் மூழ்கிவிட்டேன் என்றால் மிகையாகாது. அத்தகைய உணர்ச்சிக்குக் காரணகர்த்தர்களான ஸ்ரீமான் தேவதாஸ்காந்தி, லக்ஷ்மிகாந்தி, தாராகாந்தி ஆகிய மூவரும் (மகாத்மாவின் குடும்பம்) அங்கு காரிலிருந்து இறங்குவதைக் கண்டதும் வேறு என்னவிதம் ஆகும்!

நான் லக்ஷ்மிகாந்தி (நம் ராஜாஜியின் அருமை மகள்)யைப் பார்த்துச் சிலவருஷங்களாகி இருந்ததால் நினைவு இருக்குமோ இல்லையோ என்கிற சந்தேகத்துடன், "என்னை நினைவிருக்கிறதா?" என்றார் லக்ஷ்மி. அபரிமிதமான சந்தோஷத்தில் அலைமோதும் எனக்குப் பேசவேதெரியவில்லை. தக்கபுக்க என்று விழித்தேன்! குதித்தேன் என்றுகூடத் தோன்றுகிறது! உங்களைக்கூட மறக்க முடியுமா? உங்க அப்பாவும் மாமனாரும் எங்களுக்குக் கண்கண்ட தெய்வங்களாயிற்றே! எங்கள் சந்தோஷத்தில் பேசவே தெரியவில்லை. வாருங்கள்! வாருங்கள்!" என்று அழைத்துச் சென்றேன் ஸ்ரீ A. சுப்பையாதான் கூட அழைத்துவந்தார்.

நான் ஆரம்பத்தில் சொல்லியபடி மகாத்மாவின் உருவம் தாங்கிய திரைச்சீலையருகில் வந்த தேவதாஸ்காந்தி அப்படியே ப்ரமித்து அதனருகில் தடைகட்டியதுபோல் நின்றுவிட்டார்: சில விநாடிகள் அந்த உருவத்தை உள்ளம் துடிக்கும் உணர்ச்சிக்கனவுடன் பார்த்த தேவதாஸ், "இது யார் செய்தது?" என்று வியப்புடன் கேட்டார். "சங்கத்தின் தையல் வகுப்பில் துணியினால் செய்த (அப்ளிக்) வேலை" என்று சொன்னேன். "லக்ஷ்மீ!... தாரா! இங்கு வந்து பாருங்கள்!" என்று அன்புடன் அழைத்துக் காட்டினார். தானாடாவிட்டாலும் தன் சதையாடும் என்பதுபோல் தேவதாஸ் தன் முன்னறிதெய்வமாகிய பிதாவைப் பார்த்ததும் உணர்ச்சி வயப்பட்டுத்தான் நின்றுவிட்டார் என்பதை அவருடைய தோற்றமே நன்கு எடுத்துக்காட்டியது. "அதோ! உங்களுடைய தாயார்கூட நிற்கிறார்கள்." என்று அன்னையின் உருவைக் காட்டினேன். ஆவலே வடிவாக அன்னையையும் பார்த்துவிட்டு திரைச்சீலையிலுள்ள மயில்கள், ஸேவா சங்கத்தின் கொடி முதலியவைகளைப் பார்த்துப்பின் பொருள்காட்சி இருக்கும் இடத்திற்குள் விஜயம்செய்தார்கள். லக்ஷ்மியும் தாராவும் தேவதாஸும் சாதாரணமாகவே ஒவ்வொன்றையும் மிக வியப்புடன் பார்த்து ரஸித்தார்கள். "இங்கு எக்ஸிபிஷன் நடப்பதுபற்றி நேற்று ஸ்ரீமான் கல்கி மிகவும் சிலாகித்துச் சொன்னார். அதனால் பார்க்க வந்தோம்" என்று லக்ஷ்மி அன்புடன் சொன்னபோது என்னிதயம் பூரித்துப் புலகிதமுற்றது. மகாத்மாவின் பெயரால் நடக்கும் இச் சங்கத்தின் பொருள்காட்சியைப் பார்க்க மகாத்மாவின் குடும்பமே வந்தது என்றால் அதைவிட ஆனந்தம் வேறு என்ன இருக்கிறது!...என்று அத்தனைபேரும் ஆர்ப்பரித்தோம்!

மூவரும் நிதானமாக சகலத்தையும் பார்வையிட்டுப் பாராட்டினார்கள். அங்கு வைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான சாமான்களில் அவர்களுடைய உள்ளங்களை மிகமிகக் கவர்ந்து ஆகர்ஷித்த பொருள்களை அவர்களே பாராட்டிக் கூறியதாவது: "மகாத்மாவின் உருவம் அமைந்த திரைச்சீலை, பிரப்பு மயில்கள், மோட்டார், பாம்பு, முதலியன....சோடா மூடியினாலான தீப மண்டபம், மீன் செதிளால் செய்த படம், உமி—ரத்னகம்பளம், சோப்பினால் செய்திருந்த தேர், மண்டபம், பொம்மை முதலியன... விறகுக்கட்டையால் செய்த பாம்பு, தேங்காய் பொம்மைகள், பராசக்தி, புத்தர்சிலைகள், கொப்பரையினால் செய்திருந்த அத்புத சித்திரம், தீப்பெட்டியினால்செய்திருந்தகட்டிடம், காகிதக்கோட்டை, காந்தி சரித்திரச் சுருக்கக் காட்சி, கோலமாவினால் விக்னேச்வரர், காளிங்க நர்த்தனம், ஸ்ரீநிவாஸர், புத்தர், ஆகிய நான்கு உருவங்களைக் கண்டு மிகமிகப்பாராட்டினார்கள். துணிசம்மந்தமானவற்றையும் சித்திரங்களையும் பொதுவாகப் பாராட்டினார்கள்.

கமலா ரங்காச்சாரியாரின் அஜந்தா சித்திரங்களைப் புகழ்ந்தனர். இளிஞ்சல் பொம்மைகளும் புகழுக்குரியதாகியது. தாரா காந்தியின் குளுமையான பார்வை, கலகலப்பான வசனம், சுறுசுறுப்பான தோற்றம் முதலியன எங்கள் மனத்தில் தனியிடம் பெற்றுவிட்டது. அவர்களிருந்த சொல்ப நேரத்திற்குள் அருகிலிருந்த அங்கத்தினர்கள் வந்து சேர்ந்துவிட்டார்கள். அந்தச் சொல்ப

நேரமும் சொர்க்கபதவி கிடைத்த பேரானந்தமே உண்டாகிப் பூரித்தேன். விஸிட்டர்கள் புத்தகத்தில் தேவதாஸ் எழுதியபிறகு இனிப்புப் பண்டம் வழங்கியது. தையல் வகுப்பை முற்றும் பார்வையிட்டுப் பின்னர் மகிழ்ச்சியுடன் சென்றார்கள். அன்று பூராவும் ஒரே குதூகலந்தான்: "ஐயோ! நாங்கள் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லையே! எங்களுக்கு அதிர்ஷ்டமில்லையே!... என்று பிறகு வந்த அத்தனை பேரும் ஏங்கித் தவித்தார்கள்.

அன்று மாலை ப்ரொபஸர் மேஸ்ட்ரி, அவர்களால் "ஜால வித்தைகள்" வெகு அழகாகச் செய்யப்பட்டதைசபையோர் கண்டு பேரானந்தமடைந்தார்கள். அதற்கடுத்த நாள் தேவி உபாஸகி, ஸ்ரீ ராஜம்மாளால் வத்ஸலா கல்யாணம் நடைபெற்றது. பலருடைய வேண்டுகோளால் செவ்வாய்க் கிழமை நீடிக்கச்செய்தோம். முதல் நாள் ஸ்ரீமான் கல்கி ஆரம்பித்த எக்ஸிபிஷன் விழாவை 5-ம் நாள் மிஸஸ் கல்கியும் அவர்களுடைய குமாரிஆனந்தியும்வந்துபார்த்து பெருமிதக்களிப்புடன் பாராட்டினார்கள். மிஸஸ் கல்கி ஒவ்வொரு பொருளையும் வெகு உத்ஸாகத்துடன் எடுத்துப் பார்த்து சபாஷ் போட்ட வண்ணம் கலையின் சிறப்பை ரஸித்துப் புகழ்ந்தார். லக்ஷ்மி காந்தியைப்போலவே தம் மனத்தை மிகவும் வசீகரித்த பொருளை வெகு உத்ஸாகத்துடன் ஆர்ப்பரித்தே பேசினார். கலைச் சிகரத்தில் ஆரோகணிக்கும் பேனா சக்ரவர்த்தியின் சகதர்மிணி யல்லவா! கலாரஸனைக்குக் கேட்க வேண்டுமா......என்று நான் பூரித்துப்போனேன்.

முக்யமாய்த் திருவல்லிக்கேணி வாஸிகளும் ப்ரமுகர்களும் ஏராளமாக விஜயம் செய்து போற்றினார்கள். ஸ்ரீமான் கல்கி திறந்துவைத்த விழாவை ஸ்ரீமதி ருக்மணி கல்கியவர்கள் மங்களகரமாய் வெற்றிகரமாய்ப் பார்த்து முடிவு செய்துவிட்ட தானது எங்களுக்கு மகத்தான சந்தோஷத்தையும் பெருமிதத் தையும் கொடுத்தது.

இந்த ஐந்து தினங்களும் எக்ஸிபிஷன் கமிட்டியாரும் தலைவி யும் வெகுவெகு அக்கரையுடன் பொறுப்புடன் ஓடியாடிபாடுபட்டு நடத்தியதை வெகு மகிழ்ச்சியுடன் குறிப்பிடவேண்டும். காந்தி உருவத்தின் பக்கலில் திண்டிக்கடையும் (கேண்டீன்) கஸ்தூரிபா அருகில் சங்கத்தின் தையல் வகுப்பும் வெகு பொருத்தமாயமைந் தது. இரண்டு வகுப்புக்களிலும் அமர்ந்து வேலை செய்தவர்களின் உத்ஸாகம் மலையளவாக ப்ரகாசித்தது. பலகாரப்பகுதியில் 60 வயதுக் கிழவி ஸ்ரீமதி ஸ்ரீனிவாஸம்மாள் ஓடிஓடிப் பலகாரங்களை எடுத்துக்கொடுத்த உத்ஸாகக் காட்சியைக்கண்டு சிறியவர்கள் வெட்கித்தான் கற்றுக்கொள்ளவேண்டும். தையல் வகுப்பில் ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி, ரங்கநாயகி, வத்ஸலா, துளஸி நால்வரும் மிக மிக உத்ஸாகத்துடன் உழைத்தது போற்றத்தக்கது.

இம்முறை உண்டிகுலுக்கும் விஷயத்தில் நமது உபதலைவி ஸ்ரீமதி புஷ்பம்மாள் ஊரிலில்லாததால் அந்தத் திருப்பணியைப் பெரும்பாலும் எக்ஸிபிஷன் கமிட்டியின் தலைவி ஸ்ரீமதி M. C. ஜானகியம்மாளே மிகத் திறமையாகச் செய்தார். E. S. L. C. வகுப்பு மாணவிகளில் சிலர் ஸ்டால்களில் நின்று சேவை புரிந் தனர். வழக்கப்படி மற்ற எல்லாஸேவகிகளும் திறமையுடன்




போடோ & ப்ளாக் : கல்கி (29-8-54 இதழ்)

உழைத்து வெற்றிகரமாக நடத்தினர்கள். கடைசிநாள் இரவு எக்ஸிபிஷன் கமிட்டியாருக்கு சாமான்கள் கொடுத்துப் பரிமளிக்கச் செய்த சகலருக்கும் ப்ரத்யேகமாக வந்தனோபசாரம் கூறியபின்னர் மங்களத்துடன் விழா இனிது பூர்த்தியாகியது.

# மேனாட்டுத் தத்துவம்

## அணுவாதிகள்

ரா. ஸ்ரீ. தேசிகன், M. A.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

அணுத் தத்துவத்தின் அஸ்திவாரத்தை நிறுவியவர்கள் லூஸிப்பஸ் (Leucippus) டெமாகிரிட்டஸ் (Democritus) என்ற இருவர்தாம் என்று சாற்றலாம். இவ்விருவரையும் பிரித்துத் தனித்து நோக்குவது இயலாத காரியம். லூஸிப்பஸ் எழுதிய நூல்களை டெமாகிரிட்டஸ் மீது சுமத்துகின்றனர். இது எல்லா நாடுகளிலும் நிகழ்கின்றது. ஆதிசங்கரர்மீது நவீன காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் சுமத்தப்படுகின்றதை நாம் பார்க்கின்றோமன்றோ? கி. மு. 440 நூற்றாண்டில் இவர் திகழ்ந்ததாகத் தெரிகின்றது. மெலிட்டஸ் (Miletus) என்ற நகரத்திலிருந்து வந்ததாக அறிகின்றோம். இவர் பௌதிக முறையில் அறிவைக்கொண்டே தத்துவத்தை (Scientific rationalist philosophy) துருவி ஆராய்ந்தவர். ஸீனோ (Zeno), பார்மினிடீஸ் இவர்களுடைய தத்துவங்கள் இவர் மனத்தைக் கவர்ந்தன. எப்பிக்யூரஸ் (Epicurus), டெமாகிரிடஸ்ஸின் அடிச்சுவட்டைப் பின்பற்றியவர் என்பது யாவரும் அறிந்த விஷயமே. இவர் லூஸிப்பஸ் என்பவர் ஒருவர் இருந்தார் என்பதையே மறுக்கின்றார். அப்படிக் காலப் பனிமூட்டத்தில் இவர் வாழ்க்கை மறைந்தது போலும். இன்னும் சில நவீன மனிதர்கள் துயின்றுகொண்டிருந்த இத்தகைய அபிப்பிராயத்தைமீண்டும் தட்டி எழுப்புகின்றனர் என்று ரசல் மொழிகின்றார். அரிஸ்டாடில் இயற்றிய நூல்களில் இவரைப் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்ற காரணத்தால் இவர் உண்மையிலே உலகத்தில் தோன்றிய ஒரு பெரியவர் என்று தோன்றுகின்றது. டெமாகிரிட்டஸ்ஸைப் பற்றி யாதொரு ஐயமும் எழவில்லை. இவர் திரேஸ் நாட்டில் அப்டிரா (Abdera) என்ற ஊரில் பிறந்தவர். அனக்சகோராஸ்ஸின் முதுமைப் பருவத்தில் இவர் இளரொளி இளமையில் உலாவினார். இவருடைய காலம் கி. மு. 420 நூற்றாண்டாயிருக்கலாம். தெற்குப் பிரதேசங்களிலும், கீழ் நாட்டுப் பிராந்தங்களிலும் அறிவை நாடி மிகுந்த விரிவான பிரயாணங்கள் செய்ததாகச் செய்தி கிடைக்கின்றது. எகிப்து நாட்டில் பல ஆண்டுகள் உறைந்தாராம். பாரசிகத்திற்கும் போனார். மீண்டும் தாம் பிறந்த அபிடிராவுக்குத் திரும்பினார். அறிவுச் செல்வத்திலுஞ்சரி, பொருள்களை ஆராய்கிற புத்தி கூர்மையிலுஞ் சரி, அந்தக் காலத்தில் இவருக்கு நிகரில்லை என்று ஸெல்லர் (Zeller) மொழிகின்றார்.

லூசிப்பஸ் தந்த தத்துவம் நோக்கத் தகுந்தது. இவர் அணுவாதியாயிருந்தபோதிலும், காரணகாரிய சர்ச்சை செய்கின்றார், பிரபஞ்சத்தின் ஒழுங்கு (The Order of the Universe)

என்ற நூலில் ஒரு காரணமின்றி ஒன்றும் நிகழாது என்று ஐய மின்றிச் சாற்றுகின்ருர்.

இவரும் டெமாகிரிட்டஸ்ஸும், ஏகதத்துவ வாதிகளல்லர் (Monism); பல தத்வங்களில் (Pluralism) நம்பிக்கை வைத்து தங்களுடைய கருத்துக்களை நிலைநாட்டினூர்கள். ஒவ்வொன்றும் பல அணுக்கள் சேர்ந்து அமைக்கப்பட்டிருக்கின்றது. அணுக்களை மீண்டும் பிரிக்கமுடியாது. அணுக்களுக்கிடையே சூன்னிய வெளி யிருக்கின்றது. அவைகள் அழிவற்றவை அவைகள் எப் பொழுதுமே இருந்து கொண்டிருக்கின்றன. அவைகள் எப் பொழுதுமே இருக்கும். அவைகள் சதா சுழன்றுகொண்டிருக்கும். கணக்கற்ற அணுக்கள் சஞ்சரிக்கின்றன. பலவிதமாய் அணுக்கள் காட்சி அளிக்கின்றன. உருவங்களிலும் சரி, பரிணமங்களிலும்சரி, அவைகள் வேறுபடுகின்றன. அரிஸ்டாடில் கருதுகிறபடி, சில அணுக்கள் அதிகமான வெப்பத்தைத் தருகின்றன. வட்டவடிவ மான அணுக்கள் அதிக உஷ்ணத்தை உமிழ்கின்றன என்று அவர் கருதுகின்ருர். அணுக்களுக்குக் கனம்உண்டா? இல்லையா? என்ற விஷயம் சர்ச்சைக்கு இலக்கான விஷயம் என்று ரசல் மொழிகின்ருர். கனமான அணுக்கள் கீழே விரைவாய் விழுந்து இலேசாயுள்ள அணுக்களை அடித்துத் துரத்துகின்றன. பிலியர்ட் பந்துகள்போலப் பாதைகளிலிருந்து விலகுகின்றன என்று ஸெல்லர் கூறுகின்ருர். டெமாக்கிரிட்டஸ்ஸின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகிற எப்பிக்கூரஸ் அவரைச் சரிவர அறியாமல் இவ் விதமே இயம்புகின்ருர். ஆனல், அகண்ட பாழில் மேலுமில்லை கீழுமில்லை என்று டெமாகிரிட்டஸ் எண்ணுகின்ருர். காற்றில்லாத நிலையில் சூரிய கிரணத்தில் மிதக்கின்ற தூசிகளுக்குச் சமானமாய் ஆத்மாவில் அணுக்கள் திரிகின்றன: இதுதான் உண்மையான கருத்தாகும்.

எல்லாம் ஏதோ காரணமின்றி நடக்கின்றன என்று அணு வாதிகள் கூறினதாக அவர்கள்மீது பழியைச் சிலர் சுமத்து கின்றனர். இது மிகத் தவருகும். அவர்கள் ஒரு காரணமின்றி ஒன்றும் நிகழவில்லை என்ற தத்துவத்தில் வேரூன்றியவர்கள் என்று நன்கு தெரிகின்றது.

இந்தப் பிரபஞ்சம் தோன்றுவானேன்? இதற்குக் காரணத் தைக் கற்பிக்கவில்லை என்று அரிஸ்டாடில் டெமாக்கிரிட்டஸ்ஸின் மீது குற்றஞ்சாட்டுகின்ருர். முதல் காரணத்தை யாவரும் கூற முடியாதன்ருே? படைத்த ஒரு கடவுள் இருக்கிருர் என்ருல் அந்தக் கடவுளை யார் படைத்தார் என்ற கேள்வி மீண்டும் எழும். இந்தச் சங்கிலிக் கேள்விகளுக்கு முடிவைக் காணமாட்டோம்.

சாக்கரீட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டாடில்—இவர்கள் ஓர் அநாதி மூலகாரணத்தை வைத்துச் சர்ச்சை செய்தனர். அணு வாதிகளோ மூலகாரணத்தை ஒப்புக்கொள்ளவில்லை; ஒரு நோக்கத்தோடு பிரபஞ்சம் ஏற்பட்டது என்ற விஷயத்தையும் (Telological) அல்லது இதற்கு மூலகாரணம் உண்டு என்ற கருத் தையும் ஏற்றுக்கொள்ளாமல் பிரபஞ்ச அமைப்பிலே எல்லாம் தங்கி யிருக்கின்றன (Mechanistic) என்று வாதிக்கின்றனர்.

சாதாரண கேள்விகளுக்குப் பதில் அளித்து விடலாம். ஏன் சோறு சமைக்கின்றோம்?—மக்கள் பசியால் வாடுவார்கள். ஏன் ரயில் பாதைகள் போடுகின்றார்கள்? மக்கள் பிரயாணஞ் செய்ய விரும்புகின்றனர். எந்த நோக்கத்தை இந்த நிகழ்ச்சி நிறைவேற்றுகின்றது என்று வினாவை எழுப்பலாம். எந்தச் சூழ்நிலை இந்தச் சம்பவத்திற்குக் காரணமாயிருந்தது என்ற கேள்வியைக் கேட்கலாம். அகில பிரபஞ்சஉற்பத்தியின் சம்பந்தமாய் இத்தகைய வினாக்கள் தோன்றுமானால் அவைகளுக்குச் சமாதானம் தருவது முடியாதகாரியம். பிரபஞ்ச வட்டத்தில் நிகழக்கூடியதற்குச் சமாதனம் கூறலாம்; ஆனால் பிரபஞ்ச மூலத்தைத் துருவி ஆராயமுடியாது என்று ரசல் அழுத்தமாய்ச் சாற்றுகின்றார். தற்காலத்தில் அணுவாத தத்துவம் ரசாயன உலகத்தில் மீண்டும் உலாவத் தொடங்கியிருக்கிறது. இத்தகைய ஆராய்ச்சியைப் பண்டைய கிரேக்கர்கள் செய்யவில்லை. அவர்களுக்குத் தர்க்க முறையில் விவகாரம் செய்வதும் ஒன்றுதான்; பொருள்களைச் சோதித்து முடிவுக்கு வருவதும் ஒன்றுதான். பார்மினீடிஸ் காண்கின்ற பொருள்களை அலட்சியம் செய்கின்றார். எம்பிடாகிளீஸ், அனக்சகோரஸ்—இவர்கள் நவீன முறையில் விஷயங்களை ஆராய்ச்சிசெய்கின்றனர். சலனம் இருக்கக் கூடுமா? இருக்க முடியாதா? என்ற விஷயத்தை தர்க்கரீதியில் அமைத்துப் பார்க்கின்றனர். ஒரு சாரார்,

"இடைவெளியில்லாமல் சலனமில்லை;
இடைவெளியில்லை; ஆதலால் சலனமில்லை"

என்று வாதிப்பார்கள்.

"இடைவெளியில்லாமல் சலனமில்லை;
சலனமிருக்கிறது; ஆதலால் இடைவெளியிருக்கிறது"

என்று வேறோர் சாரார் மறுத்துக் கூறுவார்கள்.

ப்ரகிருதி நிறைந்த வெளியில் (Plenum) சலனத்திற்கிடமில்லை என்று மொழிகின்றனர். ப்ரகிருதி நிறைந்த வெளிப்பொழுதுமே அநாதிகாலமாயிருக்கிறது என்று வைத்துக்கொண்டால் சக்கிரம் போல் சுழன்று வருகிற சலனத்திற்கு ஏன் இடமில்லாமல்போகும் என்று வாதிக்கின்றார் ரசல். ப்ரகிருதி நிறைந்த வெளியில் சலனம் முடியாது என்று வாதிக்கலாம். ஆனால் சலனமே நிகழாது என்றதை வற்புறுத்த முடியாது.

அணுவாதத்தை மிகநுணுக்கமாய் டெமாகிரிட்டஸ் அலசிப் பார்த்திருக்கிறார். பல அணுக்கள் சேர்ந்து உலகங்களாக ஆகின்றன. உலகங்கள் வெடித்து அணுவாய்ப்போகின்றன. ஆற்றில் குமிழிகள் தோன்றிமறைவனபோல இவ்வுலகங்கள் காட்சி அளிக்கின்றன. டெமாகிரிட்டஸ் ஒரு முழு ப்ரகிருதிவாதி. ஆத்மாவே அணுக்களால் ஆக்கப்பட்டது. அந்தக் காலத்தில் தோன்றிய பாமரஜனங்கள் வழிபடும் மதத்தில் அவருக்கு நம்பிக்கை இல்லை. வாழ்க்கையின் நோக்கம் இன்பமே. அவ்வின்பம் மிதத்தில் தான் பிறக்கின்றது. மாதரின்பத்தை அவர் வெறுத்தார். நட்பைமிகவும் பேணினார். பெண்களைப்பற்றி அவருக்கு நல்ல அபிப்பிராய

மில்லை. குழந்தைச் செல்வத்தை அவர் விரும்பவில்லை. வெப்பம், சுவை, வர்ணம் பொருள்களில் இல்லை, என்று டெமாகிரிட்டஸ் கருதினர். லாக்கும் (Lock) அதே கருத்தைக் கொண்டார், இவை யாவும் நம்பொறிகளால் ஏற்பட்டனவே ஒழிய வேறில்லை.

இந்தப் ப்ரகிருதிவாதம் நம்நாட்டில் தோன்ருமலில்லை. ஜாபாலி இராகவனுக்கு உபதேசம் செய்கிற முறையை உற்று நோக்குவோர்களுக்கு இது நன்கு புலனுகும்.

சமணர்களும் அணுவாதத்தைப் பின்பற்றினர்கள். உலகத்தில் பொருள்கள் அணுக்களால் அமைகின்றன என்று அவர்கள் கருதுகின்றனர். மேலும் நம் முன்னேர்கள் அணுவின் பரிமாணத்தைக் கண்டிருக்கின்றனர். தற்காலத்து ஹயிட்ரஜன் அணுவின் பரிமாணத்தின் அளவுக்கு அவர்கள் எட்டியிருக்கிருர்கள் என்ருல் இதைவிட ஆச்சரியமான விஷயம் வேறு உண்டோ? நியாய வைசேஷிகர்களும் அணுவாதம் செய்கின்றனர். அவைகள் அழியாத அநாதித் தத்துவங்கள். அணுக்கள் குணத்தில் வேறுபடுகின்றன என்று இவர்கள் கருதுகினறனர். ஆனல் சமணர்களும் கிரேக்க அணுவாதிகளும் அணுக்கள் பரிமாணத்தில் வேறுபடுகின்றனவே ஒழிய தன்மையில் வேறுபடவில்லை என்று மொழிகின்றனர். மனதுகூட ஓர் அணுதான். அழியாத ஆத்மாவில் அவர்களுக்கு நம்பிக்கை உண்டு; பரமாத்மாதான் பிரபஞ்சத்திற்கு மூலகாரணம் அவர் அழிவற்றவர்; அகண்டாகாரமானவர். ஒரு சூன்னியத்திலிருந்து உலகத்தை அவர் படைக்கவில்லை. அணுக்கள், ஆகாசம், காலம் இவைகளைக் கொண்டு அவர் படைக்கின்ருர். அவர் உபாதான காரணமன்று என்று இவர்கள் மொழிகின்றனர்.

அணுவாதம் உலகமெங்கும் பரவிக்கிடந்தது என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

டெமாகிரிட்டஸ் ஒரு சிறந்த அறிவாளி என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. அறிவுக்கு வணக்கஞ் செய்யாத ஜனநாயகத்தை அவர் கண்டித்துப் பேசியிருப்பது இங்கு நோக்கத் தகுந்தது. கருடன் ஆளவேண்டிய இடத்தில் விரியம் பாம்புகள் ஊர்வதைக் காண்கின்றோம் என்கிருர். ஜனநாயகம் எல்லாக் காலத்திலும் இப்படித்தான் இருக்கும்போலத் தோன்றுகிறது. அறிவின்மை அஜ்ஞானத்தை ஆண்டால் எப்படி இருக்கும் பாருங்கள். அறிவு தான போற்றப்படும் என்று இவர் கூறும் உண்மை பொன்னே போல் கருதத்தகுந்தது. (தொடரும்)

---

## ஸ்ரீ வைஷ்ணவ சுதர்சனத்தின் கூற்று!

ஷ பத்திரிகையின் 81—வது இதழின் அட்டையின் உட்பக்கத்தில் (இரண்டாவது பேராவில்) ஷ ஆசிரியர் நம்மைத் திருத்திப்பணிகொண்டதாக ஓர் நாடகம் நடித்து முழுப் பொய்யுரை வெளியிட்டிருப்பதை வன்மையாகக் கண்டித்து, மறுக்கிறேம். மனந்துணிந்து, கைகூசாது பொய் சொல்வதுதான் இவரது ஸ்ரீவைஷ்ணவலக்ஷணம் போலும்! —வை. மு. ஸ்ரீ.

# பகவத்விஷய ரஸாநுபவம்

## [திருவாய்மொழிப் பொருளமுத வெள்ளம்]

ஸ்ரீ காஞ்சி மஹாவித்வான் உ. வே. ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசார்ய ஸ்வாமி

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

திருவாய்மொழியின் முதற்பதிகமானது திருவாய்மொழியாயிரத்திற்கும் ஸாரமாக அமைந்திருப்பதனால் இம்முதற்பதிகத்திலுள்ள விசேஷப்பொருள்கள் பெரும்பாலும் விடாமல் விவரிக்கப்படுகின்றன. எம்பெருமான் ஆழ்வாரை ஈடுபடுத்திக்கொண்டது தனது திருக்குணங்களையும் திருமேனியையுங் காட்டியாதலால் அவற்றிலே தாம் ஈடுபட்டபடியை முதற்பாட்டிலே தெரிவித்தார். குணங்கள் ஸ்வரூபத்தைப்பற்றி நிற்குமேயொழிய ஓர் ஆச்ரயமின்றி நிற்கமாட்டாவாதலால் குணங்களுக்கு ஆச்ரயமான திவ்யாத்மஸ்வரூபத்தைப்பற்றிப் பேசவேண்டியது அவசியமாயிற்று. முதற்பாட்டிலேயே அந்த ஸ்வரூபம் 'அவன் அவன்' என்று ப்ரஸ்தாவம் செய்யப்பட்டிருக்கின்றது. அதை நன்கு விவரிக்கிறது இரண்டாம்பாட்டு—[மனனக மலமற மலர்மிசை யெழுதரும் மனனுணர் வளவிலன் பொறியுணர் வவையிலன்] வேதாந்திகளின் தரிசனத்தில் சித்து, அசித்து, ஈச்வரன் என மூன்று தத்துவங்களே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஈச்வர தத்துவத்தைப்பற்றியே இப்போது பேசப்படுகின்றது. ஈச்வரன் சித்து அசித்து என்னுமிரண்டு தத்துவங்களிற்காட்டிலும் வேறுபட்டிருக்கும்படியை இப்பாட்டு கூறுகின்றது. சேதநம், அசேதநம், என்னுமவையே சித்து, அசித்து என்ற சொற்களாலும் சொல்லப்படுகின்றன. அறிவுள்ளபொருள் சித்து; [சேதநன்.] அறிவில்லாத பொருள் அசித்து; [அசேதநம்.] இவ்விரண்டு தத்துவங்களிற் காட்டிலும் ஈச்வரதத்துவம் வேறுபட்டிருப்பது எதனாலே யென்னில்; இரண்டு தத்துவங்களுக்கும் இங்கு ஆழ்வார் தாம் இடுகிற அடைமொழிகளினாலேயே அந்த வேற்றுமை விளக்கப்படுகிறது.

சேதந தத்துவம் எப்படிப்பட்டதென்றால்; [மனனக மலமற மலர்மிசை யெழுதரும் மனனுணர்வு.] மனத்திலே யிருக்கிற காமம் குரோதம் முதலிய தீக்குணங்கள் கழியக்கழிய அதனால் மலர்ந்ததாகி மேன்மேலும் விருத்தியடைகிற மானஸஜ்ஞானமென்கிற யோகவுணர்ச்சியினால் அறியக்கூடியது சேதந தத்துவம்; அதாவது ஜீவாத்ம தத்துவம். அவ்விதமாக அறியக்கூடியதன்று ஈச்வர தத்துவம். ஏன் அறியக்கூடியதன்று என்பதைப்பற்றி மேலே விவரிப்போம். [பொறியுணர் வவையிலன்] பொறியாவது மெய் வாய் கண் மூக்கு செவியென்னும் வெளியிந்திரியங்கள்; அவற்றினால் உணரப்படுமது அசேதநப்பொருள் (அதாவது ஜடப்பொருள்); அப்படிப்பட்டவனல்லன் எம்பெருமான். மானஸஜ்ஞானத்திற்கே இலக்காகக்கூடிய ஜீவாத்மாவைப் போன்றவனுமல்லன், வெளியுறுப்புகளுக்கே இலக்காகக்கூடிய ஜடப்பொருள்களைப் போன்றவனுமல்லன் என்றதாயிற்று.

இங்கு ஒரு சங்கைதோன்றக் கூடியதுண்டு; ஈச்வரதத்துவமானது சேதந அசேதந தத்துவங்களிற் காட்டிலும் வேறுபட்டது—அவற்றைப் போன்றதன்று, என்று சொல்லவேண்டுமாகில் 'சீவனும் சடமும் போன்றவனல்லன் பரமன்' என்று

சொல்வதைவிட்டு இவ்விதமாகச் சொல்லியிருப்பது என்? என்று. உலகத்துப்பொருள்கள் ஒன்றோடொன்று நெடுவாசி பெற்றிருந்தாலும் ஏதேனுமொருபடியாலே ஒற்றுமையும்பெற்றிருப்பதுண்டு; எங்ஙனே யென்னில்; பொன்னும் கரியும் ஒன்றோடொன்று நெடுவாசிபெற்றிருக்கவும், 'பொன்னைக் காண்கிற கண்ணே கரியையும் காண்கிறது; கரியைக் காண்கிற கண்ணே பொன்னையுங் காண்கிறது' என்ன நின்ற தன்மையினால் [அதாவது ஒரே யிந்திரியத்தினால் கிரஹிக்கக்கூடியதென்னுந் தன்மையினால்] இவற்றுக்கு ஒற்றுமையும் சொல்லக்கூடியதாயிருக்குமே; அப்படிப்பட்ட ஒற்றுமையும் எம்பெருமானுக்கு சேதந அசேதநப் பொருள்களோடு கிடையாதென்று காட்டுதற்கே இங்ஙனம் கூறிற்றென்க.

இதற்குமேல் மற்றொரு சங்கை; எம்பெருமான் வெளியுறுப்புகளினால் கிரஹிக்கக்கூடியவனல்லனாயினும் அழுக்கற்ற மனத்தினால் கிரஹிக்கக்கூடியவனாக ஓதப்பட்டிருக்கின்றானே; அப்படியிருக்க அதற்கு மாறாக "மனனுணர்வளவிலன்" [மனத்தினாலும் கிரஹிக்கக்கூடாதவன்] என்னலாமோ? என்று. எம்பெருமான் பரிசுத்தமான மனத்தினால் கிரஹிக்கக்கூடியவன் என்று பிரமாணங்கள் கூறியிருப்பது உண்மை; அதற்குக் கருத்துயாதெனில், 'எம்பெருமான் அப்படிப்பட்டவனல்லன், அவ்வளவினனல்லன்' என்று கிரஹிக்கக்கூடியவனென்றதாகக் கருத்தேயல்லது 'அவன் இப்படிப்பட்டவன் இவ்வளவினன் என்று கிரஹிக்கக்கூடியவன்' என்றதாகக் கருத்தல்ல. ஆகவே, அந்தக்கரணத்தினால் ஜீவாத்மா கிரஹிக்கப்படுவதற்கும் பரமாத்மா கிரஹிக்கப்படுவதற்கும் நெடுவாசியுண்டு.

எம்பெருமான் அடியோடு ஞானத்திற்கே விஷயனல்லன் என்று சொல்லிவிட்டால், மலடி மகன், முயற் கொம்பு முதலிய பொருள்கள்போல் எம்பெருமானும் இல்லாத பொருள் என்று சொன்னதாகத்தேறுமாதலால் அப்படிப்பட்ட தவறான எண்ணம் உண்டாகாமைக்காக அவனை விசுத்தமான மனத்தினால் கிரகிக்கக்கூடியவனாகச் சொல்லிற்றேயொழிய, உண்மையில் அணுப் பொருளான ஜீவாத்மா கிரஹிக்கப்படுவதுபோல் விபுப்பொருளான பரமாத்மா க்ரஹிக்க முடியாதவன் என்க.

இதற்கு மேல் "பொறியுணர்வவையிலன்" என்னுமடைமொழியினால்—கண் முதலிய வுறுப்புகளாலும் எம்பெருமான் கிரஹிக்கத்தகாதவன் எனப்படுகிறதே, இது உண்மைதானா? எம்பெருமான் இராமபிரானாகவும் கண்ணபிரானாகவும் மற்றும் பல திருவவதாரங்கள் செய்தும் தோன்றின காலத்தில் அவனை யாவரும் கட்புலனால் காணவில்லையா இப்போதும் ஆலயங்களிலும் க்ருஹங்களிலும் அர்ச்சாரூபமான திருமேனியைக்கொண்டு நிற்கிற அப்பெருமானை நாம் யாவரும் கண்டு கொண்டிருக்கவில்லையா? இப்படியிருக்க, "பொறியுணர்வவையிலன்" என்று எங்ஙனம் சொல்லலாம்? என்று சிலர் கேட்கக்கூடும். இங்குத் தெரிந்துகொள்ள வேண்டியதாவது, இப்போது பகவானுடைய ஸ்வரூபத்தைப்பற்றிப் பேசப்படுகிறதேயொழிய திருமேனியைப்பற்றிப் பேசுகிறதன்று. திருமேனியை ராமக்ருஷ்ணாதியவதாரங்களில் ஸேவித்தார்கள் என்பதும், இப்போது நாமும் அர்ச்சைகளில்

ஸேவிக்கிரூமென்பதும் உண்மை; இதைப்பற்றித் தெரிவிக்க வேண்டிய விஷயங்கள் மேலே வரும்.

இனி, மூன்ருவது பாட்டில் எம்பெருமானுடைய லீலாவிபூதி யுடைமை அனுபவிக்கப்படுகிறது. அந்தப் பொருள் தனக்கு இல்லாதவனென்றும், இந்தப் பொருளையுடையவனென்றும் நினைக்கவும் முடியாதவனுய், நிலம் முதலான கீழுலகங்களிலும் விசும்பு முதலான மேலுலகங்களிலுமுள்ள சேதனப் பொருள் களையும் அசேதனப் பொருள்களையுமுடையவனுய், இப்படிப் புலன்களுக்கு இலக்காகிற பொருள்களோடு கலந்து நிற்கச் செய்தேயும் தான் புலன்களுக்கு இலக்காகாதவனுய் எப்பொழுதும் எங்கும் பரந்துளன் என்பது மூன்ரும் பாட்டின் தேர்ந்த கருத்து. எம்பெருமானுடைய மிக இனியவையான ஒரு பெரியதிருநாள் போலே அநுபவித்துவருகிற ஆழ்வார்க்கு, மிகவும் ஹேயமாய் இருள் தருமா ஞாலமென்று பெயர் பெற்றதான இந்த லீலா விபூதியின் ஆட்சியை அநுபவிப்பதும் ஒரு பொருளோ? ஞானிகள் அருவருக்கும்படியா யன்றே இவ்விபூதி யிருப்பது; இதனையனுபவிக்க ஆழ்வார் எங்ஙனேயிழிந்தார்? என்று ஒரு சங்கை தோன்றக்கூடு மிங்கு. கேண்மின்; இவ்விபூதி இருள் தருமா ஞாலமாயிருந்தாலும் ஆழ்வார் மயர்வற மதிநலமருளப் பெற்றவராகையாலே [அதாவது, ஞானவிகாஸம் பெற்றவராகை யாலே], அந்த ஞான விளக்கத்தினுல் இவ்விபூதியின் இழிவை நோக்காது, 'இதெல்லாம் நம் பெருமானுடைய ஆட்சியில் அடங் கியதன்றே' என்று கொண்டு அப்பெருமானுடைய ஸம்பந்தத்தை யிட்டுப் பார்க்குமவராகையின்பு அவனது ஐச்வரியங்களையெல்லாம் ஒன்றுவிடாது அநுபவிக்கிற அடைவிலே இதனையும் அநுப விப்பது தகுதியே யென்க. இங்கே நம் ஆசாரியர்கள் அற்புதமாக அருளிச் செய்த வொரு வார்த்தையை எடுத்துக் காட்டுகிரேம் காண்மின்—(ஈடு) "ராஜாக்களுக்கு நாடெங்கும் செல்லாநிற்கச் செய்தே மஹிஷிகளும் தாங்களுமாகச் சில பூந்தோட்டங்களைக் குடநீர் வார்த்து ஆக்குவது அழிப்பதாய் லீலாரஸமநுபவிக்குமா போலே 'திருவிண்ணகர்ச் சேர்ந்தபிரான் பெய்த காவு கண்டீர் பெருந்தேவுடை மூவுலகே' என்கிறபடியே, ஸர்வேச்வரனும் பெரிய பிராட்டியாருமாகக் கடாக்ஷித்தபோது உண்டாய் இல்லையாகில் இல்லையாய் அவர்களுக்கு லீலாரஸவிஷயமாயிருக்கிற லீலாவிபூ தியை அநுபவிக்கிருர்" என்று.

இனி, 4, 5, 6–ஆம் பாட்டுக்கள் மூன்றையும் ஒரு சேர அநுபவிப்போம். இவ்விடத்தில் முன்னுரைபோல் சிலவிஷயங்கள் தெரிவிக்க அவசியமாகிறது. உற்று நோக்குமின். திருவாய்மொழி யென்பது தமிழ்ப் பாட்டாயும் தோத்திர ரூபமாயுமிருத்தலால் இதில் வேதாந்தப் பொருள்கள் உள்ளனவென்று மேல் நோக்கில் அறிவது எளிதன்று. வடமொழி வேதாந்தக்கடலில் ஆழவிழிந்த ஸ்ரீராமாநுஜர் போன்ற பேராசிரியர்களும் திருவாய்மொழியைக் கொண்டே வேதாந்தப் பொருளுண்மைகளைத் தெளிந்துகொண்ட தாகச் சொல்லப்பட்டு வருகிறது. ஆனல் இதன் ஆதாரத்தை நன்கு உணரப்பெருதவர்கள் என்ன நினைக்கிருர்களென்னில், வட மொழிப் புலவர்கள் இந்தத் தமிழ்ப் பாசுரங்களைக் கொண்டா

வேதாந்த மருமங்களையுணர்வர்கள்? இது ஸம்பாவிதமன்று என்று நினைக்கிறார்கள், வாய் விட்டும் சொல்லுகிறார்கள். விசிஷ்டாத்வைத வேதாந்தத்தில் ஸ்ரீராமாநுஜர் உயர்ந்த பதவியை அடைந்து வருகிறார். அவர் ஸ்ரீ பாஷியம் முதலான நூல்களில் எழுதிவரும் வடமொழி வாக்கியங்களை ஊன்றி நோக்குங்கால் திருவாய் மொழியின் சாயையிலேயே எழுதி வருகிறாரென்பது நன்கு அறியக் கிடக்கின்றது. இவ்விஷயத்தை நாம் இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துரைத்து அன்பர்களை அகங்குளிரச் செய்கிறோம். இப்போது நாம் அநுபவித்து வருமடைவில் 4, 5, 6 ஆம் பாசுரங்களின் கருத்தை முன்னம் தெரிவித்து, பிறகு மேற்சொன்ன மருமத்தையும் மூதலிக்கிறோம்,

"நாமவனிவனுவன்" என்கிற நான்காம் பாட்டின் கருத்தாவது, நாம் முதலான தன்மைப் பொருள்களும், அவன் இவன் உவன் என்கிற ஆண்பால் சுட்டுப்பொருள்களும், அவள் இவள் உவள் என்னும் பெண்பால் சுட்டுப்பொருள்களும், எவள் என்கிற பெண்பால் வினாப்பொருளும், அவர் இவர் உவர் என்னும் பலர்பால் சுட்டுப் பொருள்களும், அது இது உது என்னும் ஒன்றன்பால் சுட்டுப் பொருள்களும், எது என்னும் ஒன்றன்பால் வினாப்பொருளும், அழியுந் தன்மையுள்ள பொருள்களும், இவை உவை அவை என்னும் பலவின்பால் சுட்டுப்பொருள்களும், நல்லவஸ்துக் களும் கெட்ட வஸ்துக்களும், எதிர்காலப் பொருள்களும் இறந்த காலப்பொருள்களும் ஆகின்ற எல்லாப் பொருள்களும் அந்த ஸர்வேச்வரனேயாம்—அதாவது, ஸர்வேச்வரனிட்ட வழக்கேயாம் என்பதாம். உலகத்திலுள்ள உயர்திணையஃறிணைப் பொருள்க ளெல்லாம் இந்தச் சிறிய பாட்டில் சொற் சித்திரிப்பினால் அடக்கப் பட்டு இவையெல்லாவற்றினுடையவும் ஸ்வரூபம் பகவானுக்கு அதீனமானது என்று தெரிவிக்கப்பட்டது.

இனி ஐந்தாவது பாட்டு 'அவரவர் தமதமது' என்பது' இதன் கருத்தாவது உலகில் பலவகைப்பட்ட அதிகாரிகள் இருக்கின்றார்களல்லவா? அவரவர்கள் தம் தமது உணர்ச்சிக்கு எட்டியபடியே ஓரோதெய்வங்களை ஸ்வாமிகளாகவெண்ணித் தொழுகின்றார்கள்; இப்படி அவரவர்களால் தொழப்படுகின்ற அந்தந்த தெய்வங்கள் அவரவர்கள் விரும்பின பலன்களைக் கொடுப்பதில் குறையற்றேயிருக்கின்றன: எதனாலேயென்னில்; ஸர்வஸ்வாமியான ஸ்ரீமந்நாராயணன் அவரவர் தம் தமது அத்ருஷ்டத்திற்கேற்பப் பலன்களைப் பெறும்படியாக அந்தந்த தெய்வங்களுக்கு உள்ளீடாக [அந்தர்யாமியாய்] எழுந்தருளியுள்ளான், அதனாலேதான் — என்பதாம். இதனால் சொல்லிற்றுவதென் னென்னில், உலகத்தில் நடக்கிற ரக்ஷணத்தொழில்கள்யாவும் எம் பெருமானுடையதே; பிரமன் சிவனிந்திரன் முதலிய இதர தெய் வங்களைக்குறித்தும் மற்றுஞ்சிறு தெய்வங்களைக் குறித்தும் அவரவர்கள் வழிபாடுகள்செய்து தாம் தாம் கோரின பலன்களைப் பெறுவதாகக் கண்டாலும் அதுவும் எம்பெருமான் தானே அத் தெய்வங்களுக்கு உள்ளீடாகவிருந்து நடத்துகிற ரக்ஷணமே யொழிய அத்தெய்வங்களே சுதந்திரமாகச் செய்துவிடுகிற ரக்ஷண மன்று என்றதாயிற்று.

இனி ஆறுவது பாட்டு 'நின்றன ரிருந்தனர்' என்பது. இப்பாட்டின் கருத்தாவது, நிற்பவர்கள் இருப்பவர்கள் கிடப்பவர்கள் திரிபவர்கள் ஆக இப்படிப்பட்ட ப்ரவ்ருத்தி சீலர்களும், நில்லாதவர்கள் இராதவர்கள் கிடவாதவர்கள் திரியாதவர்கள் ஆக இப்படிப்பட்ட நிவ்ருத்தி சீலர்களும் எம்பெருமானிட்ட வழக்கேயென்பதாம். இதில் ப்ரவ்ருத்தி சீலர்களையும் நிவ்ருத்தி சீலர்களையும் சொல்லியிருந்தாலும் அவர்களை இங்குக் கொள்ளலாகாது. ஏனென்னில், கீழே * நாமவனிவனுவன்* (4) என்கிற பாட்டில் யாவரையும் சேரப்பிடித்தெடுத்திருக்கிறது ; நின்றனரிருந்தனர்... என்று இப்பாட்டில் சொல்லப்படுகிறவர்களும் அப்பாட்டில் ஒருவகையாக அடங்கியிருப்பவர்களேயாதலால் இப்பாட்டில் சப்த பேதமேயொழிய அர்த்த பேதமில்லையென்று சொல்லவேண்டியதாகும். கூறியது கூறலென்னுங் குற்றம் இடம்பெற்றதாகும். அப்படியாகாமைக்காக இப்பாட்டின்பிரமேயத்தை வேறுவிதமாகக் காட்டுகிறார்கள் அறிவிற்சிறந்த முன்னோர்கள்.எங்ஙனேயென்னில்,

நின்றனர் இருந்தனர் கிடந்தனர் திரிந்தனர் என்று சொல்வடிவமிருந்தாலும், நிற்றல் இருத்தல் கிடத்தல் திரிதல் ஆகிற ப்ரவ்ருத்திகளே இங்குப் பொருளாம்; இப்படியே, 'நின்றிலரிருந்திலர் கிடந்திலர் திரிந்திலர்; என்றதற்கும் நில்லாமை இராமை கிடவாமை திரியாமை ஆகிற நிவ்ருத்திகளே பொருளாம். ப்ரவ்ருத்தி செய்பவர்கள், நிவ்ருத்தி செய்பவர்கள் என்கிற பொருளையே காட்டக்கூடிய சொல்வடிவம் சந்தேகமில்லாமலிருக்க, இதற்குப்ரவ்ருத்தியும் நிவ்ருத்தியுமே பொருள் என்று கொள்வது தகுதியோவென்று கேள்விவரும் ; இது ஸம்ஸ்கிருத சாஸ்திரமரியாதைக்கு இணங்கியதேயாம் ; அதாவது, வேதத்தில், யாகஞ்செய்பவன் ஸோமபானம் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஸோமபானமாவது ஸோமலதையின் ரஸத்தைப்பருகுவது. ஸோமலதையாவது ஆட்லாங்கொடி. அந்தக்கொடியை எப்படி சம்பாதிப்பது ? காடுகளில்தானே சென்று சம்பாதித்துக்கொண்டு வருவதா ? அல்லது விலைகொடுத்து வாங்குவதா ? என்று விசாரம் வருகையில் "கோ அர்க்கமேவ ஸோமம் கரோதி" என்கிற வேதவாக்கியமானது பசுவை விலையாகக் கொடுத்து ஸோமலதையை வாங்கவேண்டுமென்றது ; அந்த வேதத்திலேயே மற்றோரிடத்தில் " அருணயா ஏகஹாயந்யா பிங்காக்ஷ்யா ஸோமம் க்ரீணாதி" என்று ஓதிற்று ; இதனால் தெரிவிக்கப்படுவதென்னவென்றால், ஸோமலதைக்கு விலையாகக் கொடுக்கவேண்டிய பசுவானது சிவப்பு நிறமுள்ளதாயும் ஒருவயது சென்றதாயும் பொன்னிறமான கண்ணையுடையதாயுமிருக்கவேண்டு மென்றது. இங்கு சிவப்பு நிறமுடைய பசுவைச் சொல்லியிருந்தாலும், சிவப்பு நிறம் மாத்திரமே இங்கு விதிக்கப்பட்டதாக சாஸ்த்ரஜ்ஞர்கள் நிர்ணயிக்கிறார்கள். பசுவை விலையாகக் கொடுத்து வாங்குவதென்கிற விஷயம் ஏற்கெனவே வேறொரு வேதவாக்யத்தினால் கிடைத்திருப்பதனால் முன்னம் கிடைக்காததே இங்கு தெரிவிக்கப்படவேண்டுமாதலால் சிவப்பு நிறமுடைய வஸ்துவைச் சொல்லக்கூடியதான சொல்வடிவம் இங்கு இருந்தாலும் சிவப்பு நிறம்மாத்திரமேவிதிக்கு விஷயமாகக் கொள்ளப்படுகின்றது.

இங்ஙனே மற்றொரு த்ருஷ்டாந்தமும் காட்டுவோம்; வேதத்தில் அபிசாரம் என்று ஒரு யாகம் சொல்லப்படுகிறது; அதாவது சூனியம் வைப்பது; அந்த யாகத்தில் ரித்விக்குக்கள் தலைப்பாகையுடன் உலாவவேண்டுமென்று வேதத்தில் ஓரிடத்தில் சொல்லிற்று; மற்றோரிடத்தில் "லோஹி தோஷ்ணீஷா ரித்விஜ: ப்ரசரந்தி" என்று ஓதிற்று; அதாவது சிவப்பு நிறமுள்ள தலைப்பாகையணிந்தவர்களாக ரித்விக்குக்கள் உலாவக்கடவர்களென்றவாறு. இங்கும் சாஸ்த்ரஜ்ஞர்கள் நிர்ணயம் செய்வதென்னவென்றால், தலைப்பாகையணிவதென்பது ஏற்கெனவே கிடைத்திருப்பதால் கிடைக்காததொன்றே இங்குக் கொள்ளப்படவேண்டும். அது சிவப்பு நிறம் மாத்திரமேயாகும்; மூலத்தில் சிவப்பு நிறமுள்ள வஸ்து சொல்லப்பட்டிருந்தாலும் அந்த வஸ்துவை இங்கு விதிக்கு விஷயமாகக் கொள்ளவேண்டாவென்றும் சிவப்பு நிறம் மாத்திரமே கொள்ளக்கடவதென்றும் நிர்ணயம் செய்கிறார்கள். "நின்றனரிருந்தனர்" என்கிற ப்ரக்ருதமான பாசுரத்திலும் இதுவே நியாயந்தான்; இங்கு ப்ரவ்ருத்தி செய்பவர்களும் நிவ்ருத்தி செய்பவர்களுமெல்லாம் எம்பெருமானிட்ட கட்டளை என்பது சொல்லப்பட்டிருந்தாலும் இது "நாமவனிவனுவன்" என்கிற நாலாம் பாட்டிலேயே கிடைத்திருப்பதால் அங்குக் கிடைக்காததொன்றே இங்குக் கொள்ளப்படவேண்டுதலால் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளைச் செய்பவர்களுக்கு வாசகமான சொல்வடிவம் மூலத்திலிருந்தாலும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் மாத்திரமே இங்குக் கொள்ளப்படுவனவாக முடிக்கப்பட்டிருக்கின்றது.

ஆக, 4, 5, 6-ஆம் பாசுரங்கள் மூன்றிலும் ஸகல சேதநாசேதநங்களின் ஸ்வரூபமும் ரக்ஷணமும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் பகவானுக்கு அதீனமானவை என்று சொல்லிற்றாயிற்று. இதையேயுட்கொண்டு ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீரங்ககத்யமென்னும் நூலில் "ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதந ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம்" என்றருளிச் செய்தார். இவ்விஷயம் உபநிஷத்துக்களிலும் சொல்லப்பட்டிருக்குமல்லவா. ஸ்ரீராமாநுஜர் உபநிஷத்துக்களைக் கொண்டே இதனைக் கூறினார்' என்று கொள்ளலாகாதோவென்னில்; இவ்விஷயம் உபநிஷத்துக்களில் இப்படி வரிசையாக எங்கும் சொல்லப்பட்டிருக்கவில்லை. ஒரு விஷயம் ஒரு மூலையிலும் மற்றொரு விஷயம் மற்றொரு மூலையிலும் சொல்லப்பட்டிருக்கும். அதுவும் இவ்வளவு ஒழுங்குபாடாகச்சொல்லப்பட்டிருக்கவுமில்லை. அரியபெரிய பொருள்களையும் தெளிவாகச் சொல்லுவதென்பது திருவாய்மொழியிலேயாம். இதைக்கொண்டே ஸ்ரீராமாநுஜர் தம் நிரூபணங்களை மிக வெளிதாகச் செய்தருள்கின்றார். இராமாநுசர் தமது திவ்ய நூல்களில் பகவானுக்கு இடும் அடைமொழிகள் பலபல; அவை விசித்திரமாயுமிருக்கும்; அவையெல்லாம் பெரும்பாலும் ஆழ்வார்களின் திவ்யஸூக்திகளையே அடியொற்றியிருக்கும்.

இனி, அடுத்த ஏழாவது பாட்டு ஸ்ரீராமாநுஜர் கொண்ட விசிஷ்டாத்வைதக் கொள்கைக்கு மூலாதாரமாயிருக்கும். அது அடுத்த இதழில்.

(தொடரும்)

# குணக் குன்று

வை. மு. கோ.

109-வது நாவல்

## 20

தான் கனவில்கூட எதிர்பாராத விதம் தன் தகப்பனார் தனது கல்யாண விஷயத்தில் அபரிமிதமான பணத்தை எப்படித்தான் செலவுசெய்கிறார் என்கிற மர்மத்தை அறியமுடியாது பெரிய குழப்பத்துடன் தவிக்கையில் இந்த உத்யோகஸ்தர் சித்தப்பாமுறையில் திடும்ப்ரவேசமாய் வந்திருக்கும் ஆச்சரியம் ஒருபுறம் லக்ஷ்மியை ஒருகலக்குக் கலக்கிவிட்டது. ஏகாங்கியாய் உள்ள இந்த மனிதன் சொல்வதை நம்பிவிடமுடியுமா? என்று ஒரு க்ஷணம் கலங்கும்போது, அவள் முகத்தில் படிந்துள்ள சந்தேக ரேகையின் சாயலை வெகு நுட்பமாக உணர்ந்த உத்யோகஸ்தர் சடக்கென்று உள்ளே சென்று ஒரு புகைப்பட ஆல்பத்தைக் கொண்டு வந்து "மிஸ்டர் சேகர்! தயவுசெய்து இதைப் பார்க்கவேணும்... அம்மா லக்ஷ்மீ! வயதில் மிகச்சிறியவளானாலும் யோசனையில் நீ பெரிய உத்யோகஸ்தனாக இருக்கும் என்னைவிட அதிகக் கூர்மையும் ஆழமும் உள்ளவள் என்பதை உனது எடுப்பான புருவமும் தீர்மையான மூக்குமே எடுத்துக்காட்டுகிறது. உனது சந்தேகத்தைத் தெரிந்துகொண்டுதான் நானே இதைக் கொண்டு வந்தேன். மிஸ்டர் சேகர்!... இதோ, இவர்கள் யார் என்று தெரிகிறதா?" என்று ஒரு படத்தைக் காட்டிக்கேட்டார்...

சேகர் படத்தைப்பார்த்த உடனே, "இது என் மாமனார் மாமியார் படமல்லவா?...லக்ஷ்மீ இதோ பாரு! உங்கவீட்டு மாடியில்கூட இதேபடம் மாட்டியிருப்பதைப் பார்த்திருப்பதனால்தான் சடக்கென்று புரிந்துவிட்டது. வெகு நாட்களுக்கு முன்பு எடுத்த படமாக இருக்கவேண்டும் என்றான். லக்ஷ்மி இதைப்பார்த்ததும் அடுத்தபடத்தைத் தானே திருப்பினாள். சுமார் 7, 8 பேர்கள் சேர்ந்த க்ரூப் படமாக இருந்தது. அதிலும் தனது தாயார் தகப்பனார் இருப்பதைக்கண்ட லக்ஷ்மி மீண்டும் உற்றுக்கவனித்தாள். தன்தாயைப்போலவே ஒருத்தி அவள் பக்கத்தில் நிற்பதும் அதற்கு முன் நாற்காலியில் இதே உத்யோகஸ்தர் இருப்பதும் கண்டதுதான் தாமதம்... அவளுடைய சந்தேக மேகம் விலகி உண்மை விளங்கிவிட்டது. அதே படத்தின்கீழ் படத்திலுள்ளவர்களின் பெயர்களும் எடுத்த வருஷம் மாதம் தேதியும் எழுதியிருப்பது கண்டு, லக்ஷ்மி

ப்ரமித்துப்போய் நின்ருள். தனது தகப்பனர் தாயார் தாத்தா, பாட்டி முதலியவர்களைப் பார்த்ததும் உண்மையில் உடல் புல்லரித்தது. இவள் சிறியவயதில் தாத்தா பாட்டியைப் பார்த்திருப்பதால் உடனே அடையாளம் புரிந்துகொண்டதால் ஏதேதோ உணர்ச்சிகள் இதயத்தில்துளிர்த்தெழுந்தன. இவர் சொல்லியது பொய்யா? என்று சற்றுமுன்பு யோசித்தது எத்தனை முட்டாள்தனமாகிவிட்டது. என்னைப்பற்றி அவர் என்ன நினைப்பார்?...என்று மனத்திற்குள் வருந்தியபடியே, "சித்தப்பா! நீங்கள் மகா கூர்மையான நோக்குடையவர்கள் என்பதை உணர்ந்தேன். பெண்மையின் பேதமையினல் நான் எண்ணிக் குழம்பியதையறிந்து நீங்கள் என் சந்தேகத்தை நிவ்ருத்திசெய்து என்னைத் தேற்றியதற்காக வந்தனம் செய்வதோடு நான் உடனே நம்பாது சந்தேகித்த குற்றத்திற்கு மன்னிப்பும் கோருகிறேன். சித்தப்பா! என்னுடைய முன்னேர்கள் செய்த பாக்யந்தான் எங்களுடைய குடும்பத்தின் கண்ணியத்தைக் காத்து எங்களையும் ரக்ஷிக்கக் கடவுள் உங்களைக்கொடுத்து உதவினர்" என்று பெருமிதமாகப் பொங்கி வரும் சந்தோஷத்துடன் கூறும்போது கண்களில் ஆநந்த பாஷ்பம் தானுகப்பெருகியது.

பாவம்! எத்தனை படித்தென்ன? பட்டம்பதவிகள் பெற்று, சம்பாதித்தென்ன? மேல் நாடுகளில் சுற்றியலைந்து படாடோபத்தின் பரிபவத்தை விலைக்குவாங்கிக்கொண்டு வந்ததன்விளைவு இத்தனை தூரத்திற்குக் கொண்டுவந்துவிட்டதுதான் கண்டசுகமாயிற்று. உண்மையில் உள்ளம் குழைந்த இன்பத்தின் ஒரு திவலையைக்கூட அவர் அனுபவித்தது கிடையாது. கண்ணுக்குக் குளிர்ச்சியான சந்திரனைக் கண்ணுறக் கண்டு,பிடிக்க எண்ணி ஏமாறுவதுபோல், பேரின்பம் என்று இவர் வாழ்க்கையில் எதையோ எண்ணி எட்டாக்கனிக்குக் கொட்டாவிவிட்டதுபோல் ஏமாந்துபோன அதிர்ச்சியில் சகலமும் சூன்யமாகி வரண்ட பாலைவனத்தைப்போலாகிவிட்டதால் உணர்ச்சியற்ற மிஷன்போலிருந்த பாஸ்கரனுக்கு "சித்தப்பா"...என்று யாழின் இசையோ, குயிலின் இனிய நாதமோ!...என்று ஐயுறும்படியான மதுரத்வனியில் அழைத்ததைக் கேட்டதும், அவர் ஜென்மத்தில் கண்டிராத ஒரு புத்துணர்சசி உண்டாகி மின்ஸாரம்போல் தேகம் பூராவும் பரவித் துடிதுடிக்கச்செய்து பரவசப்படுத்தியது. அவரை மீறிய ஆனந்த அலைமோதலுடன், குழந்தாய், லக்ஷ்மீ! என்னருமை லக்ஷ்மீ! பாலைவனத்திலும் ஒரு பசுஞ்செடி முளைத்தது! அக்னிமத்தியிலும் ஒரு சீதளம் இருக்கிறது!... என்ற தத்துவத்தின் உண்மையை இப்போதுதான் அறிகிறேன்...மிஸ்டர், சேகர்! நான் எனது ரகஸியத்தை வெளியிடாமலேயே காரியத்தை மட்டும் சாதிக்க எண்ணினேன்,

ஆனால், நினைத்ததொன்று, நடந்ததொன்றாகிவிட்டது! உத்யோகப்போர்வைக்குள்ளிருக்கும் இந்த சன்யாசிக்கட்டையின் வாழ்க்கையில் இனி ஒருபோதும் மாறுதலேவராது என்று நான் எண்ணி என் சரிதையை மறைக்கமுயன்றேன். ஆனால், என் செல்வ லக்ஷ்மி...ஸௌபாக்யலக்ஷ்மி... ஆனந்த லக்ஷ்மியின் அன்பும் பாசமும் அலக்கழியச் செய்துவிட்டது.

லக்ஷ்மீ! உனக்கு ஒரு சிறியதாயார் இருந்ததைக்கூட உன் தாயார் உன்னிடம் சொல்லி இருக்கமாட்டாள். ஏனெனில், சாரதாவுடன் நானும் துலைந்துவிட்டதாகவே அவர்கள் தலைமுழுகிவிட்டார்கள். காரணம் சாரதாவை மகாபாவியாகிய நான்தான் கொன்றுவிட்டேன்...நான் கொலைகாரன்...நானே அவளுக்கு யமனாகவந்து சேர்ந்தேன்...என்று என்மீது அவர்கள் கடும்பகைகொண்டுவிட்டதோடு, கொலைக் குற்றத்தையே என்மீது சுமத்தி என்னை அடியோடு அழிக்கப் பார்த்தார்கள்...

ஆனால், சாரதா அந்த விபரீதத்திற்கு நான் இலக்காகித் தவிக்கும்படிச் செய்யாமல் தானே கடிதம் ஒன்று எழுதிவைத்திருந்ததால் ஒருவித விபத்தும் யாருக்கும்நேர இடமில்லாது போய்விட்டது. அதோடு உறவே அற்று ஒருவருக்கொருவர் முகாலோபமும் இல்லாதபடி சகல சூழ்நிலையும் அமைந்துவிட்டதால் எப்படி எப்படி எல்லாமோ நடந்து பகவானின் செயலால் உனது கல்யாணக்கடிதத்தைப்பார்த்ததும் என்னையறியாத ஒரு உணர்ச்சி உண்டாகியது. லக்ஷ்மி, 'சித்தப்பா! என்று அழைத்த இனியநாதம் என் செவிநிறைந்த பேரானந்தமாயும் குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்'' என்கிற வள்ளுவரின் தேவவாக்கின் உண்மையை...அனுபவத்தில் இந்த நிமிஷம் நான் உணர்ந்து பூரிக்கின்றேன்...செல்வீ! உனக்கு பகவான் சகல ஸௌபாக்யங்களையும் கொடுத்து ரக்ஷிக்கவேண்டுகிறேன்.'' என்று சொல்லும்போது, கண்களில் தாரைதாரையாகப் பெருகும் கண்ணீரை அவரால் தடுக்கவே முடியாதுபோயிற்று.

சேகரனுக்கும் லக்ஷ்மிக்கும் என்னபதில் சொல்வதென்றே தோன்றாமல் திகைத்துவிட்டார்கள். மீண்டும் பாஸ்கரன் கம்மியகுரலுடன் பேசத்துடங்கி, ''செல்வீ! லக்ஷ்மீ!...இன்னமும் இந்த அபாக்யவானை மகாபாவியை கொலைபாதகன் என்றுதான் உன் பெற்றோர்கள் எண்ணி வெறுப்பார்கள்.நான் சன்யாசி; நிரபராதி; வரண்ட சூன்ய வாழ்க்கையை உடையவன்...என்ற ரகஸ்யம் ஆண்டவனுக்குத்தான் தெரியும். எங்கோ ஒரு சிலருக்குப் படுபாவி குலத்ரோகி நாசகாரி சினிமாக்காரியின் கணவன் என்ற பழிச்சொல் தங்கும் ரகஸியம் தெரியுமேயன்றி மற்றப்படி என் வாழ்வு தாமரை இலைத் தண்ணீர்போலத்தான் இத்தனை நாள் கடந்துவிட்டது. இனி

யும் அப்படியே முடிவு பெறட்டும். என்னைச்சந்தித்த உறவு முறைகளையோ, மற்ற எதையுமோ வெளியில் சொல்லவேண்டாம். எதிர்பாராதவிதம்கிடைத்த இந்தப் புதிய இன்பத்திற்கு பங்கமோ, இதனல் உனக்கு ஏதாவது தீங்கோ நேரவேண்டாம். செல்வீ!...என்ன யோசனை செய்கிறாய்?'' என்று கனிந்த அன்புடன் கேட்டார்.

வெகு ப்ரீதியுடன், "சித்தப்பா! வரண்டு சூன்யமாயிருந்த பாலைவனத்தில் வாழ்வை இனிக்கச்செய்யும் குளுமையான பூங்காவனம் தானாக பூகம்பத்தில் தோன்றிக்கிடைப்பது போல் கிடைத்துள்ள பூங்காவை மீண்டும் பாலைவனமாக்கி விடத் துணிகிறீர்களா? ஆதி சரிதை எனக்குத்தெரியாது. ஆனால், இன்று கிடைத்துள்ள இப்புதிய ஆனந்த உறவைக் கண்டு என் பெற்றோர்கள் மகிழ்ச்சியடைவார்களேயன்றி தாங்கள் நினைப்பதுபோல் வெறுக்கமாட்டார்கள் என்றுதான் என்மனது நம்புகிறது. ஆகையால் பழைய விஷயங்களை அடியோடு மறந்துவிடுங்கள். ஏதோ கூடப்பிறந்த பாசத்தினால் என் தாயாரும், பெற்ற பாசத்தினால் என் பாட்டன் பாட்டியாரும் ஏதாவது வயிற்றெரிச்சலால் சொல்லி இருக்கலாம். ஆகையால், அவைகள் நிகழ்ந்ததாகவே மறந்துவிடுங்கள், சித்தப்பா! நான் இப்போதே என் நகப்பனுருக்குப் போன் செய்து வரவழைக்கட்டுமா?'' என்று நயமாகக் கேட்டாள்.

பாஸ்கரன்:—செல்வீ! வேண்டாபம்மா! சன்யாசி வாழ்க்கையில் ஊறிப்போன எனக்கு மீண்டும் பந்தம் ஏதும் வேண்டாம். என்னை ஒரு அன்னியனாகவே எல்லோரும் எண்ணி நடவுங்கள், உன் பெற்றோருக்குக்கூட இந்த ரகஸியம் தெரிய வேண்டாம். அந்த இருபெண்களும் தூர இருப்பதால் அவர்களுக்கு நாம் பேசும் எந்தவிஷயமும் தெரியாது. என் மனைவியின் பயங்கர மரணம் என்னை ஏதோ செய்து உந்தியதால் நான் இந்த விஷயத்தை உன்னிடம் சொல்லநேர்ந்தது. அவளைப்போல் நீயும் மகா மானி என்பதும், இவர் என்னைப் போல் நாகரீகப் பேர்வழி என்பதும், உன் மாமியார், நாத்தனார்கள் சினிமாப்பித்தர்கள் என்பதும், சகலமும் தெரிந்திருப்பதனால்தான் உங்கள் குடும்பத்தைக் காக்கும் பொருட்டு நான் வலியவந்து விஷயத்தைச் சொன்னேனே யல்லாது, நான் பழையபடி பந்து ஜனங்களிடையே உலாவி என் மானத்தைக் குலைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆகையால், என்மீது உங்களுக்கு நம்பிக்கையும் ப்ரீதியும் உண்மையில் இருக்குமாயின் என் வேண்டுகோளை நிலைநாட்டுங்கள். இனி, சேகரனின் உத்யோக உயர்வுக்கும், உயர்ந்த பதவியில் ப்ரகாசிக்கச் செய்வதற்கும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகையால், இந்த நாடகம் இதோடு முடிவடையட்டும்— என்று அழுத்தமான த்வனியில் கூறினார்.

தம்பதிகளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. சில நிமிஷங்கள் தம்பித்து நின்றூர்கள். லக்ஷ்மிக்குமட்டும் இவருடைய உறவை பலப்படுத்தித் தமது குடும்பத்தில் ஒருவராகச் செய்துகொள்ளவேண்டும் என்கிற ஆசை பரிபூர்ணமாய் எழுந்தது எனினும், அவருக்கு விருப்பமில்லாத விஷயத்தில் தலையிட்டால் எப்படியாகுமோ?...என்கிற பயமும் தோன்றியதால் மெல்லவும் மாட்டாமல் விழுங்கவும் மாட்டாமல் தவித்தாள்.

"சித்தப்பா! ஒரே ஒரு நிபந்தனைக்குமட்டும் உட்பட்டு நடக்கமுடியுமா? அதாவது என் பெற்றோரிடம் சமயம் பார்த்து இந்தவிஷயத்தைப்பற்றி நான்பேசுகிறேன். அவர்கள் பழைய த்வேஷ மனப்பான்மையுடனேயே இருந்தார்களானல் இப்படியே விட்டுவிடலாம்; அவ்வாறு இல்லாமல் சகஜ பாவத்தில் மாறி இருந்தார்களானல் உடனே அவர்களை அழைத்துக்கொண்டு ஓடிவருகிறேன். என்ன சித்தப்பா? சம்மதமா?"...என்ருள்.

பாஸ்கரன்:—செல்வி! எனக்குச் சம்மதம், அஸம்மதம் எல்லாம் ஒன்றுதானம்மா! எனக்கு இனி உலகபந்தமே வேண்டாம் என்ற திடமான எண்ணத்துடன் ஒருவிதமாக என் வாழ்நாளுக்கு வழி வகுத்துக்கொண்டுவிட்டேன். ஆகையால் இதைப்பற்றி இதோடு விட்டுவிடுங்கள்...வெகுநேரமாகிவிட்டதால் இனியும் பேசிக்கொண்டிருப்பது சரியல்ல. நீங்கள் போய்வாருங்கள்—என்று தானே அவர்களை வீட்டிற்கு அனுப்புவதற்குத் தயாரானர்.

லக்ஷ்மி:—சித்தப்பா! உங்களிஷ்டப்படியே நடக்கிறோம். ஆனல், நாளையதினம் விருந்துக்குத் தாங்கள் கட்டாயம் வரவேண்டுமென்று நாங்கள் ப்ரத்யேகமாய் வேண்டிக்கொள்கிறோம். எங்கள்மீது க்ருபை கூர்ந்து தவருமல் வந்து எங்களை மகிழ்விக்கவேணும். மறுபடியும்எங்களுக்குத் தாங்கள் செய்த பேருதவிக்காக எங்கள் வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்—என்று வேண்டினள்.

எதனுலேயோ பாஸ்கரனின் வாயடைத்துப்போய்க் கண்களில் நீர்முட்டிக் குளம்போல் தேங்கிவிட்டது. தலையை மட்டும் ஆட்டி பதில் தெரிவித்தார். அவருடைய உணர்ச்சியின் வேகத்தை அவரது முகமே எடுத்துக்காட்டியது. நாய்க்கடி உபத்திரவமும் மனத்தில் பலவிதமான வேதனைகளும் சூழ்ந்து வருந்தும் கிரிஜா, வனஜா என்னும் இருபெண்களும் தூரச்சென்று மறைவான இடத்தில் படுத்திருந்தனர். அவர்களை அழைத்துக்கொண்டு கிளம்பினர்கள். ஒவ்வொருவருடைய இதயத்திலும் ஒவ்வொருவிதமான புயல் அடித்துக்கொண்டிருந்தது!

மீனாக்ஷிக்குப் பயித்தியந்தான் திடீரென்று பிடித்து விட்டதென்கிற பயமும் அதிர்ச்சியும் உண்டாகியதால் வந்திருந்த உறவினர்களில் ஒருவர் மீனாக்ஷியின் கணவனைத் தாதாவென்று, வெளியிலிழுத்துக்கொண்டு வந்து அஸாத்ய கலாட்டா உண்டாக்கிவிட்டதைக் கண்டு சுந்தரேசனுக்கு மிக்க திகிலும் கலவரமும் உண்டாகிவிட்டது. ஏற்கெனவே இவருக்கே சிறிது சந்தேகத்துடன் மனத்தில் வேலை செய்யும் விஷயத்தை இவர்கள் அம்பலமாக்கிவிட்டால் என்ன செய்வது...என்கிற பயம் வேறு பாதித்ததால் மெல்லத் தன்னைச் சமாளித்துக்கொண்டு, “அன்பர்களே தயவுசெய்து வீண்கலாட்டா எதுவும் செய்யாமலிருக்க வேண்டுகிறேன். நீங்கள் நினைப்பதுபோல் மீனாக்ஷிக்குப் பயித்தியமும் பிடிக்கவில்லை, மூளையும் கலங்கவில்லை. தன்மகளுக்கு இத்தகைய பயங்கரமான நாய்கடித்துவிட்ட துக்கத்தில் மனது அதிர்ச்சியடைந்துவிட்டது, அவ்வளவுதான். அனாவச்யமான கலாட்டா செய்து வீணாக ரஸாபாஸமாக்கிவிடவேண்டாம். நீங்களெல்லோரும் தயவுசெய்து உள்ளே போய்விடுங்கள். நான் உள்ளே போய் சமாதானப்படுத்துகிறேன்” என்றுகூறிவிட்டு உள்ளே சென்றார்.

எத்தனை சொல்லியும் இந்த ஜனங்களின் சந்தேகம் தெளியவே இல்லை. குசமசகுசமசவென்று கொட்டியளக்கும் பேச்சு வலுத்தது. அதில் ஒரு அம்மாள் மெனக்கெட்டு ஓடிச் சென்று மாடியறையில் ஏதோ வேலையாயிருக்கும் சொக்கம்மாவிடம்...“சம்மந்தியம்மா! நீங்கள் இந்த உலகத்திலேயே இல்லைபோலிருக்கிறதே! கீழே காலைமுதல் அமளிதுமளிபடும் விஷயமே தெரியாதா, வெட்கக்கேடு! உங்க சம்மந்தியம்மாவின் பெண்ணையும் இன்னொரு உறவுப்பெண்ணையும் நாய் கடித்துவிட்டதாம். உங்கசம்மந்தியம்மாளுக்குத் திடீரென்று மூளை கலங்கி, பயித்தியம் பிடித்துவிட்டது. வீட்டை த்வம்ஸம்செய்து படங்களை எல்லாம் உடைத்துச்செய்யும் கோராமையைச் சகிக்கமுடியவில்லை. பாவம்! அந்த மனிதர் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறார். அப்படி வந்து பாருங்கள்” என்று பலமான ஆழத்தைத் தோண்டி விதையைவிதைத்தாள்.

இதைக்கேட்ட சொக்கம்மாள் கதிகலங்கிப்போய், செய்துகொண்டிருந்த காரியத்தை உதறிவிட்டு, அலையக்குலைய ஓடிவந்தாள். இதேபோல் ஒருவர் லக்ஷ்மியின்பிதாவிடம் சென்று இப்படியே டமாரமடித்துவிட்டார். பாவம்! அவரும் கதிகலங்கி ஓடிவந்தார். ஏதோ குசமச நடக்கிறது என்றுமட்டும் ஊகித்தாரேயன்றி, இத்தகைய விபரீதம் நடந்துவிட்டிருக்கிறது என்று யாருமே அறியவில்லை. திகிலுடன் கீழே ஓடிவந்தார்கள்.

இதற்குள் சுந்தரேசன் மனைவியின் முன்பு நிதானமாகச் சென்றார். அப்போது மீனாக்ஷி பெட்டியைத் திறந்து அதற்குள் அனாகரீகமென்று அடைத்துவைத்திருந்த பழைய மாதிரியான உயர்ந்த புடவைகள், நகைகள் இவைகளை எடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். "மீனாக்ஷி! பழைய உடைகளின் மதிப்பும் பழைய நகைகளின் கண்ணியமும் இப்போது தான் தெரிகிறதல்லவா! இந்தப் பழையகால நகைகளின் அழகும் பணத்தில் அதிக மதிப்பும் புதிய நாகரீக நகைகளிலிருக்கிறதா பாரு! ஏதோ, நல்ல காலத்திற்குத்தான் இன்றைய சம்பவங்கள் நிகழ்ந்திருக்கிறது!....மீனா! உனக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதாக எண்ணி வீட்டில் எல்லோரும் ஒரே கலாட்டா செய்கிறார்கள். ஆகையால், உனக்கு ஒன்றுமில்லை என்பதைக்காட்ட நீ முதலில் வெளியே வந்துவிட்டுப்போ! விடிந்தால் வீட்டில் விசேஷம்; இன்று வீடு படுகிறபாடோ ராமராம! நினைக்கவே பயமாயிருக்கிறது. இன்னும் சேகரன் வரவில்லை; அவன் வரும்போது உனக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதென்கிற புகார் வேறு கிளம்பிவிடப்போகிறது. முதலில் இவைகளைப் பூட்டிவிட்டு, வெளியே வா! அதோ பாரு, உன் உறவினர்களே எப்படி ஜன்னலால் பார்க்கிறார்கள்" என்று காட்டினார்.

மீனாக்ஷிக்கு உண்மையில் மூளையே கலங்கிவிட்டது போன்ற அதிர்ச்சிதான் உண்டாகி வதைத்தது. தான் உடைத்த படத்தை எல்லாம் எடுத்துக் கண்காணாத இடத்தில் போட்டுவிட்டு வெளியே வந்தாள். வெளியிலிருப்பவர்கள் மீனாக்ஷியைப் பார்க்கவும் அவளருகில் வரவுங்கூட பயப்பட்டு ஏதோ 'பீபில்ஸ் பார்க்கு' ஜந்துக்களைப் பார்ப்பதுபோல விலகிநின்றே பார்த்தார்கள்.

இதைக் கண்ட மீனாக்ஷிக்குச் சற்று கோபமாகவே இருந்தது. மிக்க அழுத்தமான குரலில் பேசத்துடங்கி, "இதென்ன பார்வை? இதென்ன குசமசபேச்சு? நானும் உங்களைப்போல் ஒருத்தியாகத்தான் இதே வீட்டில் வளைய வருகிறேன். என்னை மட்டும் பீபில்ஸ் பார்க்கில் கம்பிக்குள் இருக்கும் மிருகங்களைப் பார்ப்பதுபோல் பார்க்கவேண்டாம். மனிதர்களுக்கு இன்பமும் துன்பமும் கடலின் அலைகளைப்போல் ஓயாமல் பொங்கிக் குமுறிஉடைந்துகொண்டேதானிருக்கும். அந்தந்த காலத்தில் அதை அனுபவிக்கும் மனிதர்களுக்குத்தான் அந்த உணர்ச்சியின் சக்தி தெரியும். நல்லவேளையாக எனக்குப் பயித்தியம் பிடிக்கவில்லை. அநியாயமான குழப்பத்தை உண்டாக்க வேண்டாம்" என்று கோபத்துடன் கூறியபோதுதான் சொக்கம்மாளும் மிரண்டு பார்த்தபடி அங்கு வந்தாள்.

அவளைப் பார்த்த மீனாக்ஷி, "ஓகோ! எனது பயித்தியம் உங்களையும் பயப்படுத்துகிறதுபோல் தெரிகிறது. ஒரு பெரிய

தேள் உள்ளே படத்தின்மீது ஓடியது. படத்தை எடுப்பதற்குள் எங்காவது மறைந்து கொட்டிவிடப்போகிறதே;படத்தின் கண்ணாடி போனால் நாளைக்குப்போட்டுக்கொள்ளலாம்; நாளை வீட்டில் விசேஷகாலத்தில் யாரையாவது கொட்டி வேதனையை உண்டாக்கிவிடப்போகிறதே ; ஏற்கெனவே உள்ள வேதனைகள் போதும் என்றதனால் படத்தின்மீதே அடித்துத் தேளைக் கொன்றுபோட்டேன். இதுவா ஒரு பெரிய அமர்க்களமாகிவிட்டது !"...என்று கூறும்போது லக்ஷ்மி, வனஜா முதலியவர்கள் வந்துவிட்டார்கள்.

கன்றைக் கண்ட தாய்ப்பசுபோல் மீனாக்ஷி வனஜாவிடம் சென்று கட்டித் தழுவிக்கொண்டு கண்ணீரைவிட்டாள். வனஜாவும் சிறிய குழந்தையைப்போல் "அம்மா !" வென்று கதறியவாறு தாயைக்கட்டிக்கொண்டு அழுதவாறு, "அம்மா! என்னைக் கோபிக்காதேம்மா! அண்ணி சாமான்யப் பெண்ணல்ல; அவள் குணக்குன்று...குடும்ப விளக்கு...என்றால் தகும். அம்மா ! இனி அண்ணி சொல்கிறபடியே நான் நடப்பேன்" என்று அண்ணியின்மீது தனக்குப் பொங்கிவரும் புதிய அன்பு உணர்ச்சியை அப்படியே கொட்டியளந்தாள்.

அதேசமயம் இந்த நாய்க்கடியின் விஷயத்தையும் பெண்ணுக்குக் கார் விபத்து உண்டாகியதையும் கேள்விப்பட்டு ஓடோடி வந்த கிரிஜாவின் தாயாருடைய கண்களில் தீப்பொறி பறக்கிறது. தன் மகள் கட்டுகளுடன் முகம் வாடிவதங்கிச் சுருங்கிப்போயுள்ள நிலைமையில் இருப்பதைப் பார்த்து, "போதும் ! உங்கள் வீட்டிற்கு என் மகளை அனுப்பியது, போதும் ! உடம்பு நிறைய நகைகள் அதிலும் ஐம்பத்துக்காக —இரவல்வேறு வாங்கிப்போட்டு—இரண்டு பெண்களைமட்டும் தன்னந்தனியாய் ஊர்கூப்பிட அனுப்பியலக்ஷணம் போதும் ! உங்கள் பெண் வனஜாவுடன் சேர்ந்துசேர்ந்து என் கிரிஜாவின் புத்திகெட்டு குட்டிச்சுவராகிவிட்டது. நானும் என் மகனும் எத்தனையோ விதத்தில் கட்டுப்படுத்திப்பார்த்தும் கேட்கவில்லை. கல்யாண ஊரழைப்பதற்காக என்று நீங்கள் கேட்டதால்தான் தாக்ஷிண்யத்திற்காக அனுப்பினேன். காலையில் வந்த பெண் இன்னும் வரவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில், எங்க வீட்டிற்குப் பக்கத்துவீட்டுக்காரர் வந்து விஷயங்களை கூறியதும் எங்கள் உயிரே போய்விடும் போலாகிவிட்டது!...சினிமாக்காரியின் வீட்டிற்கு நீங்கள் துணிந்து வயதுவந்த பெண்களை எப்படித் தனியே அனுப்புவீர்கள் ? சினிமாக்காரனுடன் துணிந்து ஆஸ்பத்திரி வாசலில் காரில் நிற்க எப்படி அனுமதித்தீர்கள்? சினிமாக்காரியானாலும் ஒருசமயம் பொறுக்கலாம்; சினிமாக்காரனுடன் தனித்துப்போகும் துணிச்சலைக் கொடுப்பதற்காகத்தான் என்மகளை நீங்கள் கூப்பிட்டீர்களா ?...உங்கள் கண்ணியமென்ன?...

குடும்பத்தின் பெருமை என்ன? இந்த வெட்கக்கேடான செய்கை தெரிந்தால் இந்தப் பெண்ணை யாராவது மதித்துக் கட்டவருவார்களா? சம்மந்திகளுக்கு இளப்பமாகிவிட்டால் எங்கள்கதி என்னவாவது? அழைப்புக்கிணங்கி அனுப்பிய தற்கு இதுதானுபலன்? நாய்க்கடியும் நாயினும் கேடுகெட்டச் சினிமாபீடையின் சிநேகமும்தான் பரிசா!"...என்று வாயில் வந்தபடி எல்லாம் வியவஸ்தைகெட்டுத் தாறுமாருகத் திட்டிக் கத்தக்கிளம்பிவிட்டாள்.

மகா புத்திசாலியும் யூகசாலியுமான லக்ஷ்மி, கிரிஜாவின் தாயார் வரும் வேகத்தையும், கோபத்தையுங் கண்ட உடனேயே...இந்தம்மாள் ஏதோ பெருத்தசண்டைபிடிக்கத்தான் வருகிருள். வீட்டிலிருப்பவர்களுக்கு விஷயம் பட்டதும் படாததுமாயிருக்கும் அரைகுறை நிலையிலேயே இருக்கட்டும். இந்தம்மாள் ஏதாவது புதை பாணத்தைக் கிளப்பிவிடப் போகிருளே...என்கிற பயத்தினுல் முன்கூட்டிப் பெண்டுகளை எல்லாம் தானும் கண்ஜாடைகாட்டி, புருஷர்களை எல்லாம் தன் கணவனைக்கொண்டும் மாடிக்கு அழைத்துச்சென்று ஏதேதோ பரிசுகள் வந்துள்ள சாமான்களை எல்லாம் காட்டும் பாவனையில் அவர்களைத் தடைகட்டிப்போட்டுவிட்ட ஆச்சரியத்தைக் கண்டு சேகரன் உள்ளுக்குள் வியப்புக்கடலாடினுன். தன் மனைவியின் சமயோசிதமான புத்திசாலித்தனத்தைக் கண்டு உள்ளுக்குள் பூரித்தபடி இத்தனை நெருக்கடியான நிலைமையிலும் சந்தோஷத்தை யடைந்து லக்ஷ்மியையே உற்றுக் கவனித்தான்...

தனக்கும் தன் கணவனுக்கும் கல்யாணத்தில் வந்த பரிசுகளை எல்லாம் எடுத்துப் பரப்பிவைத்துவிட்டுத் தன் தாயாருக்குக் கண்ஜாடை காட்டிவிட்டுத் தான் இமே புள்ளிமான் போல் துள்ளிக்குதித்து ஓடிவந்து, கிரிஜாவின் தாயாருடைய காலைப்பிடித்துக்கொண்டு, வணங்கியவாறு, "மாமீ! உங்கள் இதயத்தை இந்த அசட்டுச் சமபவம் எத்தனை தூரம்பாதித்துவிட்டது என்பதை நாங்கள் நன்ருக உணர்கிருேம். எங்க மாமியார் வேண்டுமென்று ஒரு சினிமாக்காரி வீட்டிற்கும் இந்தப் பெண்களையனுப்பவில்லை. தாங்கள் ஏதோதப்பிதமான அபிப்ராயத்துடன் பேசுகிறீர்கள். இக்காலத்தில்தான் யார் யார் எவரு வஸிப்பது என்கிற வித்யாஸமில்லாது போய் விட்டதன் அனர்த்தத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துவிட்டது.

அதாவது ஒரு சினிமாக்காரியின் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் என் தகப்பனுருடைய சிநேகிதர் குடி இருப்பதால் அந்த வீட்டை அழைக்கச்சொல்லி நான்தான் சொல்லியனுப்பினேன். வீடு தெரியாமல் தப்பிதமாகச் சினிமாக்காரியின் வீட்டில் நுழைந்துவிட்டார்களாம். அதோடு கார்

விபத்து ஒன்று, ஒரு சினிமாக்காரியால் உண்டாகிய சமயம் அதிலிருந்து நாய்கள் கடித்துவிட்டது. எங்கள் வனஜாவைக் கூடத்தான் கடித்திருக்கிறது. எதிர்பாராத விபத்துக்கு யார் என்ன செய்யமுடியும்!...உங்களை நான் ப்ரத்யேகமாய் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். இதை இம்மட்டுடன் விட்டு விடுங்கள். பிறர் அறியாமல் மூடி மறைப்பதுதான் நமது கடமையேயன்றி, நாம் இதை வெளியிட்டு பகிரங்கப்படுத்து வதுதான் தவறு. உங்கள் கிரிஜாவின் விஷயம்போலத்தான் எங்கள் வனஜாவின் விஷயமும். இந்த அம்சத்தில் இரண்டு பேருக்கும் பாதிக்கப்படாமல் காக்க நாமல்லவா முன்வர வேண்டும். தீரயோசனை செய்யாமல் ஆத்திரத்தில் பேசி விடுவது எப்போதும் தவறுதலாகமுடியும். நீங்களும் அன்னியரன்று. ஒரு சிறிய தவறுதல் ஒருவரும் எதிர்பாராத வகையில் நடந்துவிடுமாயின் அதை எல்லோரும் திருத்தி மாசு மறுவின்றிச் செப்பனிடப் பார்க்கவேண்டுமே யன்றி இப்படிச் சிதறிவிட்டால் என்ன செய்வது? தயவுசெய்து இந்த விஷயத்தை இதோடு விட்டுவிட்டு மேலே ஆகவேண்டிய காரியங்களை நடத்தவேணும்; மாமீ! தயவுசெய்து மன்னிக்க வேணும்" என்று கண்ணீர் பெருக உணர்ச்சியுடன் மன்றாடிக் கேட்ட அழகு கிரிஜாவின் தாயாருடைய ஆவேசத் தணலை ஒருவாறு அணைத்துவிட்டதென்றே சொல்லலாம்.

"நேற்று காலையில் கல்யாணமாகி வந்த பெண்ணு இவள்! எத்தனை முன்யோசனையுடன் அடக்கமாயும் மனத்தைக் கவரும் விதமாயும் பேசுகிறாள்!...வாஸ்தவத்தில் இந்த வெட்கக் கேட்டை நானே வெளிப்படுத்திவிட்டால் பிறகு வரப் போகும் அபகீர்த்தியை உணராது போய்விட்டோமே! எதற்கும் நிதான யோசனை யில்லாவிட்டால் ப்ரயோஜனமேது?" என்று தனக்குள் எண்ணி சமாதானமடைந்தபடி, லக்ஷ்மியைத் தூக்கி நிறுத்தித் தடவிக்கொடுத்து, "அம்மா! நீ என்னைவிட வயதில் எத்தனையோ சிறியவளாயிருந்தும் இத்தனை பெரிய குட்டிச்சுவர்போன்ற எனக்கே புத்திசொல்லும் திறமையுடன் விளங்குகிறாய்; மீனாக்ஷியம்மாள் செய்த பாக்யம் இது" என்று லக்ஷ்மியை ஒரு அத்யாயம் தோத்திரம் செய்யத் துடங்கிவிட்டாள்.

லக்ஷ்மி:—மாமீ! நாளை விருந்துக்காக வந்திருப்பவர்கள் யாருக்கும் இந்த விஷயம் எதுவுமே சொல்லவேண்டாம். என்னுடைய தாயாருக்குக்கூடத் தெரிவிக்கவேண்டாம். நல்ல பெரிய டாக்டருக்கு போன்செய்து வரவழைத்து உடனே காட்டி, தக்க சிகிச்சை செய்தால் சரியாகிவிடும்; மாமீ! பயப்படவேண்டாம். நீங்கள் இங்கிருந்து சகலகாரியங்களையும் மாமியாருக்கு ஒத்தாசையாயிருந்து கவனித்துப் பூர்த்தி செய்யுங்கள். கிரிஜா சற்று பயப்படுகிறாள்; அவளையும்

சமாதானப்படுத்துங்கள்; வனஜாவைக்கூட நீங்கள் தேறுதல் கூறித் தேற்றுங்கள்" என்று ஒரேயடியாய்ப் பலவிதமான பொறுப்பையும் பாரத்தையும் அத்தம்மாளிடமேஒப்படைத்து விட்ட பெருமையில், அத்தம்மாள் முற்றிலும் மாறிப்போய் பழைய ஸ்வரூபத்தில் காணப்பட்டாள்.

உண்மையில் லக்ஷ்மியின் தைரியத்தையும் சமயோசித யோசனையையும் கண்டு மீனாக்ஷி ப்ரமித்துப்போய் அப்படியே தம்பித்துவிட்டாள்! தன்னிடம் சண்டைக்கு வந்தவளிடம் தானும் எதிர்த்துச் சண்டைபோடவே ஆத்திரம் தூண்டிய சமயம், குணக் குன்றாய்த் தோன்றி சமரசப்படுத்தி விட்ட வியப்பை எண்ணி எண்ணி வியப்புற்றாள். அவளைவிட அவள் கணவருக்கு ஆச்சரியமும் சந்தோஷமும் தாங்காமல் பூரித்துப்போய் அந்த உணர்ச்சி ஆனந்த பாஷ்பமாயும் பெருகியது. லக்ஷ்மியை வாயார வாழ்த்தி மனதார ஆசீர்வதித்ததோடு எத்தனையோ ஜென்மாந்தரங்களில் செய்த புண்ணியந்தான் இத்தகைய க்ருஹலக்ஷ்மி நமக்குக் கிடைத்தாள்...என்று பரிபூர்ண உணர்ச்சியுடன் எண்ணினார்.

எத்தனை வீடுகளில் மருமகள் என்கிற பெயரில் வரும் ப்ரம்மஹத்திகள் — துடைகாலிப் பிணங்கள் — கொண்டவீட்டிற்கும் நமனுகிப் பிறந்தவீட்டிற்கும் பேயாகி அலைவதைப் பார்க்கிறோம்! மருமகள் கிடைப்பதற்குமட்டும் மகத்தான பாக்யம் இருக்கவேண்டும். என்னுடைய அதிருஷ்டமே அதிருஷ்டம். என் செல்வன் சேகரனும் என் செல்வி லக்ஷ்மியும் பல்லாண்டு பல்லாண்டாகத் தேனும்பாலும்போல வாழவேண்டும். இன்று நேரவிருந்த வெட்கக்கேடு, இந்த மகிமந்திரியின் துணிகரமான — சமயோசிதமான — யோசனையும் செய்கையும் இல்லை என்றால் தீருமா? ஆறுமா? எல்லாம் பகவானின் நற்செயல். எனக்கு இவள் மருமகள்மட்டுமா? என் குலவிளக்கு — குணக் குன்று" என்று தனக்குள் மிகமிகப் பெருமிதத்துடன் எண்ணிப் பூரித்தார்.

அன்று வேறு எத்தகைய புதிய அதிர்ச்சியுமின்றி ஒருவாறு கழிந்தது. நாய்க்கடிக்கென்றே ஸ்பெஷலாயுள்ள டாக்டரிடம் காட்டி வேண்டிய சிகிச்சைகளைச்செய்து இரண்டு பெண்களையும் தனித்த விடுதியில் படுக்கவைத்தார்கள். லக்ஷ்மிக்கு மட்டும் தூக்கமே பிடிக்கவில்லை. ஏற்கனவே தன் பிதாவின் அதீதச்செலவு செய்யும் மர்மத்தையறியத் துடிப்பது ஒன்று. மற்றொன்று இன்றைய புதிய சித்தப்பா உறவுமுறை கிடைத்ததின் விஷயம். அவரோ மிக்க தயாளகுணமுடையவர். ஏராளமாய்ச் சம்பாதிக்கிறார். பிச்சல் தொல்லை ஒன்றுமில்லை. பணமோ ரக்கைமுளைத்துக்கொண்டிருக்கிறது. நம் பிதாவோ பெரிய சம்ஸாரி. பழைய விரோதத்தைப் பாராட்டாமல் எப்படியாவது இவருடைய உறவுமுறையைப்பிடித்துக்கொண்

டால் குடும்பத்திற்கு நன்மையாயும் உபகாரமாயும் இருக்குமே. இன்றிரவே இந்த விஷயத்தைப்பற்றி அப்பாவிடம் பேசித் தெரிந்துகொண்டால் நல்லதாகும். இதற்குச் சமயம் வாய்க்க வேணுமே!...நாளை ஒருவேளை அவர் வந்தால் அதற்குள் இது விஷயம் இரண்டில் ஒன்று தெளிவாகிவிட்டால் போதும்... என்ற யோசனையே மனத்தில் போராடியதால் தான் கவனிக்க வேண்டிய வேலைகளைக் கவனித்துவிட்டுப் பாலும் பழமும் எடுத்துக்கொண்டு தன்னறைக்குச் சென்றாள். சேகர் ஆபீஸ் கட்டுகளைப் பார்த்துக்கொண்டிருப்பதைக்கண்டு தியங்கினாள்.

சேகர் அன்பு ததும்ப, "லக்ஷ்மீ! இந்த வேலைகளை முடிப்பதற்காக நான் உட்கார்ந்திருக்கிறேனேயன்றி என் மனத் திரையில் இன்றைய ஸம்பவங்களே தோன்றிக் கலக்குகிறது! அந்தப் பாவி சினிமாக்காரி பிழைப்பாளோ, சாவாளோ. அவளுக்கு இன்றிரவுவரையில் ப்ரக்ஞை வரவில்லையாம்.... இந்த ஊழல் பிணத்தின் கணவர்தான் பாஸ்கரன் என்பதும் அவர் கீழேதான் நான் வேலை பார்க்கிறேன் என்பதும் ஒரு சில சினிமாக்காரர்களுக்கு நன்றாகத் தெரிந்திருப்பதால இவளை வேண்டுமென்று கொல்வதற்காகவே பாஸ்கரன் என் காரை மூட்டியடிக்கும்படி ஏவியதாயும் அம்மாதிரி செய்தால் அவர் எனக்கு உத்யோக உயர்வு செய்து கொடுப்பதாயும் ஒரு சதியான சூழ்ச்சிசெய்து இந்த விபத்தை உண்டாக்கி விட்டதாக ஒரு அநியாயக் கல்பனையைச் செய்து, இந்த வ்யாஜத்தைக்கொண்டு பாஸ்கரனையும் என்னையும் சந்தியில் இழுத்து அவமானப்படுத்த வேண்டும் என்று ஒரு சிலர் கங்கணங்கட்டிக்கொண்டு அதற்குத் தக்கபடி ஜோடிக்கத் தயாராயிருப்பதாயும் ஒரு ரகஸியமான செய்தி பாஸ்கரனுக்கு இப்போது எட்டியதாம். உடனே அவர் இதை எனக்கு போன் செய்து என்னை பயப்படாமல் தைரியமாயிருக்கும்படியாயும் எச்சரித்தார். இந்த எதிர்பாராத பேரிடிபோன்ற விஷயம் என்னை ஏதோ செய்கிறது என்ன போதாத காலமோ, இப்படிப்பட்ட சோதனையும் வேதனையும் உண்டாகி வாட்டுகிறது! இத்தனைக்கும் காரணம் அந்தப்பாழும் பெண்கள் அங்குப்போனதுதான் விபரீதத்தில் முடிந்தது...

என்கிற இடிஇடிப்பது போன்ற விஷயத்தைக்கேட்ட லக்ஷ்மிக்கு கதிகலங்கிவிட்டது. இம்மாதிரி ஒரு சதிகாரக் கூட்டம் செய்யத் துணியும் என்று இவள் கனவுகூட காணவில்லையாதலால், "என்ன இது! கிணறுவெட்டப் பூதம் கிளம்புகிற மாதிரியல்லவா இருக்கிறது!" என்று தவித்தாள். ஏற்கெனவே இரண்டு விஷயங்களால் தவிக்கும் லக்ஷ்மி, மூன்றாவது அதிர்ச்சிகரமான இந்த விஷயத்தைக் கேட்டதும் ஸ்தம்பித்தாள். இருவரிடையேயும் சமாதி நிலையான மவுனமே குடிகொண்டது!

183185

[30-வது பக்கத் தொடர்ச்சி]

சங்கத்தின் கட்டிட நிதிக்காக ஸ்ரீமதி கமலா ரங்காசாரியாரும் ஸ்ரீமதி M. O. அலமேலா க்ருஷ்ணஸ்வாமியும் தையல் வகைமராக் களில் சில சாமான்களை நன்கொடையாக அளித்த பேருபகாரத் திற்கு எமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம். அந்த துணிகளை ப்ரத்யேகமாக வைத்து மிகவும் அக்கரையாக விற்பனை செய்து உதவிய ஸ்ரீமதி M. O. கமலா ஸ்ரீநிவாஸனுக்கும் விளையாட்டுப் போட்டிகளை மிக்க உத்ஸாகத்துடன் நடத்திய சகோதரிகளுக்கும் பலவிதத்திலும் ஓடியாடி உழைத்த சகல சகோதரிகளுக்கும் எங்களது மனமார்ந்த வந்தனங்கள்.

## ஒரு சில நற்சாட்சிகள்.

வருஷத்திற்கு வருஷம் இந்தச் சங்கத்தின் கண்கொள்ளாக் காட்சியாகிய எக்ஸிபிஷனை மிகச் சிறந்த முறையில் அபூர்வமான திறமையுடைய கைவேலைப்பாடுகளமைந்த சாமான்களைச் சேக ரித்து அத்புதமாய்நடத்துகிறீர்கள். இது மிகவும் போற்றக்கூடிய விஷயமாகும். —Dr. M. O. பார்த்தஸாரதி ஐயங்கார்.

பெரியபெரிய பப்ளிக் எக்ஸிபிஷன்கள் எல்லாம் இந்தச் சிறிய கட்டிடத்திற்குள் கலை குலுங்கும்படி அமைந்திருக்கும் அழ கிற்கு முன் என்ன செய்யும்? அங்கே லோலாக்கும் வளையலும் கடைத்தெருவையுந்தானே பார்க்கிறோம். இங்கோகலைக்குவியலைப் பார்க்கிறோம். —அழகாசாரியர், அட்வோகேட்.

மிகமிகக் கவர்ச்சியான பொருள்காட்சியைக் கண்டு பூரிக் கிறேன். நான் இத்தனை சிறப்பாக இருக்குமென்று எதிர்பார்க் கவேஇல்லை. எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து ரஸிக்கவைத்த தைத்தான் நான் பாராட்டுகிறேன். ஆசூரி சேஷாசாரி, அட்வோகேட்

ஒரு வருஷத்திற்கொருவருஷம் எக்ஸிபிஷன் அபாரமாய் ப்ரகாசிப்பதைப் பார்க்க கலைத்திறனும் பெண்களின் கைத்திற னும் அமோக சக்திவாய்ந்தது என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது; வெகு சிறப்பான காட்சி என்றால் மிகையாகாது. —M.O.அழகியசிங்காராசாரி.

கண்காட்சி என்றால் ஏதோ விளையாட்டுப் போக்காக இருக்கு மென்று நினைத்தேன். அடேயப்பா! அபாரமான சாமர்த்தியத்தை அள்ளிக்கொட்டும் பெருமையைப் பெற்றுள்ளதாகவன்றோ இருக் கிறது! மிகமிக அத்புதம்! க்ருஷ்ணஸ்வாமி.

விளையாட்டாக ஏதோ சாமான்களிருக்குமென்றுதான் எண்ணி னேன். அபாரமான கலைக்களஞ்சியமாக இருக்கிறது.—ஸ்ரீநிவாஸன்.

பலே ஜோரம்மா! இத்தனை பேர்களுடைய கைத்திறமைகளை எல்லாம்பார்ப்பவர்கள் ப்ரமிக்கும்படியானமுறையில்அழகுபடுத்தி வசீகரமாக வைத்திருப்பதே ஒரு தனிச்சிறப்பாக இருக்கிறது. நான் ப்ரதி வருஷமும் சங்கத்தின் கண்காட்சியைப் பார்த்துக் கொண்டு வருகிறேன். ஒவ்வொரு அம்சத்திலும் வெகு ஆர்வத் துடன் முன்னேற்றமடைந்து ப்ரகாசிக்கும்படி சிரமப்பட்டு— உழைத்து பொருள் காட்சியைத்தயார் செய்திருப்பதைக் காண ப்ரம்மானந்தமடைகிறேன். —ஓவிய நிபுணர் ராகவராவ்

மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. உதவாக்கரை என்று வீசிஎறியும் சோடா பாட்டில்களின் மூடிகளால் ஒரு மண்டபம் அமைத்திருப்பது என் மனத்தைக் கவர்கிறது. இப்படி ஒருவர் செய்தால் இனிமேல் பலர்பலவிதம் செய்வார்கள். —S.கோபாலன்

தற்போது கைவசமுள்ள

**வை.மு.கோ.**

### நாவல்கள்

K 1. வைதேகி ரூ. 4—8
7. கோபாலரத்னம் 1—4
11. வீரவஸந்தா 1—0
15. நளினசேகரன் 1—0
25. பக்ஷிமாலிகா 0—12
35. அனாதைப் பெண் 1—12
41. வானக்குயில் 2—0
42. உளுத்த இதயம் 0—8
43. மகிழ்ச்சி உதயம் 1—4
45. மாலதி 1—0
46. வத்ஸகுமார் 1—0
49. படகோட்டி 1—2
50. ஆத்ம சக்தி 2—0
51. உணர்ச்சி வெள்ளம் 2—8
52. சந்தோஷமலர் 2—0
53. கருணாலயம் 2—0
54. புகழ்மாலை 1—12
56. சுடர் விளக்கு 0—12
57. கலாநிலயம் 1—12
58. ஞான தீபம் 2—4
59. வாத்ஸல்யம் 2—0
60. க்ருபாமந்திர் 1—4
61. மதுரகீதம் 2—0
62. பிரார்த்தனை 1—0
64. மலர்ந்த இதழ் 2—8
65. அமுத மொழி (சாதா) 2—0
" (கிளேஸ்) 2—8
66. பிரதிக்ஞை 1—0
67. ஆசைப்ரவாகம் 2—0
69. அபராதி 1—2
70. வெளுத்த வானம் 2—0
71. ப்ரதிபலன் 1—8
72. பவித்திரப்பதுமை 1—8
73. பெண் தர்மம் 1—0
74. உண்மைச் சித்திரம் 1—0
75. தெய்வீக ஒளி 2—0
76. சிலாசாஸனம் 1—12
77. புதுமைக்கோயில் 1—4
78. மனத்தாமரை (மலிவு) 1—0
79. தபால்விநோதம் 1—0
80. ஓவியப்பரிசு 1—8
81. இனிய முரசு 1—0
82. ஆண்டவனின் அருள் 1—0
83. இசைப்புயல் 1—8
85. காலக்கண்ணாடி 1—8
86. ஜெயபேரிகை 1—8
87. ஜீவநாடி 2—0
88. வீராங்கனை 1—12
89. கானகலா 0—8
90. தூய உள்ளம் 0—8
91. ஸௌபாக்யவதி 0—8
92. ப்ரேமாச்ரமம் 0—12
93. நியாயமழை 0—12
94. அருணோதயம்* 0—12
95. மனச்சாட்சி 0—12
96. ப்ரபஞ்சலீலை 0—8
97. வெற்றிப் பரிசு 0—8
98. ரோஜாமலர் 0—8
99. இந்திரமோஹனா* 1—0
100. பாதாஞ்ஜலி 2—0
101. அமைதியின் அஸ்திவாரம் 1—12
102. நம்பிக்கைப் பாலம் 1—8
103. சாந்தியின் சிகரம் 4—0
104. கடமையின் எல்லை 1—12
105. குலதனம் 0—12
106. தைரிய லக்ஷ்மி 0—8
107. சுதந்தரப் பறவை 1—8
108. நிர்மல நீரோடை 3—0
109. குணக் குன்று (அச்சில்)
110. புனித பவனம் 2—0

*நாடகம்

### வை. மு. ஸ்ரீ. நூல்கள்

1. உதய சூரியன் 1—4
3. அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி 1—8
4. ராணி சீலாவதி 1—0
5. பெண்மணிக் கனல் 1—0
6. இருளில் ஒளி 1—4
6A. ஸ்ரீ ஸ்துதி 0—4
7. தியாகபலி 0—12

### வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1—0

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAI NAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26. Car St., Triplicane, Madras. 5.